
Annual Subscription Rs. 6 23rd May 1937. Price 2 As.

# ஸ்வதேசமித்திரன்

Vol. 8 வாரப்பதிப்பு No 16


## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



பிரயாண ஆரம்பம்.

எல்லாவற்றிற்கும் பின்னால் தோன்றியது
சகல வலி நிவாரணி
எல்லாவற்றிற்கும் முன்னால் நீற்பது




ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்

## வுட்வர்ட்ஸ்
## கிரைப்வாடர்

இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது

# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD & LTD., LONDON, ENGLAND




திருச்சி மலைக்கோட்டையின் தீபாலங்காரம்.

# அமராவதிச் சிலைகள்

"குறள்"

கிருஷ்ணா நதிக்கரையில் சிந்தபள்ளி என்ற ஊரில் வாசி ரெட்டி வெங்கடாத்திரி நாயுடு என்று ஒரு ஜமீன்தார் இருந்தார். அவர் தன்னுடைய ஊருக்குப் பக்கத்திலிருந்த அமரேசுவர சுவாமி கோவிலைப் புதுப்பித்து அதன் அருகே பல வீடுகளைக் கட்டிப் புதிய தெருக்களுக்கு அமராவதி என்ற பெயரைச் சூட்டினார். நாயுடு காரு கட்டடங்களைக் கட்டுவதற்கு அதிக சிரமம் எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால், சுற்றுப் பிரதேசத்தில் வெகு காலமுன் அழிந்துபோன ஆலயங்களின் செங்கற்கள் மலை மலையாகக் குவிந்துகிடந்தன. இலவசமாகக் கிடைக்கும் கற்களைக் கொண்டு ஒரு ஊர் அமைப்பது என்ன கஷ்டம்?

### நாயுடுகாருவின் யோகம்

ஒருநாள் திடீரென்று ஒரு செங்கற் குன்றைப்பற்றிய புதிய சமாசாரம் நாயுடுவின் காதுக்கு எட்டிற்று. "தீபாலு-தின்னை" (தீபங்களின் திண்ணை) என்ற ஒரு குன்றின் சரிவில் கூலி வேலை செய்து வந்த சில முஸ்லீம்கள் கூடியிருந்தனர். அகஸ்மாத்தாக அவர்கள் குடிசைகளுக்குப் பக்கத்தில் நிலத்தைத் தோண்டினார்கள். அதில் பல உருவங்களுள்ள வழவழப்பான நீண்ட மஞ்சள் நிறப்பாறைகள் வெளிப்பட்டன. இதைக் கேட்டவுடனே நாயுடுகாரு இங்கே ஓடி வந்தார். "ஓஹோ நமக்கு நல்ல யோகம்தான். இன்னும் இந்தக் குன்றின் உள்ளே என்ன இருக்கிறதோ பார்ப்போம்" என்று யோசித்துக்கொண்டு, தான் குன்று இருக்கும் இடத்தில் ஒரு குளத்தை வெட்டி நந்தவனமாக மாற்ற உத்தேசித்திருப்பதாகச் சொல்லி முஸ்லீம்களை வேறு இடத்துக்குப் போகும்படி உத்தரவிட்டார்.

ஆனால், ஜமீன்தாரின் குளமும் நந்தவனமும் பூர்த்தியாகவுமில்லை. அவருக்கு விலையுயர்ந்த புதையல் ஒன்றும் அகப்படவுமில்லை. இறக்கும்வரையில் அவர் தீபாலு திண்ணையைத் தோண்டிக்கொண்டே இருந்து கிடைத்த சலவைக் கற்பாளங்களைப் பலவிதமாக உபயோகித்தார். சிற்பித்த பாளங்களால் ஊருக்குக் கிழக்கேயுள்ள சிவகங்கை குளத்தின் படிகளைப் புதுப்பித்தார். அமரேசுவராலயத்தின் கோபுரங்களையும் மதில்களையும் செப்பனிட்டார். குன்றுக்கு மேற்கே ஒரு பெரிய கிணற்றின் பாம்பேறிக் கட்டடத்திற்கு உபயோகித்தார். அநேக சிற்பங்களை சுண்ணாம்புக் காளவாயில் போட்டுச் சுட்டுச் சுண்ணாம்பாக்கினார். நாயுடுவின் அநுமதியின்பேரில் இன்னும் அநேகம் சொந்த வீடுகளுக்கும் மசூதிகளுக்கும் தூக்கிச் செல்லப்பட்டன.

### சாப விமோசனம்

இப்படி பண்டைக் காலத்தின் ஒரு பௌத்த ஸ்தூபம் எவ்விதமெல்லாம் நாசமாக்கக் கூடுமோ, அவ்விதம் நாசமடைந்தும் ஸ்தூபக்குன்று முழுவதும் அழியவில்லை. சுமார் 150 வருஷங்களுக்கு முன் வாசி ரெட்டி வெங்கடாத்திரி நாயுடுகாருக்குப் பின் மிஞ்சிய சலவைக் கற் சிற்பங்களே உலகத்துக்கு வெளியாயின. கர்னல் காலின் மெக்கன்ஸி என்பவர் (1817) ஸ்தூபக்குன்று அழிவுற்ற செய்தியை முதன்முதலில் அறிந்து இங்கே வந்தார். இவர் காலத்திலிருந்து இன்றுவரையில் ஐரோப்பிய அறிஞர்கள் இச்சிற்பங்களின் விசேஷங்களை உலகுக்கு வெளியிட முயன்று வருகின்றனர். மெக்கென்ஸி தான் கண்ட 97 சிற்பங்களைச் சித்திரம் வரைந்து சித்திரங்களையும் சில சிற்பங்களையும் லண்டனுக்கும், கல்கத்தாவுக்கும், சென்னைக்கும் அனுப்பிவைத்தார். ஆனால் இவர் சமயத்தில் ஸ்தூபக் கட்டடங்கள் என்ன என்றுகூட ஒருவருக்கும் தெரியாது. 1830-ல் மசூலிப்பட்டணத்தில் கலெக்டராயிருந்த ராபர்ட்ஸன் சுமார் 33 சிற்பங்களை மசூலிப்பட்டணத்துக்கு எடுத்துச் சென்று புதிய கடைத் தெருவின் மத்தியில் வைத்தார். டாக்டர் பென்ஸா என்பவர் இவைகளை 1835-ல் பார்த்துவிட்டு இவ்வாறு எழுதியிருக்கிறார்:—

"நான் இந்தியாவில் செய்த யாத்திரைகளில் இவைகளைவிட அழகாயும் நுட்பமாயும் புராதனமாயும் உள்ள சிற்பங்களைப் பார்க்கவில்லை. மகாபலிபுரத்தின் முரட்டுப் பாறையைப்போலல்லாமல் இந்த வெள்ளைக்கல் மிகவும்மிருதுவாயிருப்பதால் மெல்லிய உருவங்களைச் செதுக்குவது சாத்தியமாயிற்று. உருவங்களெல்லாம் அவயவ சாஸ்திரத்தை அனுசரித்தவை. உறுப்புக்களின் நிலையிலும் உட்கருத்திலும் இயற்கைத் தோற்றம் புலப்படுகிறது. இத்தொழிலில் சுதந்திர உணர்ச்சி இருக்கிறது. ஸிஸிலியின கியாதிபெற்ற காகினோ என்ற சிற்பிகூட இவைகளைத் தன்னுடையவை என்று பெருமையாகக் கூறிக்கொள்ளுவான். இங்கே விஜயம் செய்த மேன்மை தங்கிய கவர்னர் (ஸர் பிரெடரிக் ஆடம்) இவைகளையெல்லாம் ஒரு முக்கியமான இடத்தில் ஜாக்கிரதையாக வைக்கும்படி உத்தரவிட்டார்."

### 'ராமேசுவரத்திலும் சனீசுவரன்'

ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஸர் வால்டர் இலியட் என்பவர் அமராவதிக்குச் சென்று 90 சிற்பங்களைச் சென்னைக்கு அனுப்பினார். இவை மியூஸியத்தின் முன் பதினைந்து வருஷகாலம் மழையிலும்வெயிலிலும் அடிபட்டுக் கடைசியில் சீமைக்கப்பலின் மீது ஏற்றப்பட்டன. அங்கும் சில வருஷம் கவனிப்பாரில்லாமல் ஒரு பங்களாவின் லாயக் குப்பைகளின் நடுவில் கிடந்தன. பிரசித்த ஆசிரியர் பெர்குஸன் இவைகளைக் கண்டெடுத்துப் பிரிட்டிஷ் மியூஸியத்துக்கும் பாரிஸ் மியூஸியத்துக்கும் அனுப்பிவைத்தார். அன்றியும் அவர் இச்சிற்பங்களின் விசேஷத்தைத் தனது ஒரு பெரிய நூலின் (விருஷசர்ப்பங்களின் வழிபாடு) பதிப்புத்தகத்தில் வருணித்ததுடன் இவை பௌத்தக் கதைகளை விளக்குவன என்ற உண்மையையும் முதன் முதலில் எடுத்துரைத்தார்.

### புளுகுக் கோட்டை

இதற்கு இடையில் சென்னையில் இச்சிற்பங்களைப்பற்றி ஒரு ஹாஸ்ய நிகழ்ச்சி நடந்தது. ரெவரெண்ட டெய்லர் என்பவரைக் கவர்ன்மெண்டார் இவைகளின் வரலாற்றையும் இவைகளின்மீதுள்ள சிலா சாஸனங்களின் பொருளையும் விவரமாக எழுதும்படிகேட்டனர். ரெவரெண்ட் துரைக்குச் சரித்திர ஞானமாவது பாலி பாஷைப் பரிச்சயமாவது சுத்தமாக இல்லை. அவர் தன்னுடைய கற்பனாசக்தியை நன்றாக உபயோகித்து ஒரு பெரிய புளுகுக் கட்டுரையை வெளியிட்டார். இச்சிற்பங்களை நாநூறு வருஷங்களுக்கு முந்திய வைஷ்ணவர்கள செய்வித்தார்கள் என்பது அவரது அபிப்பிராயம்!

### ஸ்தூபத்தின் முடிவு

தீபாலு திண்ணையின் சிற்பங்கள் மெக்கென்ஸி, ராபர்ட்ஸன், இலியட் முதலியவர்கள் தோண்டியதற்குப் பின்னும் முடிவதாக இல்லை. ஊருக்கு யாராவது ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் வந்தால், கிராமத்தார் ஒன்று இரண்டு சிற்பங்களைத் தோண்டி எடுத்து அவர்களுக்குக் காட்டிவிட்டுப் போவது வழக்கம். பிறகு மாடு மேய்ப்பவர்களும் சோம்பேறிகளும் சிற்பங்களை அடித்து உடைத்து விளையாடிக்கொண்டிருப்பார்கள். எனவே, கவர்னர் பக்கிங்காம் என்பவரின் வேண்டுகோளின்படி, 1877-ல் ராபர்ட் ஸிவலும் 1880-ல் ஜாஸ்பர்ஜஸும் ஸ்தூபக்காடு முழுவதையும் முறையாகப் பரிசோதித்துப் பார்த்தனர். கடைசியாக 170 சிற்பங்கள் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, அவை இப்பொழுது சென்னை மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

### என் அமராவதி?

ஆசிரியர்கள் இச் சிற்பங்களை "அமராவதிச் சிற்பங்கள்" என்று அழைப்பதில் ஒரு விசேஷம் உண்டு. எது ஸ்தூபத்தின் அழிவுக்குக் காரணமாயிருந்ததோ, அதன் பெயரையே ஸ்தூபச் சின்னங்களுக்குச் சூட்டுவது எவ்வளவு பரிதாபமானது? ஸ்தூபத்தின் உண்மைப் பெயரும் சரித்திர ரகஸியங்களும் இதுவரையில் வெளிவரவில்லை. சென்னை மியூஸியச் சிற்பங்களின் பக்கத்திலுள்ள விளம்பரத்தில் இவ்வாறு படிக்கிறோம்:—

"அமராவதி என்ற நகரம் (?) 2100 வருஷங்களுக்கு முன்பு இருந்ததென்று சொல்லக்கூடும். அப்பொழுது அசோகன் தென்னாட்டுக்கு அனுப்பிய மதப் பிரசாரகர்கள் இங்கே வந்திருக்கலாம். கி. பி. முதல் நூற்றாண்டின் கடைசியிலோ அல்லது அதற்குச் சற்று முன்போ இது தானிய கடகம் என்ற பெயருடன் ஆந்திர ராஜதானியாய் இருந்தது."

ஸ்தூபம் கி. பி. 150-ல் நிச்சயமாக இருந்ததற்கு வாசிஷ்டி புத்ர புலமாயி என்ற ஆந்திர ராஜனைக் குறிக்கும் ஒரு ஸ்தூபக் கல்வெட்டில் ஆதாரம் இருக்கிறது. ஏறக்குறைய இதே காலத்தில் மகாயான சாகைக்குக் காரணமாயிருந்த நாகார்ச்சுனன் என்ற ஆசாரியன் தக்ஷிணத்தில் பிரயாணம் செய்து தானிய கடகத்தின் ஸ்தூபத்துக்கு ஒரு கல் மதிலைச் செய்வித்தான் என்று ஒரு திபேத்திய நூல் அறிவிக்கிறது. ஆனால் ஸ்தூபத்தின் உள் கட்டடம் மட்டும் இதற்கு முன்பு இருந்திருக்க வேண்டும் என்று இதன் சிற்ப லக்ஷணங்களிலிருந்தும் சாஸன எழுத்துக்களின் போக்கிலிருந்தும் ஆசிரியர்கள் அனுமானிக்கின்றனர். ஏழாம் நூற்றாண்டில் ஹியூங் ஸங் என்ற சீன யாத்திரிகன் இந்தப் பிரதேசத்தில் ஒப்பற்ற அழகுடைய ஸங்கராமம் ஒன்று நிர்மானுஷ்யமாக இருப்பதாக எழுதியிருக்கிறான். ஹியூங்ஸங் இந்த ஸ்தூபத்தையே குறிப்பிடுவதாகக் கருதுகின்றனர். ஸ்தூபத்தின் நிர்மாண காலம் மியூஸிய விளக்கத்தின்படி வருமாறு:—

கி. மு:—200—ஸ்தூபத்தின் உள் கட்டடம்.

கி. மு:—100—கி. பி.–100—உள் கட்டடத்தை மூடியிருந்த சிற்பங்கள்.

கி. பி:—150—250—ஸ்தூபத்தைச் சுற்றிலும் பிரதக்ஷி

ணப் பாதையும் சிற்பித்த கல் மதில்களும்.

வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி

அமராவதிச் சிற்பங்கள் கலையுலகத்தில் மிகவும் சிரேஷ்டமானவை. அரையடி அகலமான சலவைக் கல்லில்கூட ஒரு பௌத்தக் கதையை விளக்கும் சிற்பம் இருக்கும். தந்தவேலையைப்போலுள்ள இதன் தொழிலைக் கவனித்து, இத்துடன் ஸ்தூபத்தின் அளவுகளையும் யோசித்துப் பார்த்து ஆசிரியர்கள் மலைத்துப்போகின்றனர். வின்ஸண்ட் ஸ்மித் என்பவர் மனப்பூர்வமாக நமது பொருள்களைக் கொண்டாடுவது மிகவும் துர்லபம். ஆனால், அவர் ஸ்தூபத்தின் சிற்ப வேலையைப்பற்றி இப்படி எழுதியிருப்பது வசிஷ்டர் வாயால்பிரும்மரிஷி என்று வந்ததுபோலிருக்கிறது:—

"இவ்வேலியின் ஒவ்வொரு பாகமும்—அதாவது ஏறக்குறைய 16,800 சதுர அடி விஸ்தீரணமுள்ள இடமெல்லாம்—(600'×2'×14') —சிற்பங்களால் மூடப்பட்டது. புதிதாயும், சம்பூரணமாயும் இருந்தபொழுது இந்த ஸ்தூபம் உலகெங்கும் இல்லாத அபூர்வத் தோற்றத்தை உண்டாக்கியிருக்கவேண்டும். ஒரு அங்குல இடத்தைக்கூட அலங்காரம் செய்யாமல் விடாத இந்தியச் சித்திர வழக்கம் எவ்வளவு தீவிரமாகத் தூஷிக்கப்பட்டாலும், வெண்மையான சலவைக் கல்லாலான இந்தச்சிற்ப சமுத்திரமானது பகலில் இந்தியச் சூரியனது கிரணங்களில் பிரகாசிப்பதும் இரவில் ஸ்தூப உச்சியின்மீது வைத்துள்ள நூற்றுக் கணக்கான விளக்குகளின் ஒளியில் ஜ்வலிப்பதும் ஒப்பற்ற வைபவக் காட்சியை அளித்திருக்கும். ஆதியில் அமராவதிச் சிற்பங்கள் வர்ணங்கள் தீட்டப்பெற்று விளங்கின என்று ஹெவல் நம்புவது உண்மையாய் இருக்கலாம். இதற்காக அவர் இவைகளை "ஓவியச் சிற்பங்கள்" என்று அழைக்க வேண்டும் என்பதும் முறையாக இருக்கலாம். வர்ணந்தீட்டியதானாலும் தீட்டாததானாலும், ஸ்தூபம் க்ஷேமமாக இருந்த காலத்தில், கலைத்திறமையின் மகா சிரேஷ்டமான காட்சி உலக சரித்திரத்தில் இதைத் தவிர வேறு இருந்திருக்காது."


வின்ஸண்ட் ஸ்மித்தே இப்படிச் சொல்லும்பொழுது நாம் மற்றவர்களைக் கேட்பானேன். இருந்தாலும் ஆநந்த குமாரசுவாமி அவர்கள் வரைவது நோக்கத்தக்கது:—

"நிறைந்த அழகுக்கும், தொழிற்றிறமைக்கும் நாம் அமராவதிச் சிலைகளை எவ்வளவு புகழ்ந்தாலும், அது எப்பொழுதும் அதிகமாகாது. இவைகளோ, இந்தியச் சிற்பத்தின் இனிய மென்மலர்கள். இவைகளின் உல்லாஸத்தையும் நாகரிகத்தையும் கவனித்தால், ஆபுவின் அலங்காரப் பூவேலை கூட கல் கொத்துபவனுடைய வெறுங்கைத் தொழில்தான் என்று தோன்றும்."

பௌத்த மதக் கதைகளை மனதிற் பதியும்படி அறிவிப்பதில் அமராவதிச் சிற்பங்களே முதன்மையானவை என்றும் ஸாஞ்சிச் சிற்பங்களையும் அஜந்தாச் சித்திரங்களையும்விட இவைகளே சம்பூர்ணமானவை என்றும் பெர்குஸன் சொல்லியிருக்கிறார். ஆயிரத்தநூறு வருஷங்களுக்கு முன் பௌத்தக் கதைகளை நன்கு அறிந்திருந்த ஆந்திர ஜனங்கள் கூட்டங் கூட்டமாகச் சிற்பங்களைச் சுற்றி வளைந்து கொண்டு எவ்வளவு ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்? பிரதக்ஷிணப் பாதையிலிருந்து அடிக்கடி, "இதோ, போதிஸத்துவர் மாயாதேவியின் கனவில் வருகிறார். இதில் சாக்கியமுனிபிறப்பு. இங்கே அரண்மனையை விட்டுப் போகிறார். இவ்விடத்தில் மாறன் அவருக்குத் துர்ப்போதனை செய்வது, இங்கு சத்தந்த ஜாதகம்" என்ற மொழிகள் எதிரொலிக்கும்.

சென்னை மியூஸியத்தின் மத்தியில் ஒரு சிறிய ஸ்தூபம் போன்ற வெகு நேர்த்தியான உருவம் இருக்கிறது. சென்னை சிற்பங்களுள் முழுசாகவும் அழகிற் சிறந்ததாகவும் இருப்பது இதுவே. இதிலிருந்தே ஒரு உண்மையான ஸ்தூபம் எப்படி இருந்தது என்று அறியலாம். பிரதக்ஷிணப்பாதைக்கு சித்திரித்த வேலி போடப்பட்டிருக்கிறது. ஸ்தூப உருவத்தின்மீது வரிசையாக புத்தரின் ஜீவிய சரித்திரக் காட்சிகள் வெகு நுட்பமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இனி சிறந்த தனிச் சிற்பங்களின் சில உதாரணங்களைப்பற்றிக் குறிப்போம்.

சில இடங்களில் ஒரு யானை விமானத்தில் வருவதுபோல் இருக்கிறதே அது என்ன? புத்தராக அவதரிக்கப்போகும் போதிஸத்துவர் துஷிதம் என்ற சுவர்க்கத்தில் ஆட்சி செய்து வந்தார். பூலோகத்தில் சாக்கியரது கபில வஸ்து நகரில் நடுவேனில் விழா நடந்து வந்தது. சுத்தோதனரின் ராணி மகா மாயை ஏழு நாள் நோன்பு நோற்றுச் சுத்தமாக இருந்தாள். அப்பொழுது (லலிதவிஸ்தரம் என்ற ஸம்ஸ்கிருத பௌத்த நூலின்படி) ஆகாயத்தில் நூற்றுக்கணக்கான வாத்தியங்கள் முழங்கின. நூற்றுக்கணக்கான அப்ஸர மாதர்கள் ஆனந்த ஆரவாரம் செய்து கொண்டு போதிஸத்துவ

"என் குழந்தை என் இப்படிப் படுத்துகிறது?"

வலுவற்ற குழந்தைகளுக்கு வலுவூட்டவேண்டும்... டாக்டர்கள் சிபார்சு செய்யும் சிகிச்சை இதுதான்

குழந்தை எப்பொழுது பார்த்தாலும் அழுதுகொண்டேயிருந்தால் அதன் தேக நிலை சரியாயில்லை என்றுதான் அர்த்தம். பிடிவாதத்திற்கும், கோபத்திற்கும் இதுவே காரணமென டாக்டர்கள் சொல்கிறார்கள். குழந்தையின் ஆகாரத்தில் சத்துக்களில்லை. இவற்றை உடனே சப்ளை செய்யவேண்டும்.

இந்தத் துறையில் நீண்டகாலமாகப் பிரஸித்தி பெற்றது ஸ்காட்ஸ் எமல்ஷன்

பூராவும் பலவிருத்தி

ஸ்காட்ஸ் எமல்ஷன் பூராவும் பலவிருத்தி யூட்டுவது. சாதாரண காட்லிவர் ஆயிலையும், இதர விட்டமின் Dக்களையும சாப்பிட்டால் அதிகப்படியான கால்ஸியம் முதலியவற்றையும் உட்கொள்ளவேண்டும். பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, ஸ்காட்ஸ் எமல்ஷன் சிறந்த பலவிருத்தி ஔஷதம்; நோய்க்குப் பிறகு ஏற்படும் எல்லாவிதமான பலவீனத்திற்கும், இருமல் ஜலதோஷம், இன்புளுவென்சா முதலியவாதிற்கும் இது சிறந்த பாதுகாப்பாகும்; 60 வருஷ புகழ்பெற்றது.

பெற்றோர்களுக்கு சில குறிப்புகள்:—

எலும்புக்கு வலுவூட்டும் ஸ்காட்ஸ் எமல்ஷன்

—வெண்ணெய் அல்லது சுத்தப் பாலை விட 80 மடங்கு அதிகப் பலனளிப்பது.

—முட்டையைவிட இருமடங்கு அதிகப் பலன் தருவது.

தேக வளர்ச்சிக்கு,

—வெண்ணெயைவிட 8 பங்கு அதிகப் பலன் தருவது.

—அன்னாசிப் பழத்தைவிட 100 பங்கு பலன்.



SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா
பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம்.
ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - கராச்சி - அமிருதசரஸ்

(S30)

னைத் துதித்தனர். நூற்றுக் கணக்கான தேவர்கள் தங்கள் கைகளினாலும், தோள்களினாலும் தூக்கிக்கொண்டு வந்த விசித்திர விமானத்திலிருந்து போதிஸத்துவர் ஆறு தந்தங்களையுடைய ஒரு அழகிய யானையின் வடிவமாக இறங்கி மாயாதேவியின் உடலில் புகுந்தார். சிற்பம் விளக்குவது இக் காட்சியே.

ஸித்தார்த்தர் ஜனனமாவதற்கு முன் மாயாதேவியின் சயனக் கிருகக்காட்சி எளிதில் அறியக்கூடியது. மாயாதேவி கட்டிலின்மீது படுத்துக் கொண்டிருக்கிறாள். கீழே நான்கு தாதிகள் இருக்கிறார்கள். நான்கு மூலைகளிலும் வைசிரவணன், விருபாக்ஷன், திருதராஷ்டிரன், விருதகன் என்ற திக்குபாலர்கள் நிற்கிறார்கள்.

ஒரு சிற்பத்தில் ஸித்தார்த்தர் கபிலவஸ்து நகரைவிட்டுச் சென்றபின் அரண்மனையிருந்த நிலை நன்றாகக் காட்டப்படுகிறது. அரண்மனையின் உள்ளும் புறமும் சோகரஸம் ததும்புகிறது. உத்தியான வனத்தில் ஸித்தார்த்தரின் யௌவன பத்தினி யசோதரை ஒருவராலும் தேற்ற முடியாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். தாதிகளில் சிலர் வாத்தியங்கள் வாசிக்கிறார்கள். சிலர் பாடுகிறார்கள். மற்றும் சிலர் சிற்றுண்டிகள் கொண்டு வருகிறார்கள். ஆனால் யசோதரையின் துக்கம் மாறுவதாக இல்லை.

மற்றொன்றில் ஸித்தார்த்தர் ஞானம் பெற்றுப் புத்தரானபின், சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துகொண்டு புன்சிரிப்புடன் வீற்றிருக்கிறார். இவர் சாக்கிய முனியல்ல; ஸித்தார்த்தராகப் பிறப்பதற்கு முன் போதிஸத்துவர் துஷித லோகத்தில் உச்சதுவஜம் என்கிற மாளிகையில் தேவர்களின் மத்தியில் இருப்பதாகச் சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். ஒரு சிறிய சிற்பத்தில் புத்தர் தன் மனைவியையும் புத்திரனையும் சந்திப்பதைப் பார்க்கிறோம்.

### மணவலிமையும் மிருக வலிமையும்.

சென்னைச் சிற்பங்களுள் மிகவும் சாதுரியமானது புத்தர் நளகிரி என்ற மதயானையின் செருக்கை அடக்கும் காட்சியே என்று கூறவேண்டும். சாக்கிய முனியின் சுற்றத்தானான தேவதத்தன் ராஜக்கிருக நகரில் அவரைக் கொல்லும்பொருட்டு இந்த யானையை ஏவினான். சிற்பத்தின் இடது பாகத்தில் கோட்டையிலிருந்து வெறிபிடித்த யானை தெருக்கூட்டத்தின் நடுவில் மேலே நோக்கிக்கொண்டு பாய்கிறது. வழிப்போக்கர்கள் சிலர் கீழே விழுந்து மிதிபடுகிறார்கள். ஒரு பெண்ணும் சிலரும் நடுங்கிக்கொண்டு ஓடுகிறார்கள். பாகனே பின்புறம் நழுவி விழுந்து விடுகிறான். மேலே மாளிகைகளின் ஜன்னல்களின் வழியாகச் சில மாதர்கள் தெருவின் சம்பவத்தைக் கவலையுடன் நோக்குகிறார்கள். இங்கே யானையின் குரூரத் தன்மை அதன் நிலையிலிருந்தும் துதிக்கையால் ஒரு மனிதனது காலைப் பற்றிக் கொண்டிருப்பதிலிருந்தும் விளங்குகிறது. அடுத்த பாகத்தில் புத்தரைப் பார்த்த உடனே இதே மூர்க்க மிருகம் மிகவும் வணக்கமாகத் தலை குனிந்து அவரது பாதத்தில் மத்தகத்தை வைத்துப் பணிகிறது. மதயானையைக் கண்டவுடன் அநந்தன் என்ற சிஷ்யனைத் தவிர மற்றெல்லாச் சிஷ்யர்களும் பஞ்சாய்ப் பறந்தார்கள் என்று கதை கூறுகிறது. ஆனால், சிற்பத்தில் புத்தருக்குப் பின் இரண்டு பிக்ஷுக்கள் அஞ்சலி செய்துகொண்டு நிற்கிறார்கள். ஒருவேளை யானை சாந்தமடைந்ததும் அபாயமில்லை என்று தெரிந்துகொண்டு அந்த இரண்டாவது துறவி திரும்பி வந்திருக்கலாம். இங்கே ஒரு ஹாஸ்ய அம்சமும் உண்டு. நளகிரி புத்தருக்கெதிரில் வந்து சாய்ந்ததும் "வெண்ணெய் வெட்டி சிப்பாய்" ஒருவன் கையை உயரத் தூக்கிக்கொண்டு வெகுவேகமாய் யானையின் முதுகுப் பக்கம் ஓடிவந்து அதை விரட்டுகிறான்!

### பிறப்பே இறப்பு

புத்தர் எண்பதாவது வயதில் குசிநகரத்தில் தேகவியோக மடைந்து தகனம் செய்யப்பட்டார். அவரது சாம்பலையும், எலும்புத் துண்டுகளையும், அவர் உபயோகித்த வஸ்துக்களையும் பலநாட்டுப் பௌத்தப் பிரமுகர்கள் பாகம் செய்துகொண்டு சென்றார்கள். அப்பொழுது புத்தர் கடைசியாகக் கூறிய வார்த்தைகளை ("என் அன்பர்களே உயிரை உண்டாக்குவதே கேட்டையும் இறப்பையும் விளைவிக்கிறது. நீங்கள் இந்த உண்மையை எப்பொழுதும் மறக்காதீர்கள்") நினைத்துக் கொண்டு குசிநகரத்து பிக்ஷுணிகள் ஆநந்தக் கூத்தாடினார்கள். கோட்டையிலிருந்து ஏழு யானைகள் விரைந்து புறப்படுகின்றன. ஒவ்வொன்றின் மீதும் புத்தசின்னங்கள் வைத்துள்ள ஸம்புடங்களைப் பார்க்கிறோம். கோட்டைக்குள் ஒரு மண்டபத்தில் சபை ஒன்று கூடியிருக்கிறது. இதன் கீழே பிக்ஷுணிகள் இருக்கிறார்கள்.

புத்தருடைய பொருள்களில், அவர் பிக்ஷைப்பாத்திரம் மட்டும் துஷிதலோகத்துக்கு ஆகாய மார்க்கமாகக் கொண்டு போகப்பட்டு அதை அங்கே தேவர்கள் பூஜித்தார்கள். தேவர்களும் அப்ஸரமாதர்களும் நிறைந்துள்ள ஒரு சிற்பத்தில் பாத்திரம் மேலுலகத்திற்குப் போவது காட்டப்படுகிறது. புத்தரது ஜீவிய சரித்திரத்தைத் தவிர போதிஸத்துவரின் முப்பிறப்புக் கதைகளும் (உதாரணமாக சத்தந்த சிபி ஜாதகங்கள்) போதிமரம், தர்ம சக்கரம், புத்தபாதம் முதலியவைகளை ஜனங்கள் வழிபடுவதும் சிற்பித்துக் காட்டப்படுகின்றன.

### கிரேக்கப் பல்லவி

எப்பொழுதும் போலவே அமராவதித்தொழிலும் கிரேக்கக் கலையால் பாதிக்கப்பட்டது என்ற பல்லவியைப் பாடும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஸ்தூபச் சிற்பிகள் கிரேக்கச் சிற்பங்களை அறிந்திருந்தாலும் இது இவர்களுடைய சொந்தவேலைதான் என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். நமது ஸ்தூபத்தின் பெரிய விசேஷம் என்னவென்றால், இது கட்டப்பட்ட காலத்தில் இந்தப் பிரதேசத்திலிருந்து பௌத்தர்கள் கடல் மார்க்கமாகத் தென்கிழக்குக் கண்டத்திற்குப் புறப்பட்டுச் சாவகம் முதலிய நாடுகளில் குடியேறி போரோபுதர் போன்ற சிற்பப் பூங்காவனங்களைச் செய்வித்தார்கள்.

* * * *


இந்தியா கவர்ன்மேண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மேண்டு இந்திய வைத்திய கவரிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மேண்டு வைத்திய கலாசாலை & I. . . S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(Sastriar in Govt. Medical dress)

**மஹா பில்வாதி லேகியம்**

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

அழகு, குணம், ருசி, வாசனை, இவைகளை அளிப்பதில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் மேலானது. சென்னை ஹைகோர்ட்டில் உரிமைப் பெற்றது.

டப்பி 1-க்கு 0-2-9. ஒருடஜன் கொண்ட பெட்டி 1-க்கு 1-14-0. ஆனந்த பற்பசை ட்யூப் 1-க்கு அணா 8. வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

கனம் ஸர் கே. வி. ரெட்டி நாயுடுகாரு, K. C. I. E. சென்னை கவர்ன்மேண்டு மந்திரிகளின் தலைவர் & மாஜி கவர்னர் அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால் தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்திற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவர் நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானாக இருக்கிறார். இவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்றாய்ப் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அப்பேர்க்கொத்த இவருடைய மருந்துகளை நான் உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் வீரியமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.
சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்



## சிறந்த கூந்தல் ஆகாரம்

தேகத்திற்கு நல்லுணவு அவசியமல்லவா? அதுபோல் கூந்தலுக்கும் நல்ல ஆகாரம் அவசியம். எனவே உலகப் புகழ் வாய்ந்த

**காமினியா ஆயில்**

(ரிஜிஸ்டர்ட்)

உபயோகியுங்கள்.



கூந்தலை வளர்க்கக்கூடிய பல மூலிகைகளாலானது. பொடுகைப்போக்கி, தலைமயிர் உதிர்வதைத் தடுக்கும். மூளைக்குக் குளிர்ச்சி தரும். துல்லிய மணம். விலை புட்டி 1-க்கு ரூ. 1; 3 புட்டிகள் ரூ. 2-10. வி. பி. செலவு தனி. தபால் செலவுக்காக ½ அணா ஸ்டாம்பனுப்பினால் சாம்பில் கிடைக்கும். மொத்த ஏஜண்டுகள்:

The Anglo Indian Drug & Chemical Co , BOMBAY,



மாஜிஸ்திரேட்:—நீ வாதி தோட்டத்திலிருந்து 50 மாங்காய் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறாய். அதற்காக இரண்டு ரூபாய் அபராதம் விதிக்கிறேன்.

உடனே எதிரி நான்கு ரூபாயைக் கொடுத்துவிட்டு, "அடுத்த வாரமும் திருட்டு நடைபெறும். அதற்காக இரண்டு ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

* * * *

வீட்டில் உண்டிப் பெட்டி வைப்பதினால் பிள்ளைகள் லோபிக் குணத்தைக் கொள்கின்றனர் என்று ஒரு கல்வி அதிகாரி கூறுகிறார்.

அது அவர்கள் திருடுவதற்கும் காரணமாகிறதென்று ஒரு தகப்பனார் கூறுகிறார்.

* * * *

ஒருவர் தம் நண்பரைப் பார்க்க அவர் வீட்டுக்குச் சென்றார். சமையலறையில் நண்பர் ஏதோ செய்து கொண்டிருந்தார்.

"வீட்டு வேலையைக் கவனிக்க யாராவது இருப்பார்களென்றல்லவா நினைத்தேன்."

"என் மனைவி இருக்கிறாள். ஆனால் இன்னும் எழுந்திருக்கவில்லை."

* * * *

மாமன்:—நீ பெரியவனானால் என்ன செய்யப் போகிறாய்?

மருமான்:—நான் நங்க பர்வத மேற முயற்சிக்கப் போகிறேன். சரி இரண்டணாக் கொடுங்கள், மாமா.

"எதற்காக?"

"நங்க பர்வதத்தில் குளிர் அதிகமல்லவா? ஆகையால் இரண்டணாவுக்கு ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட்டுக் குளிர்ச்சி எவ்வளவு தாங்க முடிகிறது என்று பார்க்க வேண்டும்."

* * * *

"எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும். எங்கு கிடைக்குமென்று தெரியவில்லை"

அவன் நண்பன்:—என்னிடம் கிடைக்குமென்று நீ முன்னாலேயே நினைக்காதது பற்றி எனக்குச் சந்தோஷம்தான்

* * * *

வீட்டுச் சொந்தக்காரர் குடித்தனக்காரருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்:—

என்னுடைய வீட்டு வாடகை சென்ற நான்கு மாத காலமாகக் கொடுபடாமலிருக்கிறது. உடனே பணத்தை அனுப்பவும்.

குடித்தனக்காரரிடமிருந்து பின்கண்டபடிப் பதில் வந்தது:—உங்களுடைய வாடகையை நான் கொடுக்க வேண்டிய காரணம் என்னவென்று தெரியவில்லை. என் வீட்டு வாடகையையே என்னால் கொடுக்க முடியவில்லை!

* * * *

ஒரு சிறை விஸிட்டர் சிறையைப் பார்வையிட்டுவந்த ஒருவாரத்திற்குப் பிறகு அவர் வீட்டில் இரவில் ஒருவன் காணப்பட்டான்.

சிறைவிஸிட்டர் (அவனைப் பார்த்தவுடன்):—உன்னை நான் சென்ற வாரம் சிறையில் பார்க்கவில்லை?

திருடன்:—ஆமாம், நீங்கள் சிரமப்பட்டு என்னைச் சிறையில் வந்து பார்த்தீர்களே யென்று இப்பொழுது உங்களை வீட்டில் காணவந்தேன்.

* * * *

மனைவி(அடுத்த வீட்டுக்காரியிடம்):—என் கணவர் மிகவும் லோபியாகவிருக்கிறார்.

"என்?"

"குழந்தை உண்டிப் பெட்டியில் மூன்று ரூபாய் சேர்ந்திருந்தது. நான் ஒரு ரவிக்கை வாங்கிக்கொள்ளலாமென்றிருந்தேன். அதை அவர் எடுத்துக் கொண்டுபோய்விட்டார்.

* * * *

சிறுவன் ஒரு ரூபாய் வைத்துக்கொண்டிருந்தான். தகப்பனாருக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

"உனக்கு எதடா ஒரு ரூபாய்?"

"நான் ஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்தேன். அவர் ஒரு ரூபாய் கொடுத்தார்."

"நீ சொல்வது பொய். நான் ஸ்தோத்ரம் செய்தால் கிடைக்குமா?"

"கிடைக்கும்."

தகப்பனார் ஸ்தோத்திரம் செய்து பணம் கிடைக்காது போகவே, சிறுவனை மறுபடி விசாரித்தார்.

சிறுவன்:—ஸ்வாமி எனக்கு ஒரு ரூபாய் கொடு என்று ஸ்தோத்ரம் செய்தால் கிடைக்காது. என்னை ஒரு ரூபாய் கொண்டுவா அனுப்பு என்று ஸ்தோத்ரம் செய்தால்கிடைக்கும்.

* * * *


## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

**ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,**
திருத்தணி, S. இந்தியா.

**சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்**

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனாம்

**ச. கோ. இ. காதர்மீரா சாயபு,**
**ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.**

கொடிய மூத்திர ரோகங்களுக்கு

**சந்திராம்ருதம்**

வெள்ளை (வெட்டை) கொடிய நோய்க்குச் சிறந்த சிகிச்சை. இதை உடனே தக்க மருந்தால் கண்டிக்காவிடில், பிறகு பற்பல நோய்களாய் மாறிவிடும். இம்மருந்து இருபத்தைந்து வருட அனுபவத்தின்மேல் தயார் செய்யப்பட்டுள்ளது. டாக்டர்களும், வைத்தியர்களும் உபயோகித்து அதன் அற்புத குணத்தைக் கண்டு புகழ்ந்து வருகிறார்கள். 7 நாள் மருந்து ரூ. 2-8-0. (மாத்திரைகள்.)

**அமிர்தம் அண்டு கோ,**
87, பவழக்காரத்தெரு, மதராஸ்.








சமீபத்தில் பாரிஸில் நடைபெற்ற வண்டிகள் காட்சியில் முற்கால குதிரை பஸ் ஓட்டிக் காட்டப்பட்டது.

# த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

பராசக்திமனு பராதா நாபை
பராகேல னம்மா—ஓ— (பரா)

அநுபல்லவி

புராணிதர்ம ஸம்வர்த்தனி-ஸ்ரீ
புராதீச்வரி ராஜசேகரி— (பரா)

சரணங்கள்.

1. வராஹிதர தேவராஜ ஜலஜப-
-வராக்ஷஸாருல வராலு கோரு
வரானனே நக வராத்மஜே முனி
-வரார்ச்சிதே நனுப்ரோவ ராதா ஓ— (பரா)

2. விசால நயனே குசாலுகா நீ-
-துஸேவஜேஸி த்ரி தசாதி பாது-
-லுசாச்வதுலை பரவசாலநுதிஸே-
-யசாந்தமுன ஜூசு சாம்பவி ஓ— (பரா)

3. நிரபராதுல நிராகரிம்சே
துராத்மகுல நிந்துராகஸேய
கராதா வரத்யாகராஜநுதே சுப-
-தராமஸோதரி-தராதரஸுதே (பரா)

II

| | |
|---|---|
| பராசக்தி | —பராசக்தியே! |
| புராணி | —அநாதியே! |
| தர்ம ஸம்வர்த்தனி | —தர்ம ஸம்வர்த்தனித் தாயே! |
| ஸ்ரீ புராதீச்வரி | —ஸ்ரீபுரமென்ற திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் அம்மையே! |
| ராஜசேகரி | —சந்திரனைத் தரித்த ஜடாமகுடத்தையுடையவரே! |
| வர அஹிதர, தேவராஜ, ஜலஜபவ, ராக்ஷஸாருல | —சிறந்த ஸர்ப்பத்தையணிந்த சிவபெருமானும், திருமாலும், பிரமனும், இதர தேவர்களும் |
| வராலு கோரு வர ஆனனே | —வரங்களைக் கோருகின்ற சிறந்த (அழகிய) முகத்தையுடையவரே! |
| நகவர ஆத்மஜே | —சிரேஷ்டமான பர்வதத்தின் (அதாவது ஹிமவானின்) புத்திரியே! |
| முனிவர அர்ச்சிதே | —சிறந்த முனிவர்களால் பூஜிக்கப்பட்டவரே! |
| விசால நயனே | —பரந்த திருக்கண்களையுடையவரே! |
| (குசாலுகா......சாம்பவி) | |
| குசாலுகா | —மிகவும் மகிழ்ச்சியுடன் |
| நீது ஸேவ ஜேஸி | —உம்முடைய கைங்கரியத்தைச் செய்து |
| த்ரிதசாதிப ஆதுலு | —இந்திரன் முதலியவர்கள் |
| சாச்வதுலை பரவசால | —நித்யமான பரவசத்துடன் கூடியவர்களாய் |
| நுதிஸேய | —துதிக்க |
| சாந்தமுன ஜூசு சாம்பவி | —சாந்தத்துடன் (அருள் நோக்குடன்) பார்க்கும் சாம்பவியே! |
| வர்த்யாகராஜநுதே | —சிறந்த தியாகராஜனால் கொண்டாடப்படும் தேவியே! |
| சுபத ராமஸோதரி | —மங்களங்களை யுண்டுபண்ணும் ராம சோதரியே (மகா விஷ்ணுவின் தங்கையே) |
| தராதரஸுதே | —பர்வதராஜனுடைய குமாரியான பார்வதியே! |
| மநுப ராதா | —அடியேனைக் காப்பாற்றக்கூடாதா? |
| நிரபராதுல நிராகரிஞ்சே துராத்மகுலனு இந்து ராகஸேயக ராதா | —ஸாதுக்களை உபத்திரவிக்கும் துராத்மாக்களை இங்கு வரவொட்டாமல் செய்யக்கூடாதா? |
| பராகேலனம்மா | —என்பால் பராமுகமேன் தாயே? |

III

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுடைய தர்ம பத்னி (இவ்வம்மையாருடைய பெயர் பார்வதியம்மாளென்று பெரியோர்களால் கூறப்பட்டிருக்கிறது.) அவரைப்போலவே பக்திசில வைராக்கியங்களில் சிறந்தவர். அவ்வம்மையார் தினந்தோறும் சந்தர்ப்பப்பட்டபோதெலாம் அம்பிகையைக் குறித்துத் தியானம் செய்வது வழக்கம். ஜகதம்பிகையும் அவரிடம் அருள் சுரந்து நேரில் உபதேசம் செய்து சிறிது நேரம் பேசியிருப்பாள். இவ்விஷயம் ஸ்வாமிகளுக்குத் தெரியாது. ஒருநாள் ஏதோ அவஸரமாக ஸ்வாமிகள் உள்ளே சென்றபோது அவ்வம்மையார் யாரோ ஒரு ஸ்திரீயுடன் பேசிக்கொண்டிருப்பதுபோல் சப்தம் கேட்க, சற்று நின்றிருந்து பிறகு அவரைக் கூப்பிட்டார். பதில் வரவில்லை. பேச்சுக்குரல் நின்றுவிட்டது. ஸ்வாமிகள் உள்ளே சென்று பார்க்க, தம்மனைவியார் மட்டும் தியானத்தில் ஆழ்ந்திருக்கக் கண்டார். வேறு ஒருவரையும் காணவில்லை. பலதரம் அவரைக் கூப்பிட்டும் பயனில்லை. ஆதலால், ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்று ஸ்வாமிகள் திம்பிப் போய்விட்டார். பின்பு பார்வதியம்மையார் தம் தியானம் கலைந்து கூடத்திற்குவர, ஸ்வாமிகள் நடந்த விஷயத்தைச் சொல்லித் தாம் செவியுற்ற பேச்சுக்குரல் யாருடையதென்று கேட்டார். அவ்வம்மை சற்றுத் திகைத்து நின்றாராயினும், பிறகு, தாம் தேவி உபாசனை செய்து வருவதை

(8-ம் பக்கம் பார்க்க)

# பண்டிகை தினங்கள் நெருங்கிவிட்டன!

## ஆனால் என்ன?

விலையில் குறைந்த   கழுத்து நிறைந்த   அழகு மிகுந்த

# லேடீஸ் செயின்

## ஒன்றே போதும்!

எந்த காலத்திற்கும் குழந்தைகளும் பெரியவர்களும்
உபயோகிக்கத் தகுதியான நகை.



தேசமெங்கும்
தினசரி
வேண்டப்படும்
செயின்



ரூபா
37

எல்லாப்
பெண்களாலும்
ஆசிக்கப்படும்
நகை.



**உத்திரவாதம் - சவரன்**
பொன்னால் செய்யப்பட்டது.
நீலம், பச்சை, ஊதா, சிகப்பு
முதலிய கற்களில் ஒரு தினு
சாகவோ அல்லது கலந்தோ
கிடைக்கும். நீளம் 25
அங்குலம்.

## சுராஜ்மல் லல்லுபாய் & கம்பெனி,

ரத்ன வியாபாரிகள்,

**313, எஸ்ப்ளனேட், : : மதராஸ்.**

யும் தமக்குத் தேவி பிரசன்னமாகி உபதேசம் செய்து தம்மோடு பேசியிருப்பதையும் பற்றிச் சொன்னர். ஸ்வாமிகள் மிகவும் ஆச்சரியமுற்று, இப்படிப்பட்ட பாக்யம் தமக்குக் கிடைக்கவில்லையே என்று இரங்கிப் பிறகு ஜகதம்பிகையைப் பற்றிப் பல கீர்த்தனைகளைப் பாடினர். அவற்றுள், திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் தர்மஸம்வர்த்தனியம்மையைப் பற்றின கீர்த்தனைகளில் இதுவொன்று. மற்றவை, கருணஜூடவம்ம, இந்நாள்ளவலெவிந்த, நீவுப்ரோவவலே, பாலே, நன்னுகன்னதல்லி, அம்பநினு, அம்மதர்மஸம்வர்த்தனி, சிவேபாஹிமாம் முதலியன.

ஸ்வாமிகளுக்குத் தர்மஸம்வர்த்தனியம்மையின்பால் பரம பக்தி. தர்மஸம்வர்த்தனியம்மையின் ஸந்நிதியில்தான் அவர் 96 கோடி ராமநாமம் ஜபித்தாரென்ற விஷயமும், அவருடைய தர்மபத்னியான பார்வதியம்மையார் காலகதியான பின்பு மறுபடியும் விவாஹம் செய்துகொள்ளும்படி மிகவும் நிர்ப்பந்தித்த சிஷ்யர்களையும் பக்தர்களையும் அம்மாதிரி நிர்ப்பந்திப்பதில்லை என்று ஸத்யம் செய்யும்படி சொல்லி மூன்று நாட்கள் உபவாஸமிருந்து அவர்களால் ப்ரமாணம் செய்துகொடுக்கப்பெற்றது இந்த ஸந்நிதானத்திலேயே என்ற விஷயமும் பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

தர்மஸம்வர்த்தனி:—இந்தத் திருநாமமே தமிழில் அறம்வளர்த்த தாய், அறம்வளர்த்த செல்வி என்று வழங்கப்படுகிறது.

ஸ்ரீ புராதீச்வரி:—ஸ்ரீபுரமென்பது திருவையாற்றுக்கு அமைந்த பல பெயர்களில் ஒன்று.

ராஜசேகரி:—'சிவேபாஹிமாம்' என்ற கீர்த்தனையில் 'சசிப்லாதரி' என்று ப்ரயோகிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க. பிறைச்சந்திரனைச் சிரஸிலணிந்திருப்பது சிவபிரானுக்குமட்டுமேயன்றி அம்பிகைக்கும் உண்டான லக்ஷணம்.

வர அஹிதர:—இதை வராஹி! தர என்பதுபோல் விபரீதமாகப் பிரித்துவிடுகிறார்கள். அர்த்தம் பொருந்தாமல் போய்விடும். வர அஹிதர என்பது சிறந்த ஸர்ப்பத்தை (ஆபரணமாகத்) தரித்த சிவபெருமான் என்று பொருள்படும். த்ரிமூர்த்திகளும் தேவர்களும் வரங்கேட்கும் பராசக்தியே! என்று முடிக்க வேண்டும். தேவராஜன், தேவேசன் முதலிய திருநாமங்கள் திருமாலுக்கு முண்டென்பதை உணரவேண்டும். 'வராஹு தரி!' என்றும் பாடம். ஆயின், சிறந்த ஸர்ப்பத்தை சிரஸிலணிந்தவளே! என்று கொள்ளவேண்டும்.

ராக்ஷஸாருல:—இதற்குப் பதிலாக 'ராக்ஷஸாதுல' என்று சில புஸ்தகங்களில் காணப்படும் பிழையான பாடாந்தரத்தை வைத்துக்கொண்டு அர்த்தம் செய்யமுடியாமல் அவதிப்படுவோரும் உண்டு. ராக்ஷஸ அரி என்றால் அரக்கர்களுக்கு விரோதி என்று அர்த்தம். எனவே, தேவர்களுக்கு உரிய பெயராயிற்று.

நகவராத்மஜே:—பித்ரு கணங்கள் நான்கில், விரஜரென்ற ப்ரஜாபதியின் புத்ரர்களான வைராஜர்களான மூன்றின் மானஸ புத்திரியாகத் தோன்றிய மேனையைப் பர்வதராஜனான ஹிமவான் மணம்புரிந்துகொண்டு, மைநாகனென்ற புத்திரனையும் அபர்ணா, ஏகபர்ணா, ஏகபாடலா என்ற மூன்று புத்திரிகளையும் பெற்றாள். அபர்ணா எவ்வித ஆகாரமுமில்லாமல் பரமசிவனைக் குறித்துத் தவஞ் செய்கையில் வேண்டாம் வேண்டாமென்று அவள் தாயான மேனுவால் தடுக்கப்பட்டபடியால் உமாவென்று பெயர் பெற்றாள். ஏகபர்ணா, ஒரே ஒரு இலையைப் புசித்துக்கொண்டும் ஏகபாடலா ஒரே ஒரு பாதி யிலையை உண்டுகொண்டும் தவம்புரிந்தனர். இம்மூவரும் ப்ரம்ஹ ஞானமும் யோகபலமும் வாய்ந்தவர்களாயினர். தவத்தின் பயனாக உமாதேவி பரமசிவனையும், ஏகபர்ணா அஸிதரென்ற யோகாசாரியரையும், ஏகபாடலா ஜைகீஷவ்யரென்ற மஹானையும் பர்த்தாக்களாக அடைந்தனர் என்ற வரலாறு வாயுபுராணத்திற் கூறப்பட்டுள்ளது.

த்ரிதசாதி பாதுவ:—த்ரிதசா: என்பது முப்பத்துமூன்று தேவர்களைக் குறிப்பிடும்; அவர்களுடைய அதிபதி தேவேந்த்ரன். த்ரிதசாதிப என்ற பெயர் சிவபிரானுக்கும் பொருந்துவதொன்றும்.

சாம்பவி:—சம்பு: என்ற பதத்திற்கு (மோக்ஷ) ஆநந்தத்தையளிப்பவரென்று பொருள். சாம்பவி-சம்பு ஸம்பந்தமுடையவள். தந்த்ரிதாந்த நாமம்.

நிரபராதுல......ராதா:—ஸ்வாமிகளைப் பல ஸமயங்களில் உபத்ரவித்த துராத்மாக்கள் பலர். அத்தகையோர்களைப்பற்றி இங்குக் குறிப்பிடுகிறார்.

ராமஸோதரி:—ஸ்ரீராமபிரானுடைய ஸோதரி அதாவது ஸ்ரீமஹாவிஷ்ணுவின் உடன் பிறந்தவள். அஸுர ஸம்ஹார கார்யத்தில் ஸ்ரீராமபிரான் பராசக்தியின் உதவிகொண்டே செய்தார் என்பது பெரியோர் மதம். ராமாயணத்தில் பலவிடங்களில் இதற்கு ஆதாரம் காணப்படுகிறது.

தாராதரஸுதே:—'நகவராத்மஜே' என்ற குறிப்பைப் பார்க்க.

IV

ஸாவேரி ராகம் ஆதிதாளம்

ராக லக்ஷணத்திற்கு "மித்திரன்" வாரப்பதிப்பு 31—1—37 இதழ் 10-வது பக்கம் பார்க்க.

பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பத ஸா ; ஸ்நிதாபா | பமபா | பா | ஸ்நிதாமா | கா ரி | ஸா ஸா |
| ப ரா ; ச...க்தி | ம னு | ப | ரா...தா | நா... | பை, |
| ஸா-ஸநிதா-ஸா ; ரீ | மா ; | பநிதமக | ரீ, | ; ; | பா மா |
| ப-ரா......-கே ; ல | நம் ; | ......... | மா, | ; ; | இ. |
| தா ஸ்ா ;-ஸ்நிதாபா | பமபா | பா | ஸ்நிதாமா | கா ரீ | ஸா ஸா |
| ப ரா ;-ச...க்தி | ம னு | ப | ரா...தா | நா... | பை |
| ஸா-ஸ்நிதா-ஸா ; ரீ | பம தப | நிதபமக | ரீ, | ; ; | ஸா |
| ப-ரா......-கே ; ல | னம்... | ......... | ம, | ; ; | ... |

அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பமபா ; தா | ஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா | ஸ்ா | ஸ்ரிக்ர்ரீ | ஸ் நி | தா தா ; |
| பு ரா ; ணி | த ர் ம ஸம் | ... | வ...ர்த்த | னி... | ஸ்ரீ ; |
| தா ஸ்ா ; | ஸ்நிதாபாதா ; | பா ; | பா தா | மா பா | தா ஸ்ா |
| பு ரா ; | தீ......ச்வரீ ; | ரா ; ; | ஜ | சே... | க ரி |
| (பராசக்தி) | | | | | |

சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பா ஸ்நிதாமா | காரீஸாஸா | ஸரிபம | காரீ | ஸா ; | ஸா ; |
| நி ர......ப | ரா...து ல | நி ரா... | ...க | ரிம் ; | சே ; |
| ஸா ஸா ; ரீ மாபா | பா ;- | தா பா ; | டா | பா, த | ஸ்ா ஸ்ா |
| து ராத் ; ம குல | நிங் ;- | து ரா ; | க | ஸே,... | ...ய |
| பமபா ; தா | ஸ்ாஸ்ாஸ்ா ;- | ஸ் ரி க்ா | ரி ஸ்ா | ஸ் நி தா | தா தா |
| க ரா ; த | வச த்பா ;- | க ரா | ஜ ஜ | து தே | சு பா |
| தா ஸ்ா ; ஸ்ா | ஸ்நிதாபாதா | பா பா ; | மா | தா பா | தா ; |
| த ரா ; ம | ஸோ...தரி | த ரா ; | த | ர ஸு | தே ; |
| (பராசக்தி) | | | | | |

நமது தொடர் கதை




# அல்லது

# கள்வனைக் காதலித்த காரிகை

[திருச்சி ஸ்ரீமான் கே. வி. எஸ். வாஸ், பி. ஏ. (ஆனர்ஸ்) எழுதியது.]

## முன் கதைச் சுருக்கம்.

**பாஸ்கரம் பிரபு** விஜயபுரியில் மிகுந்த செல்வவந்தர். அவருக்கு, கமலா, ஹிமாவதி என்ற இரு பெண்களுண்டு. மூத்தவளான கமலாவுக்கும் குணசீலம் பிரபுவின் ஒரே குமாரன்

**ஜயந்தனுக்கும்** பீஜப்பூர் கிராமத்திலுள்ள மாளிகையில் விவாகம் நடைபெறப்போகிறது. பாஸ்கரம்பிரபு விவாகத்திற்கான நகைகளை எல்லாம் விஜயபுரியிலுள்ள தமது "மன்மத விலாஸ" மாளிகையில் வைத்திருக்கிறார். துப்பறியும் இலாகா போலீஸ் கமிஷனர்

**துளஸிதாஸ்** நகைகளைப் பாதுகாத்து வருகிறார். ஆனால்,

**கரும்பூதம்** பாஸ்கரம் பிரபுவைப்போல் நடித்து மன்மத விலாசத்திற்கு வந்து வைரமாலையைக் கவர்ந்து செல்லுகிறான். கரும்பூதத்தின் செயல்கள் ஒரு மர்மப் பெண்ணிற்குத் தெரிந்துவிடுகிறது. அவள் டெலிபோனில் கரும்பூதத்துடன் பேசுகிறாள் டெலிபோன் மாதின் வேண்டுகோள்படி கரும்பூதம் தான் கவர்ந்து வந்த நவரத்ன மாலையை பாஸ்கரம் பிரபுவின் வீட்டிலேயே மறுபடியும் கொண்டுபோய் வைத்துவிடுகிறான். பாஸ்கரம் பிரபுவின் குமாரியின் திருமணத்தையொட்டி பெரிய விருந்தொன்று நடந்தது. அதில்,

**சுதர்சனம் பிரபு**, அவரது சகோதரி,

**நளினம்**, பாஸ்கரம் பிரபு, துளஸிதாஸ் முதலியோர்கரும்பூதத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சுதர்சனர் தம் வீட்டிலிருந்து அவன் களவாடிவிட்டால் மாதர் மறுமண சகாயசங்கத்திற்கு ரூ. 50,000 நன்கொடையளிப்பதாகச் சொல்லுகிறார். அன்றிரவு டெலிபோன் பெண் கரும்பூதத்தையழைத்து தான் கரும்பூதம்மழுதியதுபோல் சுதர்சனம் பிரபுவிற்கு அவர் வீட்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் கொள்ளையடிக்க வரப்போவதாகக் கடிதமெழுதி விட்டதாகச்சொல்லி அதன்படியே நடக்கவேண்டுமென்று சொல்லுகிறாள்.

கரும்பூதம் சில வினடிகள் வரையில் மௌனம் சாதித்தான். அதைக்கண்ட டெலிபோன் கன்னி "ஹலோ! ஹலோ!!" என்று ஏழெட்டு முறை கூவியழைத்தாள். கடைசியாக கரும்பூதம் ஏனென்று கேட்கவும் "எதற்காகப் பிரமாதமாய் ஆலோசனை செய்கின்றீர்கள்?" என்று வினவினள் டெலிபோன் பெண்மணி.

"நாட்டைவிட்டு ஓட்டமெடுத்து விடுவதற்கு உபாயம் தேடிக்கொண்டிருக்கிறேன். சிறையிடப் படுவதைவிட சுதந்திரமாக எங்கேனும் தலைமறைவாகக் காலத்தைக் கழிப்பது உசிதமானதல்லவா?" என்று விசனத்துடன் பதிலளித்தான் கரும்பூதம்.

"உஸ்! சுதர்சனம் பிரபுவைக் கொள்ளையடிப்பது இவ்வளவு கடினமானதென்று நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டாள் மர்மப்பெண்.

"அல்லவா? அவர் உலகப் பிரசித்திபெற்ற மின்சாரக் கைத்தொழிற்சாலையின் சொந்தக்காரரென்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றான் கரும்பூதம்.

"இருந்தாலென்ன? மின்சார சக்தியினால் கரும்பூதத்தை என்ன செய்துவிடமுடியும்?" என்று தைரியமளிக்கும் குரலில் வினவினள் டெலிபோன் பெண்மணி.

"இருந்தாலென்னவா? அவர் தமது மாளிகையைச் சுற்றி மின்சார விசைகளையமைத்துவிட்டார் என்றால் எங்ஙனம் களவாட முடியும்?" என்று கேட்டான் கரும்பூதம்.

"நண்பரே! ஏன் உங்களுக்கு இயற்கையாகவுள்ள மனோதைரியத்தைக் கைவிட்டுப் பேசுகின்றீர்கள்? நீங்கள் நினைத்துவிட்டால் உங்களால் சாதிக்கமுடியாத காரியமும் ஒன்றிருக்கக்கூடுமா? ஊம், ஒருக்காலுமில்லை! பிரபுவிற்கு எழுதியிருக்கும் கடிதத்தில் வருகிற வியாழக்கிழமையன்றிரவு பதினோறு மணிக்கும் பன்னிரண்டுமணிக்குமிடையே நீங்கள் களவாடப் போவதாகக் குறிப்பிட்டிருக்கின்றேன்! கிழமையையும் நேரத்தையும் மறந்து விடாதீர்கள். எனக்கு உறக்கம் வந்துவிட்டது. ஆகையால் தற்காலீகமாக விடைபெற்றுக்கொள்ளுகின்றேன். வந்தனம்!" என்றாள் டெலிபோன் கன்னி. மறு வினடியில் டெலிபோனின் பிணைப்பும் நீங்கிவிட்டது.

"கிளிக்" என்ற சப்தம் கேட்டதும் கரும்பூதம் டெலிபோனை அதனுடைய வழக்கமான ஸ்தானத்தில் வைத்துவிட்டுக் கட்டிலில் மறுபடியும் படுத்தான். அவனுடைய நெஞ்சத்தில் இருவகையான எண்ணங்கள் இப்பொழுது சேர்ந்தாற்போல் உதயமாகின. முதலாவதாக "அந்த டெலிபோன் பெண் யார்? அவள் எங்கு வசிப்பவள்? அவளுடைய பெயர் என்ன? அவள் எப்படிப்பட்ட தோற்றமுடையவளாக இருப்பாள்? நான் நினைப்பதைப்போல் நல்ல முக வசீகரமுடையவளாகவும் பருவமெய்தியவளாகவுமிருப்பாளா? அவளுக்கு ஓட்டலில் நடந்த சம்பாஷணை எப்படித் தெரிய வந்தது? ஒருக்கால் சுதர்சனம் பிரபு பந்தயம் பேசுகையில் இவளும் நம்முடன் இருந்திருக்க வியலுமா? எப்படியானலும் ஒரு விஷயம்மட்டில் எனக்கு நிச்சயமாகத் தெரிகின்றது. அதாவது, இனிமையும் கம்பீரமும் பொருந்திய கண்டத்வனியையும், பேச்சின் போக்கையும் கவனித்தால் இவள் ஒரு உயர்ந்த குடும்பத்திற் பிறந்தவளாகத் தானிருக்க வேண்டுமென்பதில் சந்தேகமேயில்லை. அன்று ஆரியபவனத்தில் எனது நாவல்களைப் பற்றி சம்பாஷணை நடைபெற்றபொழுது செல்வி நளினமும் பாஸ்கரம் பிரபுவின் இரு குமாரிகளுமிருந்தார்கள். இம்மூவரையும் தவிர, வேறு பெண்கள் பக்கத்திலிருந்ததாக எனக்கு ஞாபகமில்லை. இவர்களிலெவரேனும் டெலிபோன் பெண்ணாக இருக்கக்கூடுமா? அப்படி இருக்கக்கூடுமானால் அது யார்? செல்வி ஹிமாவதியல்லவென்பது உறுதியான விஷயம். ஏனெனில் என்னையும் எனது நாவல்களையும்பற்றி சம்பாஷணை நடைபெற்றபொழுது அவள் தனது கவனத்தை வேறு எங்கோ செலுத்திக்கொண்டிருந்தாள். தவிர, அவள் ரொம்பவும் இளகிய மனதுடையவள். கள்வர்களைப் பற்றிப் பக்கத்திலிருப்பவர்கள் பேசினாலும் கூட பயப்படக்கூடிய சுபாவமுடையவள். அடுத்தாற்போல் கமலத்தை சந்தேகிக்கவும் இடமில்லை. ஏனெனில், நவரத்னமாலையைக் களவாடிய தினத்தன்று கமலம் பீஜப்பூருக்குப் பிரயாணமாகி விட்டாள். ஆனால் டெலிபோன் யுவதியோ அதே இரவில் நம்முடன் பேசியிருக்கின்றாள். ஆகையால் மூன்றாவதாகவுள்ள செல்வி நளினத்தைத் தான் நான் பலமாக சந்தே

**மனோரஞ்சனி**

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

கிக்க வேண்டியிருக்கிறது. தவிர, அவளே டெலிபோன் மாதாக இருக்கலாமெனச் சொல்ல பல ஆதாரங்களும் காணப்படுகின்றன. டெலிபோன்மாது ஆண்டவன் சாக்ஷியாக என்னை உள்ளன்புடன் நேசிப்பதாய்ச் சற்றுமுன் கூறினாள். இதேபோல் செல்வி நளினம்முன் "கரும்பூதத்தைப் பிரத்யக்ஷமாகப் பார்க்க நான் ரொம்பவும் ஆசைப்படுகின்றேன்!" என்று ஒட்டலில் கூறினாள். நீங்கள் கட்டாயமாக ஏமார்ந்து போவீர்கள் என்று நான் சொல்லியபொழுது "நீங்கள் இவ்வளவு உறுதியாகப் பேசுவதைப் பார்த்தால் கரும்பூதத்தை உங்களுக்குத் தெரியும் போலிருக்கிறதே?" என்றாள் நளினம். இந்த வார்த்தைகளைச் சொல்லுகையில் அவளுடைய அழகிய அதரங்கள் புன்னகையால் பிரிந்ததை நான் கவனித்தேன். அதனுடைய தாத்பர்யமென்ன? அவளுடைய புன்முறுவல் சாதாரணமானதா? அல்லது விஷமத்தன்மையானதா? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த நளினம் மலையாளப் பெண்களைப்போல் பேசுவதற்கு எங்கு போய்க் கற்று வந்திருப்பாள்? டெலிபோன் யுவதி ஒரு உயர் குடிப் பெண்ணென்பதுடன் மலையாள நாட்டிற் பிறந்தவளாகவோ அல்லது அங்கு வளர்ந்தவளாகவோ இருக்க வேண்டுமென்பதில் சந்தேகமே கிடையாது. இந்நிலைமையில் அவள் எவளாக இருக்கக்கூடும்?"

என்றிவ்வாறு டெலிபோன் யுவதியைப் பற்றி மூளைச் சிதறச் சிந்தித்துப்பார்த்தான் கரும்பூதம். அடுத்தாற்போல் சுதர்சனம் பிரபுவின் வீட்டில் எங்ஙனம் களவாடுவதென்ற கவலை அவனை வாட்டியது. சுதர்சனம் பிரபு பெரிய வீம்புக்காரர்! குணத்திலும் மிகக் கொடுரமானவர். அவரிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டால் அடுத்த நிமிடம் எமனுலகத்திற்குப்பிரயாணப்படவேண்டியதுதான்! போலீசாரிடம் சிக்கினால் அவர்கள் நமக்குச் சிறைத் தண்டனை விதிப்பார்கள். அல்லது தீவாந்திர சிக்ஷை கொடுத்தாலும் கொடுக்கலாம். எப்படியானாலும், நான் உயிருக்கு அஞ்சவேண்டியது அவசியமேயில்லை. சுதர்சனம் பிரபுவிடம் சிக்குண்டாலோ அவர் தற்காப்பிற்காகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகச் சொல்லித்தப்பிக்கொண்டு விடலாமென்ற தைரியத்துடன் கட்டாயமாக நம்மைச் சுட்டுவிடுவார். ஏனெனில், அவருக்கு என்னிடம் ஆத்திரமும் அருவருப்பும் அளவு கடந்திருக்கின்றது. தவிர, கரும்பூதமெனப்படுவது நான்தானென்பதை அவர் அறிந்துகொண்டால் என் கதி அதோகதிதான்! அப்பப்பா, என்னையும் எனது நாவல்களையும் அவர் எவ்வளவு ஆரம் வெறுப்புடன் நோக்குகின்றாரென்பது ஒட்டல் சம்பாஷணையிலேயே நன்றாக விளங்கி விட்டது. இந்நிலைமையில் பெரிய மின்சாரத் தொழிற்சாலையின் சொந்தக்காரராக இருக்கும் சுதர்சனம் பிரபுவைக் களவாடுவது ஆபத்தானதென்பது நிச்சயமான விஷயம். அவர் விரும்பினால் வீட்டினுள் ஒரு எலிகூட பிரவேசிக்க வியலாவண்ணம் நாலாபக்கங்களிலும் மின்சார விசைகளையமைத்து விடக்கூடும்! ஆனால் டெலிபோன் மாதின் கடிதத்தை அசட்டை செய்து விடுவதும் எனக்கு உசிதமாகத்தோன்றவில்லை. ஏனெனில், அந்தக் கடிதத்தில் கண்டபடி வருகிற வியாழக்கிழமை யன்றிரவு நான் சுதர்சனம் பிரபுவைக் களவாடாமலிருந்து விடுவேனாகில், கரும்பூதமென்ற பெயரின் உச்சரிப்பில் பொது ஜனங்களுக்கிருந்துவரும் அச்சமும் ஆச்சர்யமும் அடியோடு மறைந்து போய்விடுமென்பது உறுதியான விஷயம். தவிர, என்னைப் பற்றிப் பிரமாதமாகப் பாராட்டிப்பேசிய பாஸ்கரம் பிரபு, துளசிதாஸ் முதலியோர்களுக்கும் எனது நடத்தை மகத்தான ஏமாற்றத்தையும், அவமானத்தையும் சம்பாதித்து வைக்கும். இயற்கைக் கர்வியான சுதர்சனம் பிரபுவிற்கு மண்டைக்கனம் அளவு மீறி அதிகரித்து விடுமென்பதும் எதிர்பார்க்கக் கூடியதே. என்னை ஏற்கனவே இகழ்ந்து பேசிக்கொண்டிருப்பவர் இனிக் கண்ட விடத்திலெல்லாம் தூற்றத்தலைப்பட்டுவிடுவார். இவைகளெல்லாவற்றையும்விட, டெலிபோன் பெண்மணியும் என்னைப் பெருங்கோழையெனத் தீர்மானித்து விடுவாள். எவர் என்ன கூறியபொழுதிலும் சரி, அவளுடைய மனதில் என்னைப்பற்றி சிறுமையான அபிப்பிராய மேற்படும் வண்ணம் நான் நடந்துகொள்ள விரும்பவில்லை! வருகிற வியாழக்கிழமை யன்றிரவு சுதர்சனம் பிரபுவை எப்பாடுபட்டேனும் களவாடியே தீரவேண்டும்!"

என்றிவ்வாறு கரும்பூதம் கட்டிலில் படுத்துக்கொண்டே சிந்திக்கலானான். நிமிடம் நிமிடமாகப் பல மணி நேரங்கள் கழிந்தன. டெலிபோன் மாது யாரென்பதோ, அல்லது சுதர்சனம் பிரபுவைக் களவாடுவதெப்படியென்பதோ கடைசிவரையில் அவனுக்குப் புலப்படவில்லை. அவன் தன்னையே மறந்து கண்ணயரும் பொழுது கீழ்த்திசையும் வெளுத்து விட்டது.

மறுநாட் காலை ஏழரை மணிக்கு தெற்கு வீதியின் கிழக் கோடியில் தன்னம் தனிமையாக அமைந்திருக்கும் இந்திர பவனத்தில் கடுமையான தலைவலியுடன் கண் விழித்தெழுந்தார் சுதர்சனம் பிரபு.

(31-ம் பக்கம் பார்க்க)



"சனியனைக் கிழித்து அடுப்பில் கொண்டுபோய் போடு! படுக்கையை விட்டெழுந்தால் இந்தத் தொல்லை விடுவதே கிடையாது!" என்று சீறினார் சுதர்சனம் பிரபு.

அசல் புனு ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப்சந்த்
175, சைனு பஜார், மதராஸ்.

விலை ரூ. 1-4 தான்!
பாக்ஸ் & போல்டிங் காமிரா.

ஆரம்பக்காரர்கள்கூட இக்காமிராவினால் ஒரு நொடியில் கார்டு சைஸ் படங்களெடுக்கலாம். வேலையற்றவர்கள் தினம் ரூ.5. சம்பாதிக்கலாம்.
இலவசம் ஒவ்வொரு காமிராவுடன் 1. டாக்ஸ் பிரிண்டிங் பேப்பர். 4 பிலிம்கள்; டெவலப்பிங் கெமிக்கல்ஸ் & சாமானிய உபயோகக் குறிப்புகள். விலைகள்: பாக்ஸ் காமிரா நெ. 2--ரூ. 1-4; நெ.1-(a) ரூ. 2—8. படத்திலுள்ள போல்டிங் காமிரா ரூ.3; உயர்ந்தது ரூ.4-8. பிரத்யேக பிலிம்கள் டஜன் ரூ. 1; பிரிண்டிங் பேப்பர் டஜன் 6 அணு. பாக்கிங் முதலியன 10 அணு.
Young India Watch Co.,
(Depot 30)
159/C, Machua Bz. St. Calcutta.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

பிரசித்திபெற்ற பழங்களைத் தரும்
மாங்கன்றுகள்
தர்பங்கா, முஸபர்பூர் இவ்விடங்களைச் சேர்ந்தவை. மலிவான விலைகளில் கிடைக்கும். காட்லாக்குக் கெழுதுக. BIHAR NURSERY, P.O. Bihar Nursery (Darbhanga) Bihar.

நமது சிறுகதை

# குப்பன் குற்றவாளியா?

—:[ο]:—

(அருணசலம்)

குப்பன் நல்ல உழைப்பாளி. ஆனால் உழைப்பாளிக் கெல்லாம் இக்காலத்தில் எப்பொழுதும் வேலை கிடைக்கிறதா? அவன் ஒரு கூலியாள். விறகு வெட்டுவான். வீடுகளுக்கு சுண்ணும்பு அடிப்பான், ஓடுகளை மாற்றுவான்.

அந்த வாரத்தில் நான்கு தினங்களில் வேலை கிடைக்காததால் குப்பனும் அவன் பெண்ஜாதி காமாச்சி (குப்பன் அப்படித்தான் அவளை அழைப்பான்) யும் அரை வயிற்றுக் கஞ்சி சாப்பிடும்படி நேரிட்டது.

ஐந்தாவது நாள் காலை 6 மணிக்குக் கஞ்சி குடித்துவிட்டு "ஏ காமாச்சி, போயி ...டுவாரேன்" என்றான். "சரி ..., இன்னிக்காவது வேலை ...ஞ்சு அரிசி கொண்டாங்க. இல்லாட்டி தண்ணியும் காத்தும் தானுங்க" என்றாள் காமாச்சி.

அன்றைக்கு குப்பனுக்கு ஓர் வீட்டில் ஓடு மாற்றும் வேலை கிடைத்தது. மணி 12 இருக்கும். வேலை செய்துகொண்டிருக்கும்போது 'சுளீரெ'ன்று வெய்யில் குப்பன் முதுகில் அடித்தது. 'அப்பாடா, வெய்யில் பொசுக்கிக் கொளுத்துதடா' என்று சொல்லிக் கொண்டே ஒரு பழைய ஓட்டைத் தூக்கினான். கண்டான் ஓர் துணிப்பையை. கையால் தட்டிப்பார்த்தான். 'கிலு, கிலு' என சத்தம். முகத்தில் ஜோதி. 'பையை அவிழ்க்கலாமா? சே, சே, அதை அப்படியே வீட்டு எஜமானரிடம் அவிழ்க்காமல் கொடுக்க வேண்டும். அது அவருக்குத் தானே சொந்தம் என்று அவன் மனதில்பட்டது. பிறகு என் அவிழ்த்துப் பார்க்கக் கூடாது? பையோ ரொம்ப பழசு. எந்த ஜன்மத்தில் யார் வைத்ததோ?' என்று நினைத்துக்கொண்டே பையை அவிழ்த்தான். பத்து ரூபாய்கள் இருந்தன. அதை அப்படியே மாரில் அணைத்துக் கொண்டான். ஓர் இந்திய தேசபக்தனுக்கு தனது நாடு சுதந்திரமடைந்தால் எவ்வளவு சந்தோஷமிருக்குமோ அவ்வளவு சந்தோஷத்துடனிருந்தான் குப்பன்.

...பந்திரம் வேலையும் முடிந் ...வீட்டுச் சொந்தக்காரரி... கண்டெடுத்த பண... ...ி குப்பன் தெரி... ...ரூபாயை வை... ...லாயம் வாரக் ...நடத்த வே... ...ழித்தான். ஓர் ஆட்டை வாங்கி அதைத் துண்டுகளாக்கி தான் இருக்கும் சேரியில் விற்றால் ஜாஸ்தி பணம் கிடைக்குமென முடிவுக்கு வந்தான். சந்தையில் 9-8-0 க்கு ஓர் ஆடு வாங்கிக் கொண்டு இரவு 7-30 மணிக்கு வீடு சென்றான்.

காமாச்சி வீட்டு வாசற்படியில் கணவன் வரும் திக்கை நோக்கிப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். குப்பன் ஓர் ஆட்டோடு வந்ததும் அவளுக்கு 'திகிலெ'னத் தூக்கிவாரிப்போட்டது. 'எங்கிருந்தோ திருடிக் கொண்டு வந்துவிட்டான்' என்றுதான் அவள் மனதில் தோன்றியது.

தனக்கு எப்படிப் பணம் கிடைத்தது என்பதைப் பல முறை குப்பன் சொல்லியும் காமாச்சிக்கு சந்தேகம் ஒழியவேயில்லை. எங்கிருந்தோ ஆட்டையாவது, பணத்தையாவது திருடிக்கொண்டு வந்துவிட்டானென நினைத்தாள்.

மறுநாள் காலை ஆட்டை பல துண்டுகளாக்கி இருவரும் சேரியில் விற்றுக்கொண்டிருக்கும்போது மேலே வட்டமிட்டுக்கொண்டிருந்த ஒரு பருந்து ஓர் பெரிய மாமிசத்துண்டைக் கவ்விக்கொண்டு பறந்துவிட்டது. குப்பன் தன் கையிலிருந்த வைகளைக் கீழே வைத்துவிட்டு மாமிசத் துண்டை மீட்டு வர பருந்தை துரத்திச் சென்றான். பருந்து ஓர் மரத்தின்மீது உட்கார்ந்தது. குப்பனும் மரத்தின்மீது ஏறி அதன் மேல் கல்லை வீசி எறிந்தான். ஆனால் பருந்து மாமிசத் துண்டைக் கீழே போடாமல் பறந்து சென்றது.

அச் சமயத்தில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் நான்கு கான்ஸ்டேபிள்களுடன் ஓடி வந்தார். 'இந்தப் பக்கம்தான் வீராசாமியைக் கொன்றவன் ஓடினான்' என்று ஒரு கான்ஸ்டேபிள் சொல்ல, எல்லோரும் குப்பன் இருந்த தெருவுக்கு ஓடி வந்தார்கள்.

குப்பன் மிகவும் களைப்படைந்த முகத்துடன் மரத்தின் மீதிருந்து கீழே இறங்கினான். அவனைப் பார்த்த ஒரு கான்ஸ்டேபிள் "அதோ மரத்தைப் பாருங்கள்! ஒருவன் மெதுவாக இறங்குகிறான். அவன் வேஷ்டியெல்லாம் ஒரே ரத்தக்கறை" என்று கத்தினான். உடனே போலீஸார் எல்லோரும் குப்பனை நோக்கி ஓடி வந்தார்கள். இவர்கள் ஓடி வருவதைப் பார்த்து குப்பன் பயந்துவிட்டான். காட்டுப்புறத்தான் தானே! போலீசாரைக்கண்டு பயந்து ஓட


உன்னுடைய தோலைச் சுத்தமாகவும் சுகமாகவும் வைத்துக்கோள்.

ரணங்கள், சொரிகள், மருவுகள், பருவுகள் இல்லாமல் உன் உடம்பின் தோலை சுகமாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் நீ





குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) தினந்தோறும் உபயோகிக்க வேண்டும். வாசனையுள்ள புண்தடுக்கும் குடிகூரா சோப்புக்கட்டியின் (Cuticura Soap) நுரை தோலைச் சுத்தி செய்து, அழுக்கையும், தூசியையும் நீக்கி தோலை அவலக்ஷணமாக்கும் கஷ்டங்களைப் போக்கடிக்கும். ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் தங்கள் உடம்பைச் சுத்திசெய்வதற்கு மற்ற எதையும் உபயோகிக்கிறதில்லை. குடிகூரா சோப்புக்கட்டியின் (Cuticura Soap) உபயோகம் உடம்பை அழகாக அனேக மணி நேரம் வைத்திருக்கும். உனக்கு கரப்பான் முதலிய தோல் வியாதிகளிருந்தால் குடிகூரா சோப்புக்கட்டியால் கழுவுமுன், குடிகூரா தைலத்தை (Cuticura Ointment) உபயோகிக்கவும்; ஏனென்றால் அது தோலைத் தேற்றித் தெளிவாக்கும்.

குடிகூரா சோப்புக்கட்டி

CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும், பஜார்களிலும் விற்கப்படும்





தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானாவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனம்.

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,
77, சைனா பஜார் ரோட், மதராஸ்



ஸங்கீத அபிமானி

சென்ற 4 வருடங்களாக நடந்து வரும் உயரிய ஸங்கீதப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 1-8-0 மைலாப்பூர்
1936ஆம் ஸ்டாம்பு வால்யூம் ரூ. 2-8-0 சென்னை.




நஞ்சன்கூடு பல்பொடி ப்ராக்டெரியின்

கூலாயில்

சிறந்த ஸ்நானத் தைலம்

அணா 3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ் ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்)



பம்பாயில் டாக்டர் அன்ஸாரி தினம் கொண்டாடப்பட்டது.

ஆரம்பித்தான். போலீசாரும் குப்பனைத் தூக்கிக் கடைசியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்.

குப்பன் தான் வீராசாமி என்பவனைக் கொலை செய்யவில்லையென்றும், அவரை தனக்குத் தெரியவே தெரியாதென்றும், ஆட்டை வெட்டியதால் தான் வேஷ்டியில் ரத்தக்கறை இருக்கிறதென்றும், அது விஷயத்தைகாமாச்சியைக்கேட்டுத் தெரிந்துகொள்ளலா மென்றும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தான்.

சப் இன்ஸ்பெக்டர் காமாச்சியை விசாரிக்கச் சென்றார். காமாட்சி தன் கணவன் வாராமல் சப் ;இன்ஸ்பெக்டர் வந்ததும் திகிலடைந்துவிட்டாள். "ஓஹோ! நான் நினைத்தது சரிதான். குப்பன் பணத்தைத் திருடிக்கொண்டு வந்திருப்பதால் தான் இன்ஸ்பெக்டர் 'சாமி வருகிறார்' எனத் தீர்மானித்துவிடடாள்.

சப் இன்ஸ்பெக்டர்:—என்னம்மா, நீதான் குப்பன் பெண்ஜாதியா. ஐயோ பாவம்! உன் புருசன் ஆடுவாங்கிட்டு வந்து அதை அறுத்து வித்தானுமே, அது வாஸ்தவமா?"

காமாச்சி:—"என் புருசன் ஆடுவாங்கிட்டும் வல்லே. 'கிடும்' வாங்கிட்டும் வல்லே. என்ன சாமி' என்னை வந்து பயமுறுத்தரிங்க, என் புருசன் எங்கிட்டு சாமி இருக்காரு" என்றாள்.

"அவன் போலீஸ் ஸ்டேஷனிலே இருக்கான். அவனுக்குச் சோறு கொண்டாந்து கொடு" என்று சப் இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

"அடே மகாபாவி, நான் அப்போவே எங்கிட்டே திருடிக்கிட்டு கொண்டாந்தாட்டேன்னு சொல்லல்லே? நீ என்னை இப்படித்தனியே விட்டுட்டுபோயிட்டியே" ஹூம் ஹூம் என்று கதறினாள் காமாச்சி.

குப்பன் சொல்வதற்கும் அவன் பெண்ஜாதி சொல்வதற்கும் வித்தியாசமிருந்தபடியால் குப்பன்தான் வீராசாமியைக் கொலை செய்திருக்க வேண்டுமெனப் போலீசார் தீர்மானித்து அவன் மீது வழக்கைத் தொடர்ந்தனர்.

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலும், செஷன்ஸிலும் குப்பன் உண்மையாய் என்ன நடந்ததோ அதையே சொன்னான். இருந்தபோதிலும் அவனுடைய பெண்ஜாதியின் வாக்குமூலம் வேறு விதமாயிருந்தபடியால் அவனுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

குப்பன் ஏழையாதலால் ஹைகோர்ட்டு அப்பீலுக்கு அரசாங்கத்தாரே அவன் சார்பாக ஆஜர் செய்யும்படி ஓர் வக்கிலை அமர்த்தினார்கள். அந்த வக்கீலும் குப்பனுடைய வாக்குமூலத்தை நன்றாய் படித்து அதில் ஏதாவது உண்மை இருக்கவேண்டுமென முடிவுக்கு வந்தார்.

குப்பன் ஜெயிலில் அடைபட்டு ஐந்து மாதமாகிறது. இரவும் பகலும் ஏதாவது புலம்பிக்கொண்டும், அழுது கொண்டுமிருப்பான். சில சமயங்களில் 'அடே ஈசா! உனக்கு எல்லா வல்லமையுமுண்டு என்று பலர் சொல்கிறார்களே! நான் குற்றவாளியல்ல வென்று உனக்குத் தெரியவில்லையா? நான் 5 மாத காலமாக ஒரே அறையில் அடைபட்டுக் கஷ்டப்படுகிறேனே, என்று புலம்புவான். சில தடவைகளில் 'ஒரு வேளை இப்படியிருக்குமோ? நாஸ்திகர்கள் சொல்வதுபோல கடவுளே இல்லையோ? அவர் இருந்தால் நிரபராதியாகிய என்னை ஏன் இந்தக் கஷ்டத்துக்குள்ளாக்க வேண்டும்' என்று சொல்லி தேம்பித் தேம்பி அழுவான்.

அதே சமயத்தில் அவன் அப்பீல் ஹைகோர்ட்டில் நடந்துகொண்டிருந்தது. குப்பனுடைய வக்கீல் பேசியதாவது: "என்னுடைய கக்ஷிக்காரன் முதலில் போலீஸாரிடம் வாக்குமூலம் கொடுத்ததிலிருந்து கடைசி வரையில் ஒரேமாதிரியாய்த்தான் சொல்கிறார். அவர் சொல்வது ஏன் உண்மையாய் இருக்கக் கூடாது? அவருடைய வேஷ்டியில் ரத்தக் கறையிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. அது ஆட்டு ரத்தமாய் இருந்தாலும் இருக்கலாம்; அல்லது மனித ரத்தமாயிருந்தாலுமிருக்கலாம். கீழ்க்கோர்ட்டுகளில் அது மனித ரத்தமென ருஜுப்படுத்தவில்லை. குப்பனுடைய ரத்தக்கறைத் துணியும் இங்கு 'எக்ஸிபிட்' டாக இருக்கிறது. இதோ இந்தத் துணியில் காணப்படுகிற ரத்தம் மனிதருடையதா? அல்லது ஆட்டினுடையதாவென்று ஒரு நிபுணருடைய அபிப்பிராயத்தைக் கொண்டுதான் முடிவு செய்யவேண்டும்" என்று பேசி முடித்தார்.

ஜட்ஜும் எதிர்தரப்பு வக்கீல் சொல்வதை ஒப்புக்கொண்டு ரத்த சம்பந்தமான விஷயங்களில் தேர்ச்சியடைந்த ஒரு நிபுணரை கோர்ட்டு சாட்சியாய் விஜாரித்தார்.

அவர் ரத்தக்கறையைப் பரிசை செய்த பிறகு அது ஆட்டின்ரத்தம்என்பதைப் பற்றிச் சந்தேகமில்லை யென்று சொன்னார்.

ஜட்ஜும் குப்பனை விடுதலை செய்யுமாறு உத்திரவிட்டார். குப்பனும் விடுதலை யடைந்து மிக சந்தோஷத்துடன் வீட்டிற்குச் சென்றான். அவனும் காமாச்சியும் சந்தித்த சமயத்தில் அவர்கள் எவ்வளவு சந்தோஷத்துடனிருந்திருப்பார்கள் என்பதை வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம்.

* * * *


# நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.


சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி, (மெடிகல் டிபார்ட்மெண்டு S 15) பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.






சவரன் மாத்து தங்க நகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல் வெள்ளி சாமான்களும்

உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?

வீகம்ஸீ சபில்தாஸ் & சன்

50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவ

112, சைனபஜார் ரோட்டு

**சிறுவர் பகுதி**



# பாக்கியச் சக்கரம்

(டி. ஸி. தங்கவேலு)

ஓர் ஊரில் பாக்கியநாதன் என்பவனொருவன் தன் மனைவி மக்களுடன் ஓர் சிறிய வீட்டில் வாழ்ந்துவந்தான். அவனுக்குச் சுமார் இருபத்தெட்டு வயதிருக்கும். மிகச் சோம்பேறி. சோதிட நூல்கள் சிலவற்றை மட்டும் படித்திருந்தான். ஆனால் அதிலும் போதிய அறிவு பெற்றவன் என்று கூற முடியாது. அக்கல்வியாலும் யாதொரு பயனுமின்றி வாளாவிருந்தான். வாழ்க்கை நடத்துவதே மிக மிகக் கடினமாக இருந்தமையால் மனைவியும் மக்களும் தினந்தோறும் பசிப்பிணியால் நலிவுற்று வருந்தினர். மனைவி, ஒரு நாள் பாக்கிய நாதனை அழைத்து, "தங்களுக்குத்தான் ஜோதிடத்தில் அநுபவம் முதிர்ந்துவிட்டதே! நாளைய தினம் முதற்கொண்டு கடைவீதிக்குச் சென்றுவது ஏதேனும் சோதிடம் சொல்லி அன்றுடம் கஞ்சிக்காவது வழிதேடவும்" என்று கூறினாள். அவனும் வேறு வழியின்மையால் அதற்கு இசைந்தான். உண்மையில் அவனுக்குச் சிறிதேனும் அநுபவம் இல்லையென்றே சொல்லலாம்.

மறுநாட் பொழுது புலர்ந்ததும் சோதிட நூல்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு கடை வீதியில் ஓர் நாற்சந்தியில் அமர்ந்தான். வருகிறவர் போகிறவரிடம் வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டிகொண்டிருந்ததால் அவனைக் கூட்டம் சூழ்ந்துகொண்டிருந்தது. நிற்க, சில தினங்களுக்குமுன்னர் அவ்வூர் ராணிதான் குளிக்கச் செல்லும் சமயம் தன்னுடைய முத்து மாலையைக் கழற்றி அருகிலுள்ள ஓர் பொந்தில் வைத்துவிட்டு நீராடிப் பின் அரண்மனை சென்றனள். அவள் அம்மாலை வைத்த இடத்தைமறந்துவிட்டமையால் முத்து மாலை களவு போனதாகப் பிரஸ்தாபித்து, அதைக் கண்டுபிடிக்க முயற்சிகள் பல செய்து பயனில்லாது போயிற்று.

அப்பொழுது அவ்வரசிக்கு அவ்வூரில் கடைத்தெருவில் வந்திருக்கும் ஜோஸியனின் சமாச்சாரம் எட்டியது. உடனே அரசி தானே அதிவிரைவாக ஜோதிடனிருக்கும் இடத்தை நோக்கி ஓடி வந்தாள். அவள் ஓடிவரும் பாதையில் ஈயம் பூசுகிறவனால் தோண்டப்பெற்ற உலைக் களம்பதிந்த பள்ளமொன்றிருந்தது. அரசி அதைக் கவனிக்காமல் விரைவாக ஓடி வந்ததால் அப்பள்ளத்தில் கால்பட்டு இடறி விழுந்து பின் ஜோதிடனை அணுகினாள். தன் முத்து மாலையைப்பற்றிய விவரத்தை அறிந்து



சொல்லுமாறு பதட்டத்துடன் கேட்டாள். அவள் வரும் வழியில் தவறியதைப் பாக்கியநாதன் கவனித்திருந்தானாகையால் மிக அநுதாபத்துடன் அரசியை நோக்கி, "அரசியே! தாங்கள் அவ்வளவு வேகமாக ஓடி வந்தீர்களே! அடியிலிருந்த பொந்தைக் கவனித்தீர்களா?" என வினவிப்பின் பேச வாயெடுக்குமுன் அரசி "ஆம்! ஆம்! நினைவுக்கு வந்த"தென்று இவனைப் புகழ்ந்தவண்ணமே ஓடோடியும் சென்று அரண்மனைக் குளத்தில் தான் வைத்த இடத்தில் மாலை இருத்தல் கண்டு மட்டிலா மகிழ்ச்சியுற்றாள். ராணி மீண்டும் ஓடியதைக்கண்டு பாக்கியநாதன் ஒன்றுமறியாதவனாய் வியப்புற்று அமர்ந்திருந்தான். மாலை கிடைத்ததை ராணி அனைவர்க்கும் அறிவித்து, சோதிடனை அரண்மனைக்கு அழைப்பித்து நூறு பவுன் சன்மானம் செய்து அனுப்பினாள். பாக்கியநாதன் உண்மையிலேயே பெயருக்கொப்பப் பாக்கியநாதனானான். அதைக் கொண்டு வர்த்தகஞ் செய்து நேரிய முறையிலே பொருளீட்டித் தன் தனைவி மக்களுடன் ஒரு தனவணிகனாக வாழ்ந்துவந்தான். 'அதிர்ஷ்டமிருந்தால் அனைத்தையும் அடையலாம்.'

* * * *


# இனாம்

378 டிசைன் 64 பக்க நகை கேட்லாக்.
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P. O. (சென்னை)



## ஸ்ரீமத் பகவத் கீதை

விலை ரூபா 3.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.






## கண்ணோட்டம் பிரமுகர்கள்




லண்டன் கிராமாபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கட்டுரைகள் போட்டியில் குழந்தைகள் விவாகத் தடையைப் பற்றி கட்டுரை எழுதிப் பரிசு பெற்றுள்ள அண்ணாமலை சர்வகலாசாலையைச் சேர்ந்த ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணமூர்த்தி.



இலங்கையின் புதிய கவர்னர் ஸர் ஆன்ட்ரூ கால்டிகாட்



வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் புதிய காம்ட்ரோலர் ஸ்ரீமான் எஸ். ஏ. வனேஸ்வர்.



ருமேனியா தேசத்தின் பட்டத்திற்குரிய வார்ஸான நிகோலஸ் இளவரசரும் அவரது மனைவியான மேடம் ஸ்வீனா என்பவரும். விவாகத்தைத் தாம் கைவிடமுடியாதென்று சொல்லி நிகோலஸ் சிம்மாஸனமேற்கத் தமக்குள்ள எல்லாப் பாத்தியதைகளையும் விட்டுவிட்டார். மேடம் ஸ்வீனா ருமேனியாவின் தலைநகரான புகாரெஸ்டிலுள்ள ரஷ்ய ஸ்தானீகர் காரியாலயப் பிரதிநிதி யொருவரது மனைவியாயிருந்தவள். இவர்களது விவர்கம் 1931-ல் நடந்தது.



பாரிஸ்டர் சாவர்கார்

# பாரிஸ்டர் சாவர்கார்

அல்லது

# இந்திய நெப்போலியன்

(சண்முகசுந்தர நாயனர்.)



விடுதலையடைந்த சாவர்கார்

"ஹே பவானீ! பராசக்தி! இந்தியத்தாய் அடிமை விலங்கைத் தகர்த்து, விடுதலை பெறுவதில் என் உயிரை அர்ப்பணம் செய்யத்தயாராயுளேன்! அவசியமாயின் மரணத்திற்கும் அஞ்சேன். இது சத்தியம். என் உறுதியை நிறைவேற்றி இந்திய வாலிபரிடை தீவிர தேசியத்தீ கொழுந்துவிட்டெரியச்செய்வேன்" எனப் பதினன்கு வயதுச் சிறுவன் நடுநிசியின்போது துர்காதேவி முன் உறுதிபூண்டான். அச்சிறுவனே இருபத்தேழுவருட சிறைக்குப் பின் மே மாதம் 10-ந்தேதி விடுதலைசெய்யப்பட்டிருக்கும் பாரிஸ்டர் சாவர்கார். பாரிஸ்டர் சாவர்கார் மேனாட்டு தேசபக்தர்கள் போலத் தாய்நாட்டுவிடுதலையில் தீவிர ஆர்வங்கொண்டு தொண்டாற்றி பெருந்துன்பம் அனுபவித்துளார். அவரது குடும்பமே நாட்டின் பலிபீடத்தில் அர்ப்பணம் செய்யப்பட்டதெனலாம். திலகர், கோகலே, ரானடே முதலிய அரும் தேசபக்தர்களை அளித்துள்ள சித்பவன் பிராமண மரபைச்சார்ந்தது இவரது குடும்பம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிறப்பு

விநாயக தாமோதர சாவர்கார் என்ற பாரிஸ்டர் சாவர்கார், ரத்னகிரி ஜில்லா, லாகூரில் 1883-ம் வருடம் பிறந்தார். அவரது மூத்த சகோதரர் பெயர் கணேச சாவர்கார்; இளையவர்நாராயணசாவர்கார். அவரது தந்தை தமோதர பந்த் சாவர்கார் ஒரு வக்கீல். அவர் அரசியலில் லோகமான்ய பால கங்காதர திலகரைப் பின்பற்றுபவர். தந்தையின் தீவிர தேசபக்தியும், அவர் பிறந்த காலத்தில் மகாராஷ்டிரம் இருந்த நிலைமையும் அவரது தேச பக்தியை அதிதீவிரமாக்கியதற்குரிய காரணங்களாம்.

சாவர்கார், சிறு வ[illegible]ருக்கும்பொழுதே அவ[illegible]ந்தை அவருக்கு மகா[illegible]தம், ராமாயணம் இ[illegible]ள்ள அரிய கதைகளை [illegible]துக் கூறுவார். மேலும் [illegible]ப், சிவாஜி, பாவ் [illegible]ரின் வீரச் செயல்களை[illegible]வும் பாடல்களையும் அவர், சாவர்காரிடம் அடிக்கடி பாடுவார். அக்காலத்து மகாராஷ்டிர கவிகளின் பாடல்களையும் சாவர்கார் மேலும் ஆர்வத்துடன் படித்துப் பத்து வயதிலேயே தாய் மொழியில் உள்ளத்தை உருக்கும், கவிகள் புனையும் திறம் பெற்ருர். திலகர் நடத்திய "கேசரி"ப் பத்திரிகையையும், சிப்லங்கார் எழுதிய 'நிபந்த மாலா' என்ற அரிய புத்தகத்தையும் அவர் விடாது படித்து வந்தார்.

## தாய் பிரிவு

சாவர்கார் தமது பத்தாவது வயதிலேயே தம் அன்னையை இழந்தார். ஆனல் அவரது வீட்டில் வைத்துப் பூஜை செய்யப்பட்டு வந்த பவானி உருவச் சிலை முன்பு பிரார்த்தனை செய்வதிலும், தந்தையின் அன்பிலும் தாய் பிரிவை மறந்தார். துர்க்கா தேவியே, பவானி, பராசக்தியே, அவரது தாய் ஆனல் எனலாம். தம் குறைகளை, பராசக்தி முன்பு கூறி அவர் மெய்மறந்திருப்பார். சிவாஜிக்கு உதவியதுபோல் தமக்கும் உதவுமாறு அவர் கெஞ்சுவார்.

சாவர்கார், தேச சேவையிலும், மத விஷயங்களிலும் விசேஷ கவனம் செலுத்தினும் தமது பள்ளிக்கூடக் கல்வியில் சிரத்தை காட்டாமலிருந்ததில்லை. அவர் ஒருவகுப்பிலாவது பரீட்சை தவறியதில்லை. உபாத்தியாயர்கள் அவரது கல்வித்திறமையையும், அறிவையும் மிகவும் போற்றி அவரைப் பாராட்டுவதுண்டு.

## பிளேக் கொடுமை

சாவர்கார் வயது 14. மகாராஷ்டிரத்தில் பிளேக் நோய் பெருந்தாண்டவமாடியது. சர்க்கார் எடுத்துக் கொண்ட தடை • நடவடிக்கைகளின் கடுமை மக்கள் மனதில் பெருங் கசப்பை யேற்படுத்தியது. 'முதலில் பிளேக், அடுத்தாற்போல யம தூதர்கள் போல போலீஸார்' என மக்கள் நடுங்கினர். பிளேக் ரெகுலேஷன்களால் மக்கள் பட்ட அல்லல் அதிகம். அதில் சாவர்கார் குடும்பத்திற்கும் பங்கு உண்டு. அவரது தந்தை இக் கொடு நோய்க்கு இரையாயினர். வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு தமது சிறிய தந்தையுடனும் சகோதரர்களுடனும், தமது மூத்த சகோதரர் மனைவியுடனும் அவர்கள், ஊருக்கு வெளியேயுள்ள கோயிலில் தங்கியிருக்க நேர்ந்தது. சிறிய தந்தையும் பிளேக் வாய்ப்பட்டு மரணமடைந்தார். இளவயதிலேயே சாவர்கார் சகோதரர்கள் பெரும் துன்பத்தை ஏற்கும்படி நேர்ந்தது. கடைசி சகோதரர் நாராயணுக்கும் பிளேக் கண்டது. இவர்களது பரிதாப நிலை கண்ட அவரது நண்பர்களிலொருவர் அவர்களை நாசிக்கிலுள்ள தனது வீட்டிற்கு இட்டுச் சென்று உதவி புரிந்தார். சாவர்கார் சகோதரர்கள், பிளேக் வாய்ப்பட்டுதுன்புற்ருலும் காலனுக்கு இரையாகாது தப்பிப் பிழைத்தனர்.

## அரசியல் நெருக்கடி

1897-ல் பூனவில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபை நடவடிக்கையும், சமூக சீர்திருத்த மகா நாட்டுத் தகராறும் பிளேக் நடவடிக்கைகளும், மகாராஷ்டிரத்தில் பெரும் விழிப்பை யேற்படுத்திவிட்டன. பிளேக் நடவடிக்கைகளுக்குக் காரணமாயிருந்த ஆங்கில அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதையொட்டிப் பெரும் சதிக்கூட்டம் இருப்பதாகச் சர்க்கார் கருதினர்; இதன் காரணமாக நாட்டு சசோதரர்கள் நாடு கடத்தப்பட்டனர்; சாப்ஹேகார் சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்; பால கங்காதர திலகர் தண்டனையடைந்தார். இந்நிகழ்ச்சிகளை 14 வயது இளைஞராயிருந்த நமது சாவர்கார் பெரும் ஆவலுடன் அன்றுடப் பத்திரிகைகளை வாசித்து அறிந்து வருவார்.

## சுதேசி இயக்கம்

1905-6-ம் வருடத்தில் சுதேசி, பகிஷ்கார இயக்கம் நடைபெற்றபோது சாவர்கார் அநேக கூட்டங்கள்கூட்டி அதிதீவிர பிரசாரஞ் செய்துவந்தார். அன்னியத் துணிகளை தீக்கிரையாக்குவதே, சுதேசியத்திற்கு வலிமையெனக் கொண்டு நாசிக் நகரில் அன்னியத் துணிகளை பொதுக்கூட்டமொன்றில் பஸ்மீகரமாக்க அவர் முன்வந்தார். முதலில் இதற்கு எதிராகவிருந்த திலகர் முதலிய பெருந் தலைவர்களும் பின்னர் இதில் கலந்துகொண்டனர். சாவர்காரின் அரும் நாவன்மையும், நோக்கத்தில் உண்மையான ஆர்வமும், சிறந்த அறிவும், அவருக்கு, எடுத்த காரியங்களில் வெற்றிபெற உபகரணங்களாகவிருந்தன.

## காலேஜில் சேவை

காலேஜில் வாசித்துக் கொண்டிருக்கும்பொழுதே சாவர்கார், இவ்வேலைகளில் ஈடுபட்டிருந்தார். காலேஜ்களும், கலாசாலைகளுமே தேச பக்தியைப் பரப்புவதற்குரிய அரிய சாதனங்கள் என்பது அவர் கருத்து. படிப்பு முடிந்து மாணவர்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் செல்வார்களாதலால், தேசிய நோக்கம் பரவ சரியான சாதனம் அவை என அவர் கருதினர்.

'சாவர்கார் காம்ப்' என காலேஜில் ஒரு கோஷ்டி ஏற்பட்டது. அக் கோஷ்டியினர் சாவர்காரின் தீவிர சிஷ்யர்களாகவிருந்தனர். கலாசாலை கல்விச் சங்கக் கூட்டங்களில் அவர்கள் விசேஷ பாகம் எடுத்துக் கொள்வர்.

சாவர்கார் நாசிக் கூட்டத்தில் அன்னியத்துணிகளைத் தீக்கிரையாக்கியது காலேஜ் அதிகாரிகளுக்கு அச்சம் ஏற்படுத்தியது. அவர்கள் சாவர்காரை காலேஜ் விடுதியிலிருந்து வெளியேற்றி, ரூ. 10 அபராதமும் விதித்திருப்பதாகக் கூறினர். உடனே அவரது நண்பர்கள் அவருக்கு ஒரு நிதி திரட்டினர். ஆனல் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாவர்காரே மகாராஷ்டிரத்தில் நெருக்கடியேற்படுவதற்குரிய காரணர் எனச் சர்க்காரும் கருதினர். ஆனல் அவர் மீது நடவடிக்கையெடுப்பதால் அவர் செல்வாக்கு அதிகரிக்கும் எனவும் அவர்கள் கருதினர்.

இந்நிலையில், சாவர்கார், பி. ஏ. பரீக்ஷையில் தேறி, அரசியலில் கலந்து கொள்வதால் கல்விக்கு இடையூறில்லையென்



மாஜி ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஸர் வி. வி. அனந்த கிருஷ்ணய்யர் குமாரன் ராமகிருஷ்ணனுக்கும் நிஜாம் ராஜ்யம் பொது மராமத்து இலாகாவைச்சேர்ந்த ஸ்ரீமான் கோபாலனின் குமாரி ஸ்ரீமதி நீலாயதாக்ஷிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

பதை விளக்கினர். பண்டிட் ஸியாம்ஜி கிருஷ்ணவர்மா, மேல் படிப்பிற்கு இங்கிலாந்து வருபவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார். திலகர் சிபார்சின்மீது இவருக்கு அவ்வுதவி கிடைத்தது. சாவர்கார் தமது 21-வது வயதில் லண்டனுக்குப் பிரயாணமானர். இங்கிலாந்திலிருக்கும் இந்திய மாணவர்களிடை சேவை செய்யக்கூடும் என்பதே அவர் வெளிநாடு செல்வதற்கு முக்கிய காரணம்.

## இங்கிலாந்தில் வேலைகள்

லண்டனில்ஸியாம்ஜி, சாவர்காரை வரவேற்ருர். முதலில் 'சுயேச்சை இந்தியா சங்கம்' என ஒரு சங்கத்தை அவர் அங்கு ஸ்தாபித்தார். 'மித்திர மேலா'வென இந்தியாவில் சாவர்காரால் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் அபிநவ பாரத சங்கம் என்ற ரகசிய சங்கமாக வளர்ந்தது. சாவர்கார் அதற்கு இங்கிலாந்தில் வேண்டிய ஆதரவு தேடினர். இச்சங்கத்தைச் சார்ந்தவர்கள் உலகமெங்கும் தங்கள் வேலையை நடத்தினர். கானடா, தென் அமெரிக்கா, ஐக்ய நாடுகள், ஜர்மனி, பிரான்சு முதலிய நாடுகளில் இவர்கள் வேலை நடைபெற்றது. கானடாவில் குடியேறும் முயற்சியையொட்டிய 'கோமாகாட்டமேரு' கப்பல் சம்பவத்திற்கும் இக்கூட்டத்தினர் காரணர்.

சாவர்கார் தாம் ஒரு புரட்சிக்காரர் என்பதை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டார். அவரது எழுதும் திறமையும் நாவன்மையும், ஆங்கிலரும் அவரை மதிக்கச் செய்தது. ஆங்கிலப் பத்திரிகைகள் அவரையடக்கும் அவசியத்தை விடாது வற்புறுத்தின.

இந்தியாவில் மேலும் சில அதிகாரிகள் சுடப்பட்டதை யொட்டி இந்திய சர்க்கார் தீவிர கடவடிக்கை யெடுத்துக்



ராவ் பகதூர் டாக்டர் எஸ். ராமகிருஷ்ணனின் குமாரி கற்பகத்திற்கும் கோயமுத்தூர் ஸப் ஜட்ஜ் ஸ்ரீமான் ஆர், பாலசுப்ரமணிய அய்யர் குமாரன் ராஜா ராமனுக்கும் விவாகம் நடந்தது.

கொண்டனர். அநேக இளைஞர்கள் தூக்கு தண்டனை, தீவாந்திர சிட்சை முதலிய கடுந் தண்டனைகளை யேற்றனர். சாவர்காரின் மூத்த சகோதரர் ஸ்ரீகணேச் சாவர்கார் தீவாந்திர சிட்சை யேற்ருர். இளைய சகோதரர் நாராயணசாவர்காரும்கைதியானர்.

இதில் வெறிகொண்டு மதன் லால் திங்காரயென்பவர், லண்டனில் சர் கர்ஸான் வில்லியென்பவரைச் சுட்டுக்கொன்ருர். இச்செய்கைகள் சாவர்காரைக் கைதிசெய்ய யாவரையும் தூண்டும்படி வற்புறுத்தியது எனலாம்.

## சாத்வீகமும், துணிவும்

திங்காராவின் செய்கையைக் கண்டிப்பதற்கு லண்டனில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் பிரபல இந்தியத்தலைவர்கள் கலந்துகொண்டனர். கண்டனத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதாகத் தலைவர் அறிவித்தபோது சாவர்கார் ஒருவரே, 'இல்லை,நான், அதை ஆட்சேபிக்கிறேன்' எனத்துணிந்து எழுந்தவர். அப்பொழுது அவர் ஒரு ஆங்கிலோ இந்தியரால் தாக்கப்பட, அதற்குப் பழிவாங்க நினைத்த தம் நண்பர்களைப்பேசாதிருக்கும்படி சாடைகாட்டி தமது துணிவையும், சாத்வீகத்தையும் சாவர்கார் வெளியிட்டார்.

## கைதியும் தப்ப முயற்சியும்

முடிவில் சாவர்கார், இந்தியாவில் நடந்த சம்பவங்களை யொட்டி லண்டனில் கைதி செய்யப்பட்டார். இச்சமயத்தில் அவர் பாரிஸ்டர் பரீட்சையில் தேறிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்குப் பிரான்சில் போராதாவிருப்பதாகக்கருதி, வழக்கத்திற்கு மாருக, சாவர்கார் கப்பலில் கொண்டுவரப்பட்டார். இதற்கு முன், இங்கிலாந்திலிருந்து எவரும் அரசியல் இயக்கத்தை யொட்டி கைதியாக்கி நாடு கடத்தப்பட்டதில்லை. தற்செயலாக அவரை யேற்றி வந்த கப்பல் மார்ஸேல்ஸ் துறை முகத்தில் நிற்கும்படி நேரிட்டது. உடனே தப்பிச் செல்ல சாவர்கார் உறுதி பூண்டு, ஸ்கான அறைக்கு அழைத்துச் செல்லும்படி கூறி உட்பக்கம் சென்று கதவைச் சாத்திக் கொண்டு கப்பல் துவாரத்திற்குப் பாய்ந்தேறி கடலில் குதித்தார். இவர் செய்கையைக் கண்ணுடிக்கதவின் மூலம் கண்ட அதிகாரிகள், அபாய ஆர்ப்பாட்டஞ் செய்து அவரைப் பிடிக்க விரைந்தனர். கப்பலிலிருந்து கடலில்குதித்தசாவர்கார் க்ஷயரோகியாயினும்துணிவுடன்கடலில் நீந்திச் சென்று பிரான் சுதேசக் கரையைச் சேர்ந்தார். சர்வதேச ஒப்பந்தப்படி தம்மை மீண்டும் கைதி செய்ய முடியாதென்பதே அவரது இம்முயற்சிக்குக் காரணம். ஆனல் அவர் பலாத்காரமாக மீண்டும் பிடிக்கப்பட்டார். சாவர்கார் இவ்விதம் தப்ப முயன்றதால், 'இந்திய நெப்போலியன்' என அவரைப் பாராட்டுபவர்களால் அழைக்கப்பட்டார்.

சாவர்கார் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டு மேலும் 40 பேர்களுடன் சதிவழக்கில் விசாரிக்கபபட்டார். தாம் தப்பிச் சென்று பிரெஞ்சு மண்ணைத் தொட்டு விட்டதால், தம்மை விசாரிக்க பிரிட்டிஷ் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லையெனக்கூறி வழக்கில் கலந்து கொள்ள அவர் மறுத்துவிட்டார். அவர் விஷயம் பிரெஞ்சு சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டு, சர்வதேச சங்கத்தில்கொண்டுவரப்பட்டு, ஹேக் சர்வதேசக் கோர்ட்டு முன்பும் விசாரிக்கப்பட்டது. ஆனல் 1914-ல் மகா யுத்தம் ஆரம்பமாகி, பிரான்ஸிலிருந்த நெருக்கடியான நிலைமையால் பிரான்ஸ் இவ்விஷயத்தை வற்புறுத்தவில்லை. சர்வதேசசங்கம் முன்பு இந்தியா கொண்டு வரப்பட்டது இதுவே முதல் தடவை.

சாவர்கார் இவ்வழக்கில் ஆயுள் பரியந்தம் தீவாந்தர சிட்சை விடுக்கப்பட்டு, அந்தமானுக்குக் கொண்டு போகப்பட்டார். சிறையில் அவர் தேகநிலை மிகவும் கே[illegible]ள்மானது. எனினும் தமது ஆ[illegible] தண்டனையை முழுதும் க[illegible]த்துவிட்டார். 1924-ம் [illegible]டம் அவர் தேகநிலைக்குறி[illegible]ல் கார் நிபந்தனையின் போ[illegible] அவர் விடுதலை செய்யப்பட்டார் அதன்படி அவர் ரத்னகிரியிலிருந்து வெளியேறக் கூடாது. மே மாதம் 10-ந் தேதி வரை அவருக்கு இத்தடை யிருந்து வந்தது 10-ந் தேதி அன்று அத்தடை நீக்கிய உத்திரவு ஜில்லா மாஜிஸ்திரேட்டால் அவரிடம் கொடுக்கப்பட்டது.

## தலைவர்கள் கருத்து

அவரது அரசியல் நோக்கத்தில் மாறுபட்டிருப்பினும் அவர் துணிவும், சாந்தமும், தியாகமும், யாவரும் அவரைப் போற்றும்படிச் செய்தது. மிதவாதத் தலைவரான ஸ்ரீமான் எம். ஆர். ஜெயகர்,

"சாவர்காரைக் கௌரவிப்பதால் நாம் தியாகத்தையும் தேச பக்தியையும் கௌரவித்தவர்களாவோம்" என சாவர்காரைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, அபிப்பிராய பேத மிருப்பினும் அவர், ஏனையோரால் எவ்விதம் மதிக்கப் பட்டாரென்பது நன்கு விளங்கும். லாலா லஜபதிராய், சுரேந்திரநாத் பானர்ஜி திலகர் முதலிய பெருந்தலைவர்களும் தீவிர மாறுபாடான அபிப்பிராயமிருந்தும் அவரைப் பெரிதும் பாராட்டினர். காங்கிரஸ் மகா சபைக் கூட்டங்களில் அவரை விடுதலை செய்யக் கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நூல்கள்

இந்திய சுதந்திரப் போர், ஹிந்து சாம்ராஜ்யம், இந்துத்வா, அந்தமானிலிருந்து எதிரொலி, சீக்கியர்சரிதம் முதலிய பல நூல்கள் அவர் எழுதியுளார். 'இந்தியசுதந்திரப்போர்' எழுதும்பொழுதே சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டது. 1857-ம் வருடம் சிப்பாய்க் கலகம், வெறுங் கலகமன்று, சுதந்திரப் போர் என்பதை நிரூபிக்க அதில் அவர் பெரிதும் முயன்றுளார். அவரது புத்தகங்கள் யாவும் படிக்கப் படவேண்டியவை. உரிய எடுத்துக்காட்டின்றி அவர் ஒன்றும் குறிப்பிடுவதில்லை. அவரது ஆங்கில நடைப்போக்கு மனதை அள்ளுவதாயும், அவரது எண்ணங்களை மனதில் ஆழப் பதியும்படி செய்வதாயும் இருக்கும்.

27 வருடங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்ட சாவர்கார், மேலும் நம்நாட்டிற்கு பணியாற்றி மேலும் புகழ் பெறுவாராக!

* * * *

சு[illegible]காரன்:—எனக்கு எல்[illegible]ம் இரட்டையாகத்தான் தெரிகிறது.

அவன் நண்பன்:—அப்படியானல் ஒரு கண்ணைமூடிக் கொள்.

* * * *

ஒருவர், வியாதி வருவது என்பது இல்லையென்றும், வியாதியுள்ளவர்கள் தங்களு[illegible]து வியாதி என்று நினைத்துக் [illegible]ள்வதே தவிர வேறு இ[illegible] என்றும் பிரசாரம் செ[illegible] வந்தார்.

[illegible]ரது நண்பர்:—வியாதியாயிருந்தானே சாமு; அவனை உனக்[illegible] தெரியுமல்லவா?

"வி[illegible] வந்திருப்பதாக நினை[illegible]கொண்டிருந்தானே. சரி எ[illegible]ாமுஎன்றுசொல்?"

"[illegible]க்கட்டும். அந்தச் [illegible] இறந்துவிட்டதாக நினை[illegible]ாண்டிருக்கிருன்"

* * *

# இந்திய வர்த்தமானம்

## காங்கிரஸைப் பற்றி விசாரணை

1. காங்கிரஸ் பதவி யேற்க மறுத்ததுபற்றி பொதுஜன அபிப்பிராயமென்ன?

2. மறுதேர்தல் நடந்தால் காங்கிரஸ் ஜயிக்குமா?

3. கிராமங்களில் காங்கிரஸ்காரர் எத்தகைய பிரசாரம் செய்கிறார்கள்?

4. தேர்தல் காலத்தில் காங்கிரஸ்காரர் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததுபற்றி விவசாயிகள் என்ன நினைக்கிறார்கள்?

5. பதவி யேற்கும்படி காங்கிரஸைப் பொதுஜனங்கள் வற்புறுத்துகிறார்களா?

6. இடைக்கால மந்திரிகளை ஜனங்கள் எப்படி மதிக்கிறார்கள்?

7. சட்டசபையைக் கூட்டாமற்போனால் காங்கிரஸ்காரர் என்ன செய்வார்கள்?

மேற்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கூடிய முறையில் நிலைமையை விசாரிக்கும்படி ஐக்கிய மாகாண உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரிகள் உத்தரவிட்டிருப்பதாக நாகபுரியிலுள்ள "இண்டிபெண்டண்ட்" என்ற பத்திரிகை கூறுகிறது.

* * * *

## பூனா கோயில் சத்யாக்ரஹ முடிவு

பூனா சோன்யா மாருதி கோயில் சத்யாக்ரஹம் சென்ற 13-ந் தேதி முடிவடைந்தது. இது மொத்தம் 19 தினங்கள் நடைபெற்றது. 1035 பேர் வரை கோவிலில் மணியடிக்கக் கூடாதென்ற தடையுத்தரவை மீறியதில் 700 பேர் கைதி செய்யப்பட்டனர். ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். இந்த சத்தியாக்ரஹத்தில் பிரபல மஹாராஷ்டிரத் தலைவரான ஸ்ரீமான் என். ஸி. கேல்கர் கைது செய்யப்பட்டதாகச் சென்றவாரம் கூறப்பட்டிருந்தது. அவருக்கு 25 ரூபாய் அபராதமும் தவறினால் ஒரு வாரம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. அபராதம் யாரோ ஒருவரால் கட்டப்பட்டு அவர் விடுதலையடைந்தார்.

* * *

## விவாகத்திலேயே விதந்து

நாகபுரிக்குச் சமீபமாயுள்ள காம்காவன் கிராமத்திலுள்ள சேத் லக்ஷ்மீ நாராயணனின் குமாரி காஞ்சனா தேவிக்கும் சகலால் கல்யாந்திரிக்கும் விவாகம் நடந்தது. அன்றிரவு விருந்துக்குப் பிறகு தம்பதிகளுக்கு நோய் கண்டது. அந்நோயால் அன்றிரவே மணமகன் இறந்து போனான்.

* * * *

## பிரஷ்ட உத்தரவு

டில்லியைச் சேர்ந்த பிரபல காங்கிரஸ் ஊழியரும் அகில இந்திய ஜமீயத்துல் உலாமாவின் உதவிக் காரியதரிசியுமான மௌலானா நூருதீன் பிஹாரிக்கு மாகாண கவர்ன்மெண்டார் ஒரு பிரஷ்ட உத்தரவு சாதரா செய்தனர். அதில் அவர் 24 மணி நேரத்திற்கு முன் டில்லியைவிட்டு வெளியேறிவிட வேண்டுமென்றும் முன் அனுமதியின்றி ஆறுமாதத்திற்குள் டில்லிக்குத் திரும்பிவரக் கூடாதென்றும் கூறப்பட்டிருந்தது. மௌலானா நூருதீன் சென்ற சில மாதங்களாக முஸ்லீம் பாமர ஜனங்களிடை காங்கிரஸ் பிரசாரம் செய்து வந்தார்.

* * * *

## கைதிகளுக்குத் தண்டனை குறைக்கப்பட்டது

பஞ்சாப் மாகாணத்தில் மகுடாபிஷேகக் கொண்டாட்டத்தின் முக்கியாம்சமென்னவென்றால் மாகாணத்தில் பல சிறைகளிலும் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு அவர்களது சிறைவாச காலத்தில் ஒருவாரம் குறைக்கப்பட்டது. கைதிகளுக்குத் தின்பண்டங்களும் வழங்கப்பட்டன.

* * * *

## வெளியே படுத்தவர் கதி

வீட்டில் புழுக்கம் தாங்காமல் காற்றுக்காக நடைபாதையில் தூங்கிக்கொண்டிருந்த ஆறுபேர்மீது ஒரு மோட்டார் லாரி ஏறிவிட்டது. இச்சம்பவம், பம்பாய், பரேல் என்னுமிடத்தில் நடந்தது. அவர்களில் மூவர் ஆஸ்பத்திரியில் இறந்தனர்.

* * * *

## திரிபுரா சமஸ்தானத்தில் தீவிபத்து

கிழவங்காளத்தைச் சேர்ந்த திரிபுரா சமஸ்தானத்தின் தலைநகரான அகர்டாலாவிலிருந்து வந்த செய்தி கூறுவதாவது:— அரண்மனை காம்பவுண்டில் பெருந் தீவிபத்து நேரிட்டது. இதன் பயனாகச் சேவகர்கள் விடுதிகளில் வசிக்குமிருவர் எரிந்து சாம்பலாயினர். ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் 12 பேரது வீடுகள் தீயினால் எரிந்துபோயின. சில வீடுகள் பூரணமாகவும் சில வீடுகள் சிறிதளவும் எரிந்து போயின. அதிகசேதமடைந்த வீடுகளுள் திரிபுரா மகாராஜாவின் பிரதமக் காரியதரிசி ராணாபோதஜாங் பகதூரின் வீடும் ஒன்றாகும்.

சேவகர் ஒருவர் வீட்டுச் சமயலறையில் முதன் முதல் தீப்பற்றியதென்றும் பலத்த காற்றினால் அது துரிதமாகப் பரவிப் பல மணி நேரம்வரை அடக்கமுடியாமல் போயிற்றென்றும் தெரிகிறது. மகாராஜா தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த இடங்களுக்கு நேரில் வந்து ஜனங்களைத் தீயை அணைக்கும்படி ஏவினார். எரிந்து விழுந்துபோன கட்டடங்களைக் கல், மண் முதலியவற்றை எடுத்து சுத்தப்படுத்தவும் தீ விபத்தினால் கஷ்டத்திற்குள்ளானவர்களுக்குச் சரியான இடவசதி முதலியன அளிப்பதற்கும் உடனே விசேஷ உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. பல லக்ஷக்கணக்கான ரூபாய்கள் நஷ்ட மேற்பட்டிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

* * * *

## வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம்

இந்தியா கவர்ன்மெண்டின் கைத்தொழில் இலாகா மாகாண கவர்ன்மெண்டுகளுக்குப் பின் கண்ட சுற்று அறிக்கையை அனுப்பி யிருக்கிறது. நடுத்தர வகுப்பினரின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிய பூரணமான புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும். இதுதான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பரிகரிப்பதற்காக எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளுள் முதன்மையானதாகும்.

அடியிற்கண்ட 4 விஷயங்களைப் பற்றி மாகாண கவர்ன்மெண்டின் முடிவுகளைத் தெரிந்துகொள்ள இந்தியா கவர்ன்மெண்டார் விரும்புகின்றனர்:—

(1) மேலே குறிப்பிட்ட புள்ளி விவரங்களைச் சேகரிப்பது விரும்பத் தகுந்ததா?

(2) இதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் சட்டஞ்செய்ய வேண்டியதவசியமா?

(3) புள்ளி விவரங்களைச் சேகரிப்பது தொகுத்து வெளியிடுவது சம்பந்தமாக வேலையில் மாகாண கவர்ன்மெண்டுகள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றனவா?

(4) மாகாண கவர்ன்மெண்டுகளில் பெரும்பாலானவை இந்த யோசனையை ஆதரித்தால், இதுபற்றிய தீர்மானத்தை மாகாண சட்டசபை முன்பு கொண்டுவர மாகாண கவர்ன்மெண்டுகள் சம்மதிக்குமா?

மாகாண சர்க்கார்கள் வேலைக்கு ஆட்களை வைத்துக்கொள்ளும் முதலாளிகளையும் மற்றவர்களையும் கலந்து ஆலோசித்து அக்டோபர் முதல் தேதிக்குள் தமது பதிலை அனுப்பிவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

* * * *

## புஸ்தக விமர்சம்

### வேதபுரி கீர்த்தனைகள் (ஸ்வரத்துடன்)


[மாத ஸஞ்சிகை ஒவ்வொரு பிரதியின் விலை 2 அணா. சங்கீத சதனம் நெ. 1 ராமசாமி தெரு, ஜி. டி சென்னை என்ற விலாசத்தில் பிரதிகள் கிடைக்கும்]

சங்கீத வித்வான் ஸ்ரீமான் டி. ஆர். விஸ்வநாதசாஸ்திரியாரை சங்கீத உலகு நன்கறியும். வடமொழியில் பாண்டித்யமும் சங்கீதத்தில் நைபுண்ணியமும் வாய்ந்த இவரிடமிருந்து, கச்சேரிகள் மாத்திரமல்லாமல் உயர்ந்த சேவையையும் எதிர் பார்க்க சங்கீதப்பிரியர்களுக்கு உரிமையுண்டு. அவ்வுரிமை இப்போது பூர்த்தி செய்யப்படுகிறது. தாமியற்றிய ஸாஹித்யங்களை மாத சஞ்சிகை ரூபமாக அவர் வெளியிடுகிறார். அவை ஸ்வரங்களோடு கூடியவையாய்த் தெளிவாக விருக்கின்றன. தமிழில் ஸாஹித்யமியற்றுவோர் தொகை நாளுக்குநாள் அருகி வருகின்றது. இச்சமயத்தில் ஸ்ரீமான் விஸ்வநாத சாஸ்திரியாரின் தோற்றம் விசேஷ மகிழ்ச்சியைத் தரவல்லது. வடமொழியிலும் தமிழிலும் இவர் இயற்றி, எப்ரல் வெளியிட்டால் பிரசுரம் செய்திருக்கும் ஸாஹித்யங்களைப் பார்வையிட்டேன். இந்த ஸாஹித்யங்கள் எந்த ஆசிரியனுக்கும் பெருமையைத் தரும். நம் நாட்டில் வித்வத்துக்குக் குறைவில்லை. ஆதரவு கிடைப்பதுதான் அரிது. ஆனால் சங்கீதத்தில் ஆர்வம் பரவி வரும் இந்நாளில் ஸ்ரீ சாஸ்திரியாரின் முயற்சி போன்றவற்றிற்கு ஆதரவு கிடையாது போனால் அது சங்கீதத்திற்குப் போதாத காலமென்றே சொல்லவேண்டும். பள்ளிக்கூடங்களில் சங்கீதம் பாடமாகப் போதிக்கப்பட்டு வருமிப்போது இந்த ஸஞ்சிகைக்குப் பூர்ண ஆதரவு கிடைக்குமென்று நம்புகிறேன்.

—கான லோலன்

## ஜவஹர் உபசாரப் பத்திரங்கள் கைப்பற்றப்பட்டன

ரங்கூன் ஜில்லா மாஜிஸ்திரேட் பிறப்பித்த வாரண்டின் மேல் "நியூ பர்மா" என்ற பர்மிய ஆங்கில வார மும்முறைப் பத்திரிகை ஆபீஸ் சோதனை போடப்பட்டது. பர்மா பர்மியருக்கே என்ற சங்கத்தின் தாராவாடிக் கிளை லெட்படானில் நடத்திய மகாநாட்டில் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அப்பத்திரத்தின் சில நகல்களையும் அதன் கையெழுத்துப் பிரதியையும் போலீஸார் கைப்பற்றிச் சென்றனர்.



மிஸஸ் ஸிம்ஸனும், வின்ஸர் கோமகனும்.

மிஸஸ் ஸிம்ஸனின் விவாக ரத்து உறுதிப்படுத்தப்பட்டவுடன் வின்ஸர் கோமகன் தமது காதலியின் வாசஸ்தலமான சடு டி காண்டிக்குப் போய்ச் சேர்ந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். மேலே காணப்படுவது, அந்த வாசஸ்தலத்தில் அவ்விருவரும் சல்லாபம் செய்து கொண்டிருக்கையில் எடுத்த படம்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

——:[○]:——

### வின்ஸர் கோமகன்-மிஸஸ் ஸிம்ஸன் விவாகம்

"வின்ஸர் கோமகனுக்கும் மிஸஸ் ஸிம்ஸனுக்கும் ஜூன் மாதம் 3-ந் தேதி விவாகம் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மிஸஸ் ஸிம்ஸன் தமதுபெயரை மிஸஸ் வாலிஸ் வார்பீல்ட் என்று மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறார். விவாகத்திற்கு இங்கிலாந்து மன்னர் பிரான் குடும்பத்தினர் ஒருவரும் செல்ல மாட்டார்கள். விவாகம் பாரிஸிற்குச் சமீபமாயுள்ள சடு டி காண்டி என்னுமிடத்தில் நடைபெறும்.

* * * *

### மன்னர் பிரான் மகுடாபிஷேகம்

மன்னர்பிரான் ஆறுவது ஜார்ஜ் முடிசூட்டுவிழா சென்ற 12-ந் தேதி பகல் 12-31 மணிக்கு வெஸ்ட் மினிஸ்டர் மாதா கோவிலில் நடைபெற்றது. அச்சமயத்தில் பல குண்டுகள் வெடிக்கப்பட்டன. சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த எல்லாப் பாகங்களின் பிரதிநிதிகளும் குழுமியிருந்த அந்த மாதா கோவிலில் மகுடாபிஷேகச் சடங்குகள் நடைபெற்றவகை ஒரு ஒப்பற்ற காட்சியாக விளங்கியது. மஹாராணியின் மகுடாபிஷேகம் பிறகு நடைபெற்றது. இச்சடங்குகள் 2 மணி சுமாருக்கு முடிவடைந்தன. மன்னரும் ராணியும் மாதா கோவிலிலிருந்து புறப்பட்டு பக்கிங்ஹாம் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து ரேடியோமூலம் மன்னர் பிரான் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் வருமாறு:—

"லண்டனில் மகுடாபிஷேகச் சடங்குகள் முடிவுற்றதன் பேரில் இப்பொழுது ராணியும் நானும், அவை வெற்றிகரமாக நடந்தேறுவதற்கு உதவிய அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அது காலை பந்தோபஸ்து வேலை புரிந்த எனது கடற்படை, ராணுவப் படை இவற்றின் பிரதிநிதிகள் நடந்துகொண்ட முறையையும் அவர்களது கட்டுப்பாட்டையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். இதில் வெளி நாடுகளைச் சேர்ந்த பல சிறந்த படைகளும் கலந்து கொண்டது கண்டு நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். மகுடாபிஷேகச் சடங்குகள் வெற்றிகரமாக நடந்தேற மனப்பூர்வமாக உதவிய அனைவருக்கும் ராணியும் நானும் எங்கள் ஹிருதய பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். போலீஸாரும் மிக்கச் சிரமப்பட்டிருக்கின்றனர். பொது மக்கள் வழக்கம் போல் தங்கள் சிறந்த நடத்தையால் அவர்களுக்கு உதவி புரிந்து வந்திருக்கிறார்கள்.

* * * *

### ஸ்பெயின் யுத்தம்

ஸ்பெயின் யுத்த நிலைமையில் யாதொரு முக்கிய மாறுதலையும் காணவில்லை. கலகக்காரர்கள் வாலன்ஷியா (சர்க்காரின் தலைமை ஸ்தானம்) மீது வெடிகுண்டுகளைப் பொழிந்தனர். இதன் பலனாகப் பலர் இறந்தனர். வாலன்ஷியாவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் காரியாலயத்திற்கும் சேதமேற்பட்டது. இத்தாலியரும் ஜெர்மனியரும் கலகக்காரர்களுக்கு மறுபடியும் மும்முரமாக உதவி செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

வாலன்ஷியாவில் ஸீனர் கபல்லரோவின் மந்திரி சபை ராஜிநாமாச் செய்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. நீடித்த யுத்தத்தைச் சமாளிக்கும்பொருட்டு வலுவான மந்திரி சபை நிருவவே கபல்லரோவின் மந்திரி சபை ராஜிநாமாச் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. புதிய மந்திரி சபையொன்றை அமைக்கும்படி கபல்லரோ மறுபடியும் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் அவர் மறுத்துவிட்டதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. ஸீனர் நெக்ரின் தலைமையில் புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டு விட்டதாகக் கடைசியாகக் கிடைத்த செய்தி கூறுகிறது.

* * * *

### ஸ்னோடன் பிரபு மரணம்

ஸ்னோடன் பிரபு சென்ற 15-ம் தேதி காலை ஸர்ரே (இங்கிலாந்து)யிலுள்ள தமது வாசஸ்தலத்தில் திடீரென மாரடைப்பால் மரணமானார். அச்சமயத்தில் அவருடைய மனைவி அருகிலில்லை. பக்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்ற நாட்டியக் கச்சேரிக்குச் சென்றிருந்த அவரது மனைவி இரவு அங்கேயே தங்கிவிட்டார்.

மன்னர் தம்முடையவும், ராணியினுடையவும் அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் ஸ்னோடன் சீமாட்டிக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்.

[ஸ்னோடன் பிரபு 1864-ம் ஆண்டு பிறந்தார். அவர் சுயேச்சைத்தொழிற்கட்சியின் தலைவராயிருந்தவர். 34 வருஷ காலம் அக்கட்சியுடன் சம்பந்தம் கொண்டிருந்தபின் 1927-ம் ஆண்டில் அதனின்றும் விலகினார். அவர் 21வருஷ காலம் காமன்ஸ் சபை அங்கத்தினராயிருந்தவர். 1931-ம் ஆண்டில் அவருக்கு "வைகவுண்ட்" பட்டம் அளிக்கப்பட்டது. 1924-ம் ஆண்டிலும், பிறகு 1924-லிருந்து 1931 வரையும் இருந்த தொழிற் கட்சி சர்க்காரில் அவர் பொக்கிஷ மந்திரியாக இருந்தார். இங்கிலாந்து தங்கச் செலாவணியைக் கைவிட்டது பற்றிய மசோதாவை அவரே பிரேரித்தார்

* * *

### ஜெர்மனிக்கு முஸோலினி விஜயம்

ஸீனர் முஸோலினி ஜூன் மாத இறுதியில் ஜெர்மனிக்கு விஜயம் செய்வாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

### நேரிய கணவர்களின் குணங்கள்

நேரிய கணவர்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டிய பத்து குணங்களை ஒரு அமெரிக்க மாது கண்டுபிடித்திருக்கிறார். அவையாவன:—

(1) பழைய செருப்பைப் போல அவர் பதமாக இருக்க வேண்டும்.

(2) பழைய நிஜார்களை அணிந்து கொள்ள வேண்டும்.

(3) மனைவியின் அழகை எப்பொழுதும் பாராட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

(4) மனைவி வளருவதற்குத் தகுந்தபடி வளர்ந்துவர வேண்டும்.

(5) ஹாஸ்யச் சுவைபடைத்திருக்க வேண்டும்.

(6) வெளியில் சொல்லக் கூடாத விஷயங்களை மூடி வைத்துக் கொள்ளத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

(7) குழந்தைகளை நேசிக்க வேண்டும்.


(8) மனைவியின் செல்வாக்கு அதிகரிக்கும்படி செய்வதில் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

(9) மனைவி எப்பொழுதும் ஏதேனும் செய்துகொண்டிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது.

(10) மரியாதைக்குப் பாத்திரமாக இருக்க வேண்டும்.

* * * *





மிஸ் கிரெட்டா கார்போ, ராபர்ட் டெய்லர் நடிக்கும்

"காமில்"

என்ற படத்திலிருந்து காட்சிகள்.


# ஸ்திரீகளின் வீரம்



ஜப்பானிய ஸ்திரீகள் பாணச்சண்டையில் தேர்ந்தவர்கள்.



தென் ஆப்பிரிக்கா ஜுலூ ஸ்திரீகள்
தயா



ஸ்பெயினில் ஸ்திரீகள் காட்டு எருமைகளுடன் சண்டை செய்வதில் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.




ஸ்பெயினில்



ங்கள் கணவர்களுடன் சண்டைக்குப் புறப்படத்
ராக விருக்கின்றனர்.



லண்டன் போலீஸ் ஸ்திரீ



ஸ்திரீகள் குஸ்திச்சண்டை



அமெரிக்க ஸ்திரீகளில் பலர் அம்பு எய்வதில் சமர்த்தர்களாக விருககின்றனர்.

# அமராவதிச் சிலைகள்




தர்ம சக்ர ஆராதனை.



தர்ம சக்ர ஆராதனை.
மற்றொரு காட்சி.




புத்தர் பாதங்களைச் சேவித்தல்.




சைத்திய சிற்பங்கள்.

(இச் சிலைகள் சம்பந்தமான கட்டுரை மற்றோரிடத்தில் வெளியாகி யிருக்கிறது.)

# மன்னர் மகுடாபிஷேகம்



மன்னர்பிரான் ஆருவது:ஜார்ஜ் சக்ரவர்த்தியும், எலிஜபெத் மஹாராணியும் மகுடாபிஷேகம் முடிந்தவுடன் எடுத்த படம்.



மகுடாபிஷேகம் முடிந்தவுடன் மன்னர் கிரீடம் அணிந்து செங்கோல் தாங்கி வெஸ்ட் மினிஸ்டர் மாதாகோவிலி லிருந்து வெளிவந்த காட்சி.



பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னர்பிரான் தம்பதிகள் வெளியே யிருந்த:ஜனங்களுக்குத் தர்சனமளித்தனர்.



இந்தியப்படையைச் சேர்ந்தவர்களுக்கு மகுடாபிஷேக மெடல்கள் அளிக்கப்படுவதற்கு முன்பாக அவர்கள் அணிவகுத்துச் சென்ற காட்சி.



(வலது பக்கம்)
பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து மன்னர்பிரான் தம்பதிகள் மகுடாபிஷேகத்திற்குப் புறப்பட்டுச் சென்ற காட்சி.

நோயற்ற வாழ்வு

# நீரில் மூழ்கிப் போவதும் அதன் பரிஹார முறையும்

(வைத்தியரத்ன பண்டித எம். துரைசாமி ஐயங்கார் ஆயுர்வேத பூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது.)

## மூச்சுத்திணறல் என்றால் என்ன?

தண்ணீருக்குள் தேஹம் முழுவதும் அமிழ்ந்து போவதால் மூச்சுத்திணறியேற்படும் பிராணாபாய நிலைமையைக் கருதியே, நீரில் அமிழ்ந்துவிடும் நிலைமையைப்பற்றி ஆரோக்கிய சாஸ்திரத்தில் இவ்விஷயம் முக்கியமாக விவஹரிக்கப்படுகிறது. எந்தத் திரவ பதார்த்தம் ச்வாஸ மார்க்கங்களை நிரப்பி, சுத்த வாயு புப்புஸங்களென்கிற ச்வாஸாசயங்களிற் புகமுடியாமற் செய்தாலும் நீரில் அமிழ்ந்துவிடுவதாலாகும் நிலைமையே நமக்கேற்படும். ஆகாயத்திலிருந்து சுத்த வாயுவை ச்வாஸிப்பது ஆரோக்கியத்துக்கும், உயிர் வாழ்வதற்கும் எவ்வளவு இன்றியமையாததென்பது அனைவரும் அறிந்த விஷயம். அவ்வாயு சில நிமிஷங்கள் வரையில் உச்சுவஸிக்கப்படாமல் தடுக்கப்பட்டாலும் அது பிராணஹானிக்கு ஆஸ்பதமாகும் என்பதையும் நாம் அறிவோம்.

## நீரில் வீழ்ந்தால் என் மூழ்குகிறோம்?

நீஞ்சத் தெரியாத ஒருவன் நீரில் வீழ்ந்துவிட்டால் அவன் முதலில் தண்ணீரில் ஆழத்தில் அமிழ்ந்துவிடுவான்; நீர் நிலை அதிக ஆழமில்லாததாக இருந்தால், தரைமட்டம்வரையில் அமிழ்த்தப்படுவான்; ஆனால் பிறகு வெகுநேரம் அடியில் அமிழ்ந்திருக்கமாட்டான். தண்ணீரினும் வாயு இலேசாகையால், நீரிலமிழ்ந்தவனது ச்வாஸகோசங்களில் ஏற்கனவே அடைந்திருந்த வாயு தண்ணீருக்குமேல் தேஹத்தைக் கிளப்ப முயலுவதால், உடனே மீண்டும் மேலே நீர்மட்டத்திற்குத் தரைமட்டத்திலிருந்து இயற்கையிற் கிளப்பப்படுகிறான். ஜலமட்டத்திற்குக் கீழ் போகாதபடி அவன் போராடித் தத்தளிப்பதற்குச் செய்யும் ஆயாஸத்தினாலேயே ச்வாஸாசயத்திலுள்ள வாயு அளவிற் குறைந்துவிடுவதால், மீண்டும் அமிழ்ந்துவிடுவான்; புப்புஸங்களில் வாயு பூராவும் வெளிப்பட்டு, அவை தண்ணீரால் முற்றிலும் நிரப்பப்படுமளவும் முற்கூறியவாறு பல முறை அடியில் அமிழ்ந்து போவதும், மேலே கிளம்புவதுமான அவஸ்தை இருந்து வரும். தண்ணீரில் ஒவ்வொரு தடவையும் அமிழ்ந்துவிடும்போது ச்வாஸப்பைகளில் நீர் புகுந்து, வாயு வெளிப்படுமாகையால், அப்பொழுது அவ்வாயு குமிழிகளுருவாக வெளிவருவதைப் பார்க்கலாம்; ச்வாஸாசயத்தில் வாயு நீங்கி தண்ணீர் அடைபடவே, வரவர உடலின் கனம் அதிகரிப்பதால், உணர்ச்சியிழக்கப்பட்டு உடலசைவு முற்றிலும் அற்றுப் போவதால், தேஹம் தண்ணீருக்கடியில் முடிவாக அமிழ்ந்துபோகும். அந்த க்ஷணத்திலேயே அத்தேஹத்தைத் தண்ணீரிலிருந்து தாமதமின்றியெடுத்துப் பார்த்தால், மார்பில் உயிரிழையின் அசைவு ஓரளவு இருப்பதை நாம் உற்று நோக்கலாம்; ஆனால், அதிவிரைவில் முழுப் பிரயத்தனத்துடன் ஸாமர்த்தியமான பரிஹாரம் செய்தாலன்றி, தழுதழுத்துப் போன அவ்வுயிர் க்ஷணத்தில் நீங்கிவிடும்.

## இரத்தம் அசுத்தமாய் உயிர் நீங்கும்

நீரில் அமிழ்ந்துண்டாகும் பிராணாபாயத்தில் முக்கியமாக இரத்தம் விஷத்தன்மையடைவதால், மரணம் ஏற்படுகிறது. சாதாரணமாக நம் உடலிற் பாவியுள்ள இரத்தம் அப்போதைக்கப்போது அசுத்தமானாலும், அது அடிக்கடியும் ஸிரைகளென்கிற காரிரத்தக் குழாய்களின் மூலமாய் ச்வாஸாசயம் சென்று, அங்கு வெளியிலிருந்து வந்துள்ள சுத்த வாயுடன் கூடி, அசுத்தங்களை நாசிவழியாய் வெளியாகும் வாயுவில் கலந்து வெளிப்படுத்தி மீண்டும் சுத்தமடைகிறது நீரில் அமிழ்வதால் காண்பதுபோலவே, வேறு எக்காரணத்தினாலாகிலும் வெளியில் ஆகாயத்திலுள்ள சுத்தவாயு உட்புகாதபடி ச்வாஸமார்க்கம் அடைபட்டுப்போனாலும், வாயுவினால் இரத்தம் சுத்தமாகும் வேலை முற்றிலும் நடைபெறவகையில்லாமல், சுத்த இரத்தத்திற்குப் பதிலாக அசுத்த இரத்தம் உடலெங்கும் பரவ, மூளையும் நரம்பு மண்டலங்களும் உடனே அவ்விஷத்தினால் தாக்கப்பட்டு, உணர்ச்சியும் மனோவலிமையும் மழுங்கி அழியத்தலைப்பட்டு மரணம் நேரிடுகிறது.

## மூழ்கியபின் உயிர் நீங்கும் கால அளவு

நீரில் அமிழ்ந்துவிட்ட பின் உயிர் நீங்காது தொடர்ந்திருக்குங் கால அளவு அந்தந்த மனிதனுக்கேற்றவாறு வித்தியாஸப்படுகிறது. தண்ணீரில் மூழ்கிய பிறகு ஒன்று அல்லது இரண்டு நிமிஷங்களில் உயிரிழக்கப்பட்ட ஸம்பவங்களும் உண்டு. அப்படிக்கின்றி மூழ்கியபிறகு எட்டு அல்லது பத்து நிமிஷங்களுக்குப் பிறகும் பிராணன் நீங்காது பிழைத்தெழும் பேர்வழிகளும் பலருண்டு. அபூர்வமாக நீரில் அமிழ்ந்து பதினைந்து அல்லது இருபது நிமிஷங்கள் சென்ற பின்பும் உயிர் பிழைத்தெழுந்தவர்களையும் பார்த்தும்கேட்டுமிருக்கிறோம். பொதுவாகவே தண்ணீரில் அமிழ்ந்த தேஹம் ஏழெட்டு நிமிஷங்களுக்குள்ளாகவே வெளிப்படுத்தப்பட்டு, ஏற்ற பரிஹாரங்களைத் தாமதமின்றி நிறைவேற்றினால் மழுங்கிய உயிர் மீண்டும் தூண்டியெழும்.

## நீரில் மூழ்கியவனுக்கேற்படும் அவக் குறிகள்

ஜலத்தில் மூழ்கி மூச்சிழந்ததாகத் தோன்றும் மனிதனைத் தண்ணீரிலிருந்து வெளிப்படுத்திய பிறகு சரீரமுழுவதும் சர்மமானது மிகக் குளிர்ந்து வெளிறிப்போய் காரீயம் போன்ற வட்டங்களுடன் ஒரு வகை நிற மாறுபாடு ஏற்பட்டிருக்கும்; முகத்தோற்றத்தில் விகாரம் விசேஷமாகக் காணப்படுவதில்லை; கண்கள் பாதி மூடியவாறிருக்கும்; கண்தாரை அகன்றிருக்கும்; நாக்குத் தடித்து வீங்கியதுபோல் முன் வந்திருக்கும்; உதட்டிலும் நாசித்வாரங்களிலும் நுரைத்த சளி அடைந்திருக்கும். விரல்கள் சில சமயம் சிதைந்து அறுபட்டிருப்பதுண்டு; அத்துடன் தண்ணீரில் தரைமட்டத்தில் அமிழ்கையில் தாவி வலித்துத் தத்தளிக்க நேரிடுவதன் பயனாய் தண்ணீருக்கடியிலிருந்து சிறு கற்களும் வேறு வஸ்துக்களும் கைகளிற் சிக்கியிருக்கும் உட்புறத்தில் தொண்டையில் உபஜிஹ்வா என்கிற உள்நாக்கு மேலுக்கெழும்பி அடைத்துக் கொண்டும், இரத்தங்கலந்த நுரைத்த கோழை ததும்பிக்கொண்டும் இருக்கக் காணலாம். இந்த நிலைமையில் இருதய கோசத்தில் இரத்தம் அடைந்து வெளிப்படாது. அவ்வவயவ வேலையும் நின்றிருப்பதோடு, மூளை முதலிய ஜீவாதாரமான உட்புற அவயவங்கள் அசுத்த ரத்தச் சேர்க்கையினால் கெட்டுப் போகுந்தருணத்திற்கு வந்திருக்கும்.

## பரிஹார முறைகள்

எவ்வகையிலேனும் மூச்சடைந்து மூர்ச்சித்திருப்பவருக்கும், ஜலத்திலமிழ்ந்து பிராணாபாயமடையும் நிலைமையிலிருப்பவருக்கும் இராஜ மார்த்தாண்டம் என்னும் வைத்திய நூலில் பரிஹாரமுறை இவ்வாறு கூறப்படுகிறது. “ச்வாஸமார்க்கம் அடைபட்டுப் போனால், அதிலும் முக்கியமாய் தண்ணீரில் மூழ்கிப் போய் அவ்விதம் நேர்ந்திருந்தால், இன்னும் க்ஷண நேரத்தில் அவன் உயிர்துறக்குந் தருவாயில் இருக்கையில், வாயில் நுரை தப்பும்; அப்பொழுது ஒருசிறிதும் தாமதிக்காமல் அவனைக் குயவனுபயோகிக்கும் சக்கரத்தில் ஏற்றி, வெகு ஜாக்கிரதையாகச் சுற்றலாம்; சூடான நீரை வாறி முகத்தில் வீசியிறைக்கலாம்; தலை கீழாகத் தூக்கி ஆட்டலாம், முகத்தினுள் அடைந்துள்ள கோழை முதலிய அடைப்புகளையும் தகுந்த உபாயங்களால் வெளிப்படுத்த வேண்டும்; இவ்வுபாயங்களால் ச்வாஸமார்க்கத்தில் அடைந்துள்ள தண்ணீர் வெளிப்பட்டு, ச்வாஸம்விட வகையேற்படும். இக்காலத்திய சாஸ்திரஞர்கள் அனுபவரீதியில் பலவேறு உபாயங்களை நீரில் மூழ்கியவனை உயிர்ப்பிப்பதற்காகக் கையாளுகிறார்கள். முதன் முதல் மேனாட்டாரில் டாக்டர் மார்ஷல் ஹால் என்னும் சாஸ்திரஞர்தான் இவ்வபாய நிலைமைக்கு அனுகூலமாய் அனுபவ ரீதியான சில முறைகளை அறிந்து வெளியிட்டார். அவையாவன. (1) இவ்வாபத்துக்குள்ளாகுமவனை ஒரு நொடிப் பொழுதும் தாமதிக்காது அதே இடத்தில் சிகித்ஸிக்க வேண்டும்; மழை தூற்றல் இல்லாதவரையில்திறந்தவெளியில் நல்ல வாயு முகத்தில் வீசுமாறு உடல் முழுதும்—முக்கியமாய் முகம், கழுத்து, மார்புகள்—திறந்து படுக்க வைக்கவேண்டும். (2) கைதேர்ந்த வைத்தியரை ஸாத்யமான வேகத்துடன் போய் அழைத்துவர வேண்டும்; அவ்விதமே அதிவிரைவில் துப்பட்டி, உஷ்ணந்தரக்கூடிய வேறு உடைகள் முதலியவைகளையும் கொண்டுவர வேண்டும். (3) வெகு அமைதியாகப் பிணியாளியைக் கவிழ்த்துப் படுக்கவிட்டு, அவனது நெற்றிக்கு அடியில் அவனது கையையாவது வேறு மிருதுவான வஸ்துவையாவது வைத்துத் தலை சிறிது உயர்ந்தாற் போலிருக்கச் செய்யவும்; அப்படிச் செய்வதால் வாந்தி முதலிய பிரயத்தனத்தினால் வாய்



சமீபத்தில் ஸத்தியாக்ரஹம் நடந்து முடிந்த பூனவிலுள்ள சோனயா மாருதி கோயில்.

நாசிகளிலிருந்து நீர்கள் எளிதில் வெளியாக அனுகூலம் ஏற்படும்; வைத்தியர் உடனே வரவேண்டியது அவசியமானாலும், அவர் வருமளவும் காத்திருக்கக்கூடாதாகையால், ச்வாஸ வேலையைத் துரிதப்படுத்துவதற்கான இவ்வுபாயங்களை அனைவரும் அறிந்து அரைக்ஷணமும் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும். (4) ச்வாஸ வேலையைத் தூண்டுவதற்காகப் பிணியாளியை ஒருக்களித்துத் திருப்பி மூக்குத் தூளையாவது வேறு கார்மான அவ்வித நஸ்யத்தையாவது நாசியினுள் போடலாம்; முகத்தையும், கழுத்தையும் சூடுண்டாகத் தேய்த்துத் தண்ணீரையாவது பனீரென்று முகத்தில் வீசலாம் (5) இதில் பலனில்லையென்று தெரிந்தால், மனச் சோர்வடையாமல் உடனே பிணியாளியைக் கவிழ்த்துப் படுக்கவிட்டு, நாக்கை மெதுவாக வெளியில் தள்ளி, வாயினுள் வாயு புகும்படியாகச் செய்வதால், உச்சுவாஸ வேலைக்கு (உள்ளே வாயு செல்வதற்கு) அது அனுகூலமானதாகும். மீண்டும் மெதுவாக ஒருக்களித்துவிட்டால், அது நிச்வாஸத்தை (மூச்சுக்காற்று வெளியாவதை) தூண்டும். (6) பிறகு பிணியாளியை நிமிர்த்தி, இரண்டு தோள்களையும் அழுந்தி அநேக முறை முன்னும் பின்னுமாக அசைத்து ஆட்டி உச்சுவாஸ-நிச்வாஸங்களை நடைபெற செயற்கை முறையை விரைந்து விரைந்து நடப்பிக்கவேண்டும்; அப்படியே அடிக்கடியும் மார்பின் இருபுறங்களை அழுத்தியும் அகலச் செய்வதும் அவ்வேலையைத் தூண்டவேண்டும். (7) இதே ஸமயத்தில் மார்பிலும் கழுத்திலும், முதுகிலும் நன்கு உஷ்ணமுண்டாகக்கூடிய வகையில் விரைந்து விரைந்து தேய்த்துச் சூட்டையும் விருத்தி செய்யவேண்டும். கை-கால்களைக் கீழிருந்து மேற்பக்கமாக அழுத்தி உருவித்தேய்ப்பதால், சூடு ஏற்பட்டு, இரத்த ஓட்டத்துக்கும் அது தூண்டுதலாயிருக்கும். (8) போர்வை முதலியது வருவதற்குச் சிறிது தாமதமானாலும், பக்கத்திலிருப்பவர் தமது உடைகளைக் கொண்டு பிணியாளிக்குக் கீழ் விரிப்புகளையும், மேலே போர்வைகளையும் போட்டு, ஈரத் துணி ஏதும் அவன்மேல் இல்லாமற் செய்து உடலுக்குத் துரிதமாக உஷ்ணமேற்படுவதைத் தூண்டவேண்டும். மேலே கூறிய எல்லா உபாயங்களையும் வெகு தைர்யமாகவும், புத்திசாலித்தனமாகவும், அதிதுரிதமாகவும், செய்தால் நீரில் மூழ்கி அபாய நிலைமையிலிருப்பவரை அநேகமாய் பிராணபாயத்திலிருந்து நிச்சயமாய் மீட்சி பெறச் செய்யலாம். தண்ணீரிலிருந்து எடுத்ததும் அதே இடத்தில் முற்கூறிய முறைகளைச் செய்யவேண்டுமேயன்றி பிணியாளியை வேறு ஸௌகர்யமான இடத்திற்குத் தூக்கியெடுத்துச் செல்ல முயற்சி செய்வது முற்றிலும் அபாயகரமான பலனையே விளைவிக்கும்.

கடலிலும், குளங்களிலும், கிணறுகளிலும், ஆறு மடு முதலியவற்றிலும் ஆழந்தெரியாது இறங்கியோ, நீஞ்சத் தெரியாமல் நழுவி விழுந்தோ அநேகர் அபாயமடைவதை நாம் பார்த்தும், பத்திரிகை முதலியவற்றின் வாயிலாக வாசித்துக் கேட்டும் வருகிறோமாகையால், நீரில் வீழ்வதால் ஏற்படும் அபாயவகைகளையும், அவ்வபாயத்திலிருந்து அதற்குள்ளானவர்களை மீட்கும் உபாய முறைகளையும் அனைவரும் அறிந்திருத்தல் அவசியமெனக் கருதி இக்கட்டுரையை எழுதலானேன்.

**பத்மராஜு**
**விலை ரூபா 1—8—0**
மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை

பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யப்படும்
விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

# மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால் ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்தியை உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம், நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமையுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரம்மைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினால், ஒரே வினாடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.



**விலை ரூ. 2. தபால் கூலி அணா 8.**

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.

சென்னை ஆயுர்வேத கலாசாலையிற் பயின்று டிப்ளோமா பெற்றவரும், எஸ். கே. பி டி. ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டராயிருந்தவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்தியக் கலாசாலைப் பரீக்ஷகரும், ஸிலோன் வைத்தியக் கல்லூரி பரீக்ஷக போர்டின் பிரஸிடெண்டும், அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீட பரீக்ஷகரும். அநேக ஆயுர்வேத காவ்ய நாடகாதி கிரந்தங்கள் இயற்றியவருமான,

வைத்திய ரத்னம்

**பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. வி. எஸ்.**

**ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதசார்ய அவர்களுடைய ஔஷதங்கள்**

ஆயுஷ்ய ரஸாயனம் எவ்வித பலஹீனத்தையும் நீக்கும். தேஹ புஷ்டியையும், மூளைச் செழிப்பையும், ஹ்ருதய பலத்தையும் தரும். நரம்புத் தளர்ச்சியை நீக்கும். தேனினும் இனிக்கும்.
புட்டி ரூ. -4-0.

அஜீரண கேஸரி இரைப்பையில் புளிப்பு, புளித்த ஏப்பம், மார்பு எரிவு, வயிற்றுப்புசம் முதலிய தொந்தரவளிக்கும் கடுமையான அஜீர்ணங்களில் பலன் தரத்தக்கதென்று உபயோகித்துப் பரீக்ஷிக்கப்பட்ட சூர்ணம் டப்பா 1-க்கு ரூ. 2-8-0.

ஹரீதக்யாதி லேஹ்யம் எவ்வித மலச்சிக்கலுக்கும் திவ்யௌஷதம் லிவர்என்கிற கல்லீரலைத்தூண்டி, பித்தத்தை வெளிப்படுத்தி, காமாலை முதலியதையும் தணிக்கும். கர்ப்பிணி முதல் அனைவரும் உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3-0-0.

லோஹாஸவம் இரத்தத்தைத் துரிதமாய் விருத்தி செய்யும் அயத்திராவகம். குழந்தை முதல் அனைவருக்கும் ஏற்றது. இரத்தக் குறைவு, பலஹீனம், தோலைப் பற்றிய வியாதிகள் முதலியவை தீரும்.
1 பவுண்டு ரூ 3-12-0.

விடங்காரிஷ்டம் கீல் வாயுவுக்கு மிகப் பிரசஸ்தமான திராவகம். நீர்க்கடுப்பு முதலியவற்றையும் நீக்கும். பொதுவாக வாயுரோகங்களில் உபயோகிக்கக்கூடிய சிறந்த மருந்து. 1 பவுண்டு ரூ. 5.

காஸஹரா ரஸாயனம் இருமல், மார்ச்சளி, நாட்பட்ட ஜலதோஷம், ச்வாஸ-காஸம், டான்ஸிலைடிஸ் என்கிற தொண்டை வீக்கம், கக்குவான் ஆகியவை இதனால் முற்றிலும் குணமடைந்திருக்கின்றன. எவ்வயதினரும் உபயோகிக்கலாம் இனிய சுவை.
புட்டி ரூ. 2-8-0.

**வேறு ஸகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும்.**

**ஆர்யன் பார்மஸி,**

"ஆர்ய க்ருஹம்" 11, ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, மதராஸ்

## PASSED MATRIC

பம்பாயிலிருந்து மிஸ்டர்.......... எழுதுவதாவது: "நான் மெட்ரீக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் "மூலிகை"யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்."

"திபெத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0.
2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0
3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0
4. வியாதிகள் :— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. பரீக்ஷைகள்:-எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0
7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0
8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜுவேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-0-0.

தபால் சார்ஜ் தனி. அணா 8.

**BIJOYA LODGE, (S.W.)**
P. O SALKIA HOWRAH.



### வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். ஙிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.
KAMALA WORKS (S M.)
Panchpota—Bengal, India.




## SAVE YOUR EYE



From ALL TROUBLES, even Cataract.
Try 'SELLER'S LOTUS HONEY
—The nature's own remedy. Absolutely safe. Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free
'L. H. Seller, Samta, Bengal
Beware of imitation—Insist on SELLER'S








Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

## ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.



## "குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
## "பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager- Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD



## குமார சஞ்சீவினி

ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது

☞ வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை



உயர்ந்த
வைரங்கள்

## T. R.
### ஜோஷி & சன்ஸ்,

**Diamond Merchants,**
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.



### மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்:
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

**இதில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.**

ஏனெனில், இது வெகு வசிகரமான ஆயுள் அஷ்யூரன்ஸ் திட்டங்களையும், வியாபாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இன்வெஸ்ட் செய்ய விசேஷத் திட்டங்களையும் வழங்குகிறது.



### ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான25-வது தலைமுறை ஜோதிஷர்-ஸ்ரீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில்



எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா7. ஜாதகக் குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர், N. சுப்பிரமணியம்.
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை



G.கன்னையா கம்பெனி
இரும்புப்பெட்டி வியாபாரம்



137. பிராட்வே மதராஸ்




மன்னர் பிரான் மகுடாபிஷேகத்திற்குப் பிறகு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டுள்ள புதிய ஸ்டாம்புகள்.



இந்தியா, பர்மா, ஸிலோன் ஸ்திரீ சமூக ஊழியர்கள் உதக மண்டலத்திற்குச் சமீபமாயுள்ள தாவனி என்ற படகர்கள் கிராமத்திற்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்.

## நாட்டு நடப்பு சித்திரக் கண்ணுடி



ரங்கூனுக்குக் காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு விஜயம் செய்தபோது ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவரை வரவேற்றனர். அவர்களுக்கு ஜவஹர் பிரதி வந்தனம் செய்கிறார்.



(வலது பக்கம்)

ராஜப் பிரதிநிதியின் இரு குமாரிகள். இவர்கள் சென்ற மெயில் கப்பலில் இங்கிலாந்திற்குச் சென்றனர்.


**தென்னிந்தியப் பிரமுகர்கள்**

### மஹாமஹோபாத்யாய

# ராமசுப்பா சாஸ்திரிகள்

(1837—1922)

(கே. எஸ். ஆர்.)



தென்னிந்தியாவில் மஹாமஹோபாத்யாய திருவிசநல்லூர் ராமசுப்பா சாஸ்திரிகளைத் தெரியாதவர்களே கிடையாது. இப்பெரியார் மஹாமஹோபாத்யாய மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளின் சமகாலத்தவராகவிருந்து, அவருக்குச் சரியாகப் புகழும் பெருமையும் சம்பாதித்துக் கொண்டவர். பிரும்மஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகளும் அக்காலத்தில் நிகரற்ற பண்டிதராகச் சோபித்துவந்தார். இவருக்கும் ஸ்ரீ ராஜு சாஸ்திரிகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டபோதிலும், அவை நம் அறிவு விஸ்தரிப்பிற்காகவே விளங்கி வந்தனவெனக் கூறவேண்டும். இவர் தமது காலம் முழுமையையும் தமது சொந்தக் கிராமத்திலேயே சம்ஸ்கிருதக் கலா வளர்ச்சிக்காகக் கழித்து வந்தார். இவரிடம் படித்துப் பிற்காலத்தில் புகழ்பெற்றவர்கள் அநேகர். ஆயினும் இவர் எழுதிய சில கிரந்தங்கள் காரணமாக இவர் ஒரு வீரசைவர் அல்லர் என்று நமக்குத் தெரிய வருகிறது; தவிர இவரது புத்தகங்களில் காணப்பட்ட அநேகம் விஷயங்கள் அத்வைதிகள் அனைவராலும் ஏகோபித்து ஒப்புக் கொள்ளத்தகாததாகவும் இருக்கின்றன என்பது நிபுணர்களுடைய துணிபு.

#### திருவிசநல்லூர் சிறப்பு

மஹாமஹோபாத்தியாய ராமசுப்பா சாஸ்திரிகள் 1837-ம் வருஷத்தில், தஞ்சாவூர் ஜில்லாவில் காவிரி நதிக்கரையில், பல கோவில்களையுடைய கும்பகோணத்திற்கும் பிரசித்த க்ஷேத்திரமான மத்தியார்ஜ்ஜுனத்திற்கும் நடுவிலிருக்கும் திருவிசநல்லூர் எனும் கிராமத்தில் பிறந்தவர். இந்தப் பிரதேசம் இயற்கை வனப்புமிகுந்ததாகவும், அதிக ரமணீயமாகவும், ஆரோக்கியகரமாகவும் இருப்பதாகவும், மற்றும் இங்கு இருக்கும் அக்கிரஹாரத்தினர்கள் வேதாந்த சாஸ்திரங்களையும் வேதத்தின் அங்கங்களையும் எப்போதும் பயிற்சி பெற்று வருவது மனோல்லாஸமளித்து வருவதாகும். இத்தகைய கிராமத்தில் உதித்த இவர் நம் ப்ராசீன பத்ததிப்பிரகாரம் சம்ஸ்கிருத பாஷையில் பாண்டித்தியத்தை எய்தலானார் என்பது ஆச்சர்யமாகாது. இந்தத் திருவிசநல்லூர் கிராமமானது அநேக வருஷங்களாகவே சம்ஸ்கிருத பாஷைக்கு ஒரு சர்வ கலாசாலையெனப் பலராலும் ஆமோதிக்கப்பட்டுப் பிரகாசித்து வந்தவிடமாகும்.

தஞ்சையை ஆண்டு வந்த ஸஹாஜி மன்னன் கல்விமான்களைத் தாரதம்மியம் பாராமல் ஆதரிப்பதையே கருத்தாகக்கொண்டு, பல பிரசித்த வித்வத்சிகாமணிகளைத் தமது ஆஸ்தானத்திற்கு வரவழைத்தான். பிறகு அவர்களுக்கு மான்யங்கள் அளித்து அவர்களை இந்தத் திருவிசநல்லூர் கிராமத்தில் வசிக்கும்படிச் செய்தான். தவிரவும் இந்தக் கிராமம் பலபெரியார்களது இருப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் அமைந்துள்ளது. பிரும்மசூத்திர விருத்திபோன்ற உயர்ந்த கிரந்தங்களை இயற்றிய ஸ்ரீ சதாசிவேந்திர சரஸ்வதி என்ற மஹாயோகி இங்குதான் வாழ்ந்துவந்தவர். பிரபல ஆங்கில நாடகங்களுக்கு எவ்விதத்திலும் இணையாகக் கருதப்படும் "ஜாநகீ பரிணயம்" என்ற சம்ஸ்கிருத நாடகத்தை எழுதிய ஸ்ரீ ராமபத்திரதீக்ஷிதர்போன்ற மஹா கல்விமானும் "ஆக்ய ஷஷ்டி" தயாசதகம் முதலியவற்றை உலகிற்கு உதவி, ஸ்ரீ அய்யர்வாள் என்று பிரக்யாதிமிகுந்த ஸ்ரீ வெங்கடேசதீக்ஷிதர் எனும் சிறந்த பக்திமானும், பின்பு புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ராஜகுருவாகச் சிறப்புற்றிருந்த மஹாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரியால் என்ற க்ஞாதாவும் இந்த க்ஷேத்திரத்தில் பிறந்து, இதன் பெருமையைப் பலவிடமும் பரவும்படிச் செய்தவர்கள்.

#### பரம்பரைப் பண்டிதர்கள்

நம் ஸ்ரீராம சுப்பா சாஸ்திரிகளின் முன்னோர்களும் பரம்பரையாகவே மஹா பண்டிதர்களாக விளங்கி வந்தவர்கள். இவரது பிதாமஹரான அஸ்வத்த நாராயண சாஸ்திரியார் என்பார் அக்காலத்தில் வித்வந்மணிகளின் பிரதான புருஷராகவிருந்து, யாவராலும் வினயத்துடனும் மரியாதையுடனும் வரவேற்கப்பட்டு பஹுமானிக்கப்பட்டு வந்தவராவார். இந்த மேற்படி சாஸ்திரிகள், ஜனன காலத்தில் முதுகுப் பக்கத்தில் அஸ்வத்த விருக்ஷத்தின் அடையாளத்துடன் பிறந்ததாகவும், பின்னர் அஸ்வத்த விருக்ஷத்தையே பூஜித்து வந்ததாகவும் நாம் அறிகிறோம். இவருடைய நாமத்திற்கு இவையே காரணங்கள் என்றும் ஸ்பஷ்டமாகிறது. இவர் தமது அத்தையின் பதிலான ஸ்ரீ சிவராம சாஸ்திரிகளிடம் சிஷ்யனாகவிருந்து, தமது 30-வது பிராயம் பூர்த்தியாவதற்குள் பூரண வித்துவத்வத்தையடைந்துவிட்டார். இது முதற்கொண்டு இவர் தாம் குருகுல வாஸத்தின் மஹிமையினால் அறிந்த ஞானத்தை யாவருக்கும் போதிப்பதிலேயே கருத்து கொண்டு வாழ்ந்து வந்தார். வித்யாதான விஷயத்தில் இவர் சுயநலம் பாராட்டியதில்லை. தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு இவர் பாடம்கற்பித்துவந்தார்.

இவ்வாறு இவரிடம் பாடம் படித்து, பிற்காலத்தில் பிரசித்தியடைந்த சிஷ்யர்கள் பலர் இருக்கின்றனர். காலஞ்சென்ற பிரும்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய நீலமேக சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய தி. வெங்கடசுப்பா சாஸ்திரிகள், பிரும்மஸ்ரீ நடேச அய்யர் முதலியவர்கள் இவரது சிஷ்யர்களாகவிருந்தவர்கள். மஹாமஹோபாத்யாய நீலமேக சாஸ்திரிகள், திருவையாறு சமஸ்கிருதக் கலாசாலையில் பிரதான அத்யாபகராகவிருந்து சிறப்புற்றவர். மஹாமஹோபாத்யாய வெங்கட சுப்பா சாஸ்திரிகள் மைலாப்பூர் சம்ஸ்கிருத காலேஜின் பிரின்ஸிபாலாகவிருந்து புகழ்பெற்றவர். ஸ்ரீ நடேசய்யர் என்பார் "அத்வைத தரங்கிணீ" எனும் கிரந்தத்தை எழுதி, அத்வைத மதத்தை ஸ்தாபிக்க முயன்றவர்களுள் ஒருவர்.

#### வித்தியாதானம்

இவர் பிறவி முதலிலிருந்தே போதுமான ஸ்திதியுடன் கூடியவராதலால், இவருக்குப் பிறரையண்டி, தமது பாண்டித்திய நிதர்சன மூலம் ஜீவிக்க வேண்டும் என்ற அவசியம் ஒருபோதும் இருந்ததில்லை. சம்ஸ்கிருதக் கலையிலும் வேதாந்தத்திலும் தாம் அளவிலாப் பிரியம் கொண்டிருந்ததுபற்றி, இவர் தம்மிடம் வந்தவர்கள் அனைவருக்கும் தாம் அறிந்ததைக் கற்பித்துவந்தார். இவர் ஒருபோதும் ஆடம்பரத்தை விரும்பியதில்லை. எப்போதும் இவர் மனவமைதியுடனும் திருப்தியுடனும் தமது காலத்தைக்கழித்துவந்தார். இவைகளுடன் இவர் சதா தமது சுயமரியாதையைப் பாதுகாத்து வந்தார். எவரிடமும் இவர் தமது மாசிலாத கௌரவத்தை நிலைநாட்டிவந்தார். தமது காலைவேளை அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டவுடன் இவர் தமது வீட்டுத்திண்ணையில் வந்து உட்கார்ந்துகொள்வது வழக்கம். இங்குதான் அங்கிருக்கும் பண்டிதர்கள் யாவரும் கூடுவது வழக்கமாம். அநேகர் வந்து இவரிடம் புலப்படாத நுணுக்கங்களை விளக்கும்படியாகவும், வேதாந்த விசாரங்களைத் தெளிவாக்கும்

டியாகவும் வேண்டுவது வழக்கம். இவர் பின்பு தம்மிடம் கேட்கப்படும் வினாக்கள் எல்லாவற்றிற்கும் சரியான உத்திரங்களை அளித்து அவர்களது தாகத்தைத் தீர்ப்பது சகஜமாக இருந்து வந்தது. நாலு பக்கங்களிருந்தும் இவரிடம் சிஷ்யர்கள் வந்து குழுமினர்.

வேதாந்தத்திலும் மீமாம்ஸையிலும் இவர் நிகரற்ற அறிஞராகப் பிரகாசித்தனர். சாதாரணமாக மீமாம்ஸா பகுதி மிகவும் கடினமானது. இந்த பூர்வோத்தர மீமாம்ஸைகளை நன்கு அப்யஸித்தவர்கள் இத் தென்பிரதேசத்திலும் வெகு சொற்ப நபர்கள்தான். ஸாஹித்யம், வியாகரணாதிகளை முடித்துக்கொண்டு தம்மை அண்டுவோர்களுக்கு இவர் மீமாம்ஸையையும் போதித்து வந்தார். ஆகவே, இவர் தம்மிடம் படித்த சிஷ்யர்கள் அனைவருக்கும் மிகத் துர்பலமாக வழங்கிவந்த மீமாம்ஸா சாஸ்திரத்தை சம்பூர்ணமாகப் போதித்துவந்தார். பிறருக்குப் போதிக்காமல் தாம் இருந்து வந்த காலத்தில் இவர் வேதாந்தத்தின் புதிய தத்துவங்களில் மிக்க ஈடுபட்டு விசாரிப்பார்; பெரிய கிரந்தங்களைப் பொழுது போக்காக இவர் படிப்பது வழக்கம்.

இத்தகைய விதமாகத் தமது வாழ்நாளை உபயோகித்து வந்த இவர் பிரசித்தியையும் திரவியத்தையும் சிறிதும் அபேக்ஷித்தாரில்லை. இவரது குணாதியங்கள் காரணமாக அக்காலத்தில் அனைவரும் இவரை மிகவும் மதித்து வந்தனர். 1901-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டாரும் இவருக்கு மிகச் சிறந்த "மஹாமஹோபாத்யாயர்" பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.


### நிஷ்பக்ஷபாதி

நம் மஹாமஹோபாத்யாய ராமசுப்பா சாஸ்திரிகள் பண்டிதர்களுக்குரிய உயர்ந்த லக்ஷியங்களையும் லக்ஷணங்களையும் காப்பாற்றி வந்தார். தமது சிஷ்யர்களிடமிருந்து தக்ஷிணை முதலிய ஒன்றையும் அங்கிகரிக்க மறுத்துவிட்டார். ஆனால், இவர் தம்மிடம் படித்த ஏழை சிஷ்யர்களுக்குத் தாமும் மற்றும் சில கனவான்கள் மூலமாகவும் போஜன வசதி அளிக்க ஏற்பாடுகள் செய்து வைத்தார். இவரது சலுகை காரணமாகக் கிராமத்தினர் வித்தியார்த்திகளுக்குச் சாப்பாடு போட ஒப்புக்கொண்டனர். வேதாந்த சாஸ்திரத்தை, ஒரு பிரதியையாவது தன் ஸஹாயத்தையாவது அபேக்ஷித்துப்போதிப்பது தகாதது என இவர் நம்பினார். ரஸிகர்களாலும் மற்றும் இதரர்களாலும் மிகவும் சந்தோஷத்துடன் பாராட்டப்ப... தமது சம்பாஷணைகளில் ... இங்கு பழையபடிக் கு... வாஸ முறையானது ... பிக்கப்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி வந்தார். இவருக்கு அசூயை முதலிய துர்க்குணம் கிடையாது; தவிரவும் இவருக்கு ஒரு விஷயத்திலும் அதிக வைரம் இருந்தது கிடையாது. விஷய விசாரணை சம்பந்தமாக இவர் பலவற்றைக் கண்டித்திருக்கக்கூடும். இவருடைய முடிவுகளை அநேகர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவை இவரது நிஷ்பக்ஷபாதமான கொள்கைகளையே கோஷிக்கின்றன. இவருக்கு ஸ்ரீ விசிஷ்...த்வைத சித்தாந்தத்தில் அதிகப் பற்றுதல் இருப்பதாக அநேகர் அபிப்பிராயப்பட்டு வந்தனர்; இந்த எண்ணமே பல அத்வைதிகள் இவரது முடிவுகளை நன்கு பாராட்டாமலிருந்ததற்குக் காரணமாகும். இவர் தமக்குச் சரியெனப் புலப்பட்டவற்றை நிர்ப்பயமாக வெளியிட்டு வந்தார். மற்றும் இவர் எல்லாப் பழக்கவழக்கங்களையும் ஒப்புக்கொள்ளவில்லை; ஸ்ருதி ஸ்மிருதிகளால் நிச்சயிக்கப்பட்டவைதான் இவரது சம்மதத்திற்கு ஆஸ்பதமாயின. மூட பழக்கவழக்கங்களையெல்லாம் அனுஸரிப்பதில் இவர் நம்பிக்கையற்றிருந்தார்.

### விக்ரகாராதனைபற்றி விவாதம்

பல வருஷங்களுக்கு முன்பு இவர் காசி முதலிய வடதேச க்ஷேத்திரங்களுக்கு யாத்திரையாகச் சென்றிருந்தபோது, இவர் ஆர்ய சமாஜ ஸ்தாபகரான தயாநந்த சரஸ்வதியுடன் "விக்ரகாராதனை" பற்றி வாதத்திற்கழைக்கப்பட்டார். அப்போது இந்த வாதத்தின் சாரம் பல பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டனவாயினும்,

லக்ஸ் சலவையில் நீங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டுவது :



நிறைய லக்ஸ் நுரையை உண்டாக்கவும் (மெல்லிய வஸ்திரங்களுக்கு குளிர்ந்த ஜலமே வேண்டும்.



உடைகளை லக்ஸ் நுரையில் அழுக்குப் போகும்வரை மெதுவாக கசக்கவும். மெல்லிய வஸ்திரங்களை சீக்கிரம் சலவை செய்யவும்.



மும்முறை குளிர்ந்த ஜலத்தில் அலசவும்.



உலர்ந்த டவலில் சுருட்டி ஈரத்தைப் பிழிந்து காற்றோட்டமான இடத்தில் உலர்த்தவும். துவைத்த உடைகளை வெய்யிலிலோ, உஷ்ணமான இடத்திலோ உலர்த்தவேண்டாம். மேலங்கிகளை கொடிகளில் உலர்த்துவது நலம்.




உங்களுடைய சகலவிதமான உடைகளுக்கும் லக்ஸ் உபயோகமானது. அதிநுட்பமான உடைகளையும் பத்திரமாகச் சலவை செய்யலாம்.

மலிவான மட்ட சோப்புகளும், சூடான தண்ணீரும், உங்கள் உடைகளைக் கெடுத்து, சாயத்தையும் மாற்றுகிறது. நூலிழைகளையும் கெடுக்கின்றன.

லக்ஸ் குளிர்ந்த ஜலத்திலேயே கரைந்து, உடைகள் கெடாத வண்ணம் சலவை செய்கிறது. இந்த சலவையில் அடித்துத் துவைக்க வேண்டியதில்லை யாதலால், மேலங்கி முதலியவைகள் உருமாறாமல் அழகாக இருக்கின்றன.

LUX லக்ஸ்

லக்ஸ் சுத்தமான தாவர எண்ணெய்களினால் இந்தியாவில் செய்யப்பட்டது.




லக்ஸ் குளிர்ந்த ஜலத்திலேயே உபயோகிக்கலாம்.

X-LX 546/2-288A

LEVER BROTHERS (INDIA) LIMITED
TAMIL

தற்சமயம் அவை ஒன்றும் நமக்கு அகப்படவில்லை. ஆனல் நம் சாஸ்திரிகளுடன் சென்றிருந்தவர்களிடமிருந்து இவ்விரு வித்வான்களும் ஒருவர் மற்றொருவருடைய அபார வித்வத்துவத்தைக் கண்டு வியப்புற்றதாகவும், இக்காரணம் பற்றி இருவரும் மிகுந்த சந்தோஷத்தை யடைந்ததாகவும் நமக்குத் தெரிகிறது. இவருக்கு வாதத்தில் விசேஷத்திறமை யுண்டு. எந்த சமாசாரத்தையும் தெளிவாக எடுத்துச் சொல்லும் சக்தியும் இவரிடம் அமைந்திருந்தது. இவரது பிரசங்கங்களைக் கேட்பதே ஒரு விருந்து என யாவரும் எண்ணி வந்தனர்.

### எழுதிய கிரந்தங்கள்

மஹாமஹோபாத்யாய ராம சுப்பா சாஸ்திரிகள் சில கிரந்தங்களையும் இயற்றிவைத்தார். மீமாம்ஸா சம்பந்தமான "பாட்டதீபிகை" என்ற கிரந்தத்திற்கு இவர் "பாட்ட கல்பதரு" என்கிற வியாக்யானத்தை எழுதி வைத்தார். இவர் எழுதிய "சர்வமத சங்கிரஹ விலாசம்" எனும் கிரந்தத்தில் இத்தேசத்தில் வழங்கி வரும் வல்லப சக்தா முதலிய மதங்களைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. "முக்தி சுலப சோபனம்" என்ற ஒரு நூலும் இவரால் எழுதப்பட்டது. "பாஷ்ய காம்பீர்ய நிர்ணயம்" என்ற சிறந்த கிரந்தத்தில் இவர் ஸ்ரீ சங்காராசார்யர் அத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபித்து எழுதிய பாஷ்யத்தில், ஸ்ரீ விசிஷ்டாத்வைதத்தையும் ஸ்தாபித்துள்ளார் என்பதை நிரூபித்திருக்கிறார். இவர் "சந்திரிகா கண்டனம்" என்ற கிரந்தத்தையும் எழுதினர். இது மத்வ மதத்தைப் பற்றியதாகும். ஸ்ரீ மதவாசார்யரின் சூத்ர பாஷ்யத்திற்கு விருத்தியுரையான "தத்துவப் பிரகாசிகை"க்கும் வியாக்யானமான வியாஸராயாச்சாரின் "தாத்பர்ய சந்திரிகை"யை இவர் நூலில் கண்டித்தார். மைசூர் ஸ்ரீ அனந்தாழ்வான் எழுதிய "நியாய பாஸ்கர"த்திற்கு,தர்க்க ரீதியில் இவர் ஒரு கண்டனம் எழுதினர். இவை தவிர இவர் "பஸ்ம ருத்ராக்ஷ தாரண கண்டனம்" என்ற புத்தகத்தையும் எழுதினர். இதில் இவர் விபூதியையும் ருத்ராக்ஷத்தையும் அணியக்கூடாது என்று ஆதாரங்களுடன் எழுதினர். ஆனல், "ஊர்த்வபுண்ட்ர தாரணம்" அதாவது கோபி சந்தனத்தை நேராக இட்டுக்கொள்ளுதல்தான் தகும் என்றும் இவர் எழுதினர். தாம் நம்பிய விதத்தையே இவர் அனுசரித்து வந்தார். இந்தக் கடைசி கிரந்தமானது அநேகமாக இவரது ஸ்வஜாதியர்கள் பலரால் வெகுவாகக் கண்டிக்கப்பட்டது. மன்னார்குடி ஸ்ரீராஜு சாஸ்திரிகள் முதலானவர்கள் இவரைக் கண்டித்தனர். இப்புத்தகங்கள் யாவும் அத்வைதிகளின் அபிமானத்தைக் கவர்ந்தது கிடையாது.

இவர் கும்பகோணம் அத்வைத சபா விஷயமாகவும் சிரத்தைகொண்டு வாழ்ந்து வந்தார். 1912-ல் நடைபெற்ற அத்வைத சபைக்கு இவர் அக்கிராஸனாதிபதியாக விருந்தார். ப்ரௌடா விவாகம், விதவா விவாகம் முதலியவற்றை இவர் மிகவும் கண்டித்தார். இவ்வாறு மிகுந்த சிறப்புடன் விளங்கிவந்த மஹாமஹோபாத்யாய ராமசுப்பா சாஸ்திரிகள் 1922-ம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ம் தேதியன்று, மிகுந்த வார்த்திக தசையில் தேக வியோகமானர். இவரது மரணத்தினல் தென்னிந்தியா ஒரு ஜாஜ்வல்யமான ஜோதியை இழந்தது.

* * * *


**பயனற்றவை வேண்டாம்.**

இந்த ஆயிலை உபயோகித்தால் தலை நரை ஏற்படாது; வெள்ளை மயிர் கறுமை பெறும். தவறினல் இரட்டிப்பு விலையைத் திருப்பிக் கொடுக்க உத்தரவாதம். பாதி நரைக்கு ரூ. 5; அதிக நரைக்கு ரூ. 9. BAL KALA STORES., P. O. Kansisimri, (Darbhanga.)

**அபார சக்திவாய்ந்த டானிக்!**

**S.K.M.**

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

**மகரத்வஜம்**

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915-ஆ) 289, எஸ்பிளனேட் மதராஸ்.

**இது ஓர் ஆச்சரிய ஜோதிடம்!!!**

ஆண் பெண் சகல மதஸ்தர்களுக்கும இல்வாழ்க்கை திறவுகோல் இதுவே! தங்கள் எண்ணத்தை எனக்கு தெரிவிக்காமலே ஜனன காலம் தேவை அல்லது எனக்கு கடிதம் எழுதும் நேரம் எழுதவும். திரிகால பலனை தங்களுக்கு அறிவிக்க ரூ. 2-0-0. தங்கள் எண்ணத்தை தெரிவித்து 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1—0—0. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன் எழுத ரூ. 5-0-0 இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10-0-0 வி. பி. பிரத்தியேகம்.

ரா. முத்துவேல் முதலியார், கலைமகள் ஜோதிடம், தேரடி வீதி,
48 நெ, திருப்பாபுலியூர் (தென் இந்தியா)



**துளி இரத்தம் சிந்தவில்லை!**


வாளால் வெட்டினபோது கூட

காரணம் ரத்தமேயில்லை!

இரத்தமின்மையும், ஜீவசக்திக் குறைவும் மறைந்தொழியும்; உங்கள் தேகத்தில் 100-க்கு 100 இரத்தம் நிறைந்து நிற்கும் வலுவான தசைகளும், ஆரோக்கிய வாழ்வும் ஏற்படும் எப்பொழுது—

**அமிர்தா அருந்தினல்**

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.



**தொட்டிலிலுள்ள குழந்தை ஆடவேண்டுமே யொழிய அழக்கூடாது.**

சின்னஞ் சிறு குழந்தைகளின் ஆரோக்யம் ஈரல் (லிவர்) குலை (ஸ்ப்லீன்) இவ்விரு கோசங்களின் ஸ்திதியைப் பொருத்தது இவையிரண்டும் பெருக்காமலும், வீக்கமடையாமலும் இருக்குமளவில் குழந்தைகள் உற்சாகத்துடன் ஆடி விளையாடுகின்றனர். ஏதேனும் காரணத்தால் அவை பெருத்து வியாதி யடைந்தால் குழந்தைகளின் ஜீவிதமே கஷ்ட நிலைமையை யடைகின்றது. குழந்தைகளின் உயிரையே பாதிக்க வல்ல ஈரல் குலைக்கட்டிகளினின்றும் ரக்ஷிக்கவல்லது "பால பாஸ்கர"வே.

"பால பாஸ்கர" உபயோகித்தால் லிவர் ஸ்ப்ளீன் வியாதிகள் மாயமாய் மறைகின்றன.

எல்லா மருந்து ஷாப்பிலும் கிடைக்கும். கேட்லாக் இனும்.

**பாலபாஸ்கர**

(ஈரல் குலைக்கட்டிகளு[illegible] நிவாரணி)

ஆயுர்வேதாஸ்ரமம், [illegible]ஸ்தாபிதம்: மதராஸ்

# கரும்பூதம்

அல்லது

## கள்வனைக் காதலித்த காரிகை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வமயம் செல்வி நளினம் உள் நுழைந்து "அண்ணா! உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது! தபால்காரன் சற்று முன்புதான் கொடுத்துவிட்டுச் சென்றான்!'' என்று வீணாகானத்தைப்போல் இனிமையான குரலில் கூறினாள்.

"சனியனைக் கிழித்து அடுப்பில் கொண்டுபோய்ப்போடு! படுக்கையை விட்டெழுந்தால் இந்தத் தொல்லை விடுவதே கிடையாது!'' என்று சீறினார் பிரபு.

செல்வி நளினம் அவரது வார்த்தைகளைக் கொஞ்சமும் சட்டை செய்யவில்லை. ஏனெனில், முன்னொருமுறைபிரபுவின் வார்த்தையை உண்மையென நம்பிக்கொண்டு அதன்படியே செய்த காலத்தில் "சபாஷ், நளினா, சபாஷ்! உன்னுடைய திருக்கரத்தினால் தீயிடப்படுவதற்காகத்தான் எனது நண்பர்களெல்லாம் காசைச் செலவு செய்து கடிதங்களை எழுதுகின்றார்களென்று நினைத்தாயோ?'' என்று அவர் ஏசியதை செல்வி நளினம் மறந்தவளல்ல. சுதர்சனம் பிரபுவிற்கு செல்வி நளினத்தைக் கண்முன்பாகக் காணும் பொழுதெல்லாம் கடுகடுப்புடன் பேசுவது சுபாவமாகப் போய்விட்டது. ஆகையால் அவருடைய கடுஞ்சொற்களைக் கேட்டுச் சகிக்க கன்னியும் பழகிவிட்டாள். அவள் நேருக்கு நேராகப் பிரபுவிடம் வாக்குவாதம் செய்வதும் கிடையாது.

செல்வி நளினம் காலையிற் கிடைத்த கடிதத்தை முன்போல் தீயிலிட்டுவிட விரும்பாமல் மௌனமாக மேஜையின் மீது வைத்துவிட்டு வெளியேகினாள். சுதர்சனம் பிரபு அதைக் கையிலெடுத்துப் பிரித்துப் பின்வருமாறு படிக்கலானார்:—

### கடிதம்.

ஆர்வச் சகோதரரே!

அனேக நமஸ்காரங்கள். நேற்றிரவு ஆரிய பவனத்தில் நடந்த சம்பாஷணையைப்பற்றி கேள்விப்பட்டேன். உங்களுடைய மாளிகையிலிருந்து பத்து ரூபாய்க்குமேல் மதிப்புள்ள பொருள் களவாடப்பட்டுவிட்டால் மாதர் மறுமண சகாயச் சங்கத்திற்கு ஒரு பெருந்தொகை நன்கொடையாகக் கிடைக்குமென்பதைச் செவியுற அளவிலா ஆனந்தமடைகின்றேன். ஆயிரக்கணக்கான கைம்பெண்கள் அலறித் துடித்துக்கொண்டிருக்கும் ந[ம்] நாட்டில் இப்படிப்பட்ட சங்கங்களுக்குப் பேராதரவு காட்ட வேண்டுமென்பது அத்யாவசியமானது. இதை நீங்களும் ஒப்புக்கொள்ளுவீர்களென்று உறுதியாக நம்புகின்றேன். கைம்பெண்களுக்குக் களிப்பானதும் கௌரவமானதுமான இல்லறப்பாதையைக் காட்ட அனேகம் ஆண்டுகளாய் அருந்தொண்டாற்றி வரும் விதவா விவாக சங்க அங்கத்தினர்களை நீங்கள் பலமுறை பாராட்டிப் பேசியிருப்பதையும் நான் அறிவேன். துன்பக்கேணியில் துயர்பட்டுக் கொண்டிருக்கும் எனது கைம்பெண் சகோதரிகளுடைய நலனைக்கோரி வருகிற வியாழக்கிழமையன்றிரவு பதினொறு மணிக்கும் பன்னிரண்டு மணிக்குமிடையே உங்களுடைய மாளிகையில் நான் களவாடத் தீர்மானித்திருக்கின்றேன். நீங்கள் ஓட்டலில் செய்த வாக்குறுதியை வெள்ளிக்கிழமையன்று காலை தவறாமல் நிறைவேற்றி வைப்பீர்களென்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

தங்களன்புள்ள சகோதரன்

கரும்பூதம்.

மேற்படி கடிதத்தைப் படித்து முடித்ததும் சில நிமிடங்கள்வரையில் பிரமித்து நின்றார் பிரபு. அவருடைய உள்ளத்தில் அச்சமும், ஆச்சரியமும், ஆக்ரோஷமும் கலந்த உணர்ச்சிகள் ஒருங்கே உதயமாகின. "சபாஷ்! கரும்பூதம், சபாஷ்! உன்னுடைய கைவரிசைகளையெல்லாம் என்னிடமா காட்டுகின்றாய்? ஊம், இந்தப் பூச்சாண்டிகளுக்கெல்லாம் பயந்து விடுகின்றவன் சுதர்சனன் அல்ல! பாஸ்கரம் பிரபுவையும் துளஸிதாஸரையும்போல் என்னையும் ஒரு கோழையென்று நினைத்துக் கொண்டு விட்டாயோ? டேய், கரும்பூதம்! சுதர்சனம் வெறும் பேச்சுக்காரனல்ல வென்பதையும், வாய்ச் சவடாலில் நம்பிக்கையற்றவனல்ல வென்பதையும் வியாழக்கிழமையன்றிரவு நீ நேரில் தெரிந்து கொள்ளுவாய். இப்பொழுது நீ செய்யத் துணிந்திருக்கும் காரியம் அற்பமானதல்லவென்பதை அறியாய்! அசாத்தியமான தென்பதும் உனக்குத் தெரிந்திருக்காது. நீ என்னையும், என்னுடைய சாமர்த்தியத்தையும் பற்றி மிகவும் தாழ்மையான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றாயென்று நம்புகின்றேன். முழுமூடனாகிய சரத் சந்திரனின் உளரல்கள் நிரம்பிய நாவல்களைப் படித்துவிட்டு அவைகளில் காணப்படும் கற்பனைக் கள்வர்களைப் போல் நடிக்க விரும்புகின்றாயோ? சபாஷ்! இந்த நடிப்பு உனக்குப் பல விடங்களில் வெற்றியைக் கொடுத்திருக்கலாம். நிழலைக் கண்டு நான்கு மைல் ஓடும். துளஸிதாஸைப் போன்ற பலர் உன்னிடம் ஏமாற்ற மடைந்திருக்கலாம்.


மூலவியாதி அடியோடு நீங்கும்

"ஹடன்ஸா"




இரத்தம் வடிதலை நிறுத்தி மூலவியாதி எந்த நிலைமையிலிருந்தாலும் குணப்படுத்துகிறது. உலகப்பிரசித்திப்பெற்ற வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டது. எல்லா ஆஸ்பத்திரிகளிலும் உபயோகிப்பது. மூலம் பௌத்திரம் வியாதிகளுக்கு பத்திரமும் சீக்கிரமுமான நிவாரணி. ஆபரேஷன் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

ஸ்டாகிஸ்ட்டுகள் :

தாதா & கம்பெனி, 52, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

ஸ்தாபிதம் 1910

உத்திரவாதமுள்ளது. 800 ரூபா மதிப்புள்ளது.

22 காரட் ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்



விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பெனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினால், செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ. 6-8--0; டை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ. 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 4-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ 3-8-0; கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ. 3-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ. 2-8-0; கழுத்துச் செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0; கல்மாலை ரூ. 3-0-0. டாலருடன் ரூ. 3-8-0. வி. பி. சார்ஜ் வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனபஜார்ரோடு, மதருஸ்.

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.



ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம் 125,6600 ஜனங்கள் போற்றுவது பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சந்தான அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல். யந்திரம் 1 க்கு ரூ 2. மாந்திரீக மருத்துவ ஆபீஸ், வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

"ZANDU"

KESARI JIVAN

THE IDEAL TONIC FOOD

SALE AGENTS DAMODER & Co. 78 CHINA BAZAAR ROAD MADRAS.



சமீபத்தில் விண்ஸர் கோமகன் ஸால்ஸ்பர்க்கிலிருந்து, மிஸஸ் ஸிம்ஸன் தங்கியுள்ள ஒரு பிரஞ்சு கிராமத்திற்குச் சென்றார். கோமகன் வெர்னியுல் என்ற ஸ்டேஷனிலிறங்கி, மோட்டார் ஏறுமுன் எடுத்த படம்.

பாட்டு

# புது வருடம்

(ஸ்ரீமான் ஆர். ஸ்ரீனிவாஸன்)

பொன்னிறத் தட்டிற் புதுமலர் கொண்டு
போகுவம் வாரீர். புனிதன் பொன்னடி
போற்றுவம் வாரீர்! பொருந்திய நலமெல்லாம்
பொங்குக மாநிலம் பொங்குக மங்கலம்
எங்கும் மெனவே ஏத்துவம் வாரீர்
வெற்றி முரசம் வியநிலம் முழங்க
முற்றிலும் பல வளம் முறைமையில் வழங்க
கற்றவர் மற்றவர் கவினுற விளங்க
அடிமை விலங்கை யறுத்துப் பேடிமை
பொடிபடத் தகர்த்துப் போகுவோம் வாரீர்
நறு மணங் கமழ் விரி நந்தன வனங்கள்
செறி தரு புள்ளினம் செழுமையிற் பாடவும்
சகமெலா மானந்தத் தாண்டவ மாடவும்
ஈச்வர வருட மின் பார்பால் மணக்கவும்
ஈச்வர வருட விதழ்விரிந் ததுவே.

ஆனால் உன் ஜம்பம் கட்டாயமாக என்னிடம் செல்லுபடியாகாது. மாதர் மறுமண சகாய சங்கத்திற்கு நன்கொடையா? ஊம், பார்ப்போம்! என்னிடமிருந்து பணம் போகின்றதா அல்லது நீ சிறைச்சாலைக்குப் போகின்றாயா யென்பது வெள்ளிக்கிழமையன்று வெட்ட வெளிச்சமாகப் புலப்பட்டு விடும்!"

என்றிவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டே சுதர்சனம் பிரபு டெலிபோனைக் கையிலெடுத்து தமது மின்சாரத் தொழிற்சாலையின் சிப்பந்தி யொருவனை யழைத்தார். சில வினாடிகளுக்கெல்லாம் டெலிபோனின் மற்றொரு புறத்திலிருந்து தாழ்மையான குரலில் பதில் வந்தது "அங்கே பேசுவது நடராஜனா?...சரி...நனது எஞ்ஜினீயர் சச்சிதானந்தர் என்ன செய்கிறார்?... உறங்குகிறாரா?" ...அட சனியனே!...சூரியன் உதயமாகி ஒரு மணி நேரமாச்சு! இன்னுமா அவர் படுக்கையை விட்டெழுந்திருக்கவில்லை?...சரி, கண்விழித்ததும் என்னுடன் பேசும்படிச் சொல்லு!" என்று சொல்லி தொழிற்சாலைப் பிணைப்பை நீக்கி விட்டு பாஸ்கரம் பிரபுவை டெலிபோனில் அழைத்தார்.

"சிலவினாடிகளுக்குள் பாஸ்கரம் பிரபு அடுத்த முனையிலிருந்து "ஹலோ, யாரது?" என்றார்.

"நான்தான்! சுதர்சனம் பேசுகிறது! ஒரு விசேஷமான செய்தியை அறிவிப்பதற்காக அழைத்தேன். ரொம்ப வேலையாக இருக்கின்றீர்களோ?" என்றார் சுதர்சனம் பிரபு.

"இல்லை! தாராளமாகப் பேசுங்கள்! என்ன சமாச்சாரம்?" என்று ஆவலுடன் வினவினார் பாஸ்கரம் பிரபு.

"நேற்றிரவு கரும்பூதம் என்ற ஒரு கொள்ளைக்காரனைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருந்தோமல்லவா? அந்தப்பேர்வழி துணிச்சலுடன் எனக்கொரு கடிதமெழுதியிருக்கின்றான்!" என்றார் சுதர்சனம்பிரபு.

"கரும்பூதமா?...கடிதமா எழுதியிருக்கின்றான்?... அட, ஓ!" என்று வியப்புடன் வினவினார் பாஸ்கரர்.

"ஆம்! இந்தச் செய்தியைக் கேட்க நீங்கள் ஆச்சர்யமடைவீர்களென்பது எனக்கு நன்றாகத் தெரியும். வருகிற வியாழக்கிழமையன்றிரவு பதினொரு மணிக்கும் பன்னிரண்டு மணிக்கு மிடையே என்னுடைய மாளிகையில் புகுந்து கொள்ளையடிக்கப் போகின்றானாம். அந்தப்பயல் இறுமாப்புடன் எச்சரிக்கை செய்திருக்கின்றான்!" என்றார் சுதர்சனம்பிரபு.

"இதை நான் எதிர்பார்த்தேன். ஆமாம், நாம் ஓட்டலில் பேசிக்கொண்டிருந்தது அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கக்கூடுமென்று நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டார் பாஸ்கரம் பிரபு.

"எப்படித் தெரிந்திருந்தால் நமக்கென்ன? அந்தப்பயல் எனக்கு எப்படி விலாசமிட்டிருக்கின்றான் தெரியுமா? ஊம் நான் அவனுடைய சகோதரனாம்! போக்கிரித்தனத்தைப் பாருங்கள்!" என்றார் சுதர்சனர்.

"அவன் ஒருவருக்கும் அஞ்சக்கூடியவனல்லவென்று நான் அப்பொழுதே உங்களிடம் சொல்லவில்லையா? துப்பறி நிபுணர் துளஸிதாஸும் சேவகர்களும் காவலிருக்கையில் என்னுடைய மாளிகையில் புகுந்து நவரத்னமாலையைக் களவாடினான் என்றால் அவனுக்கு எவ்வளவு தூரம் நெஞ்சழுத்தம் இருக்கக் கூடுமென்பதை ஊகித்துக் கொள்ளுங்களேன்!" என்றார் பாஸ்கரம் பிரபு.

"நெஞ்சழுத்தமா? ஊம், அதையும் நான் ஒரு கைபார்க்காமலா விட்டுவிடுகின்றவன்? எல்லோரிடமும் தனது கைவரிசையைக் காட்டுவதுபோல் என்னிடமும் காட்டலாமென்று நினைத்துக்கொண்டு விட்டான்போலும்! அவனை வெள்ளிக்கிழமையன்று காலை சிறைச்சாலையில் அடைத்துப் பார்க்காவிட்டால் என்னுடைய பெயர் சுதர்சனன் அல்ல! இதை நீங்கள் உறுதியாக நம்பலாம்!" என்று சபதம் கூறினார் சுதர்சனம் பிரபு.

"நண்பரே! பதட்டப்பட வேண்டாம்; ஆவேசத்தில் எதையும் பேசிவிடுவது சுலபம். வீரியத்தைக் காரியத்திலல்லவோ காட்டவேண்டும்? அவனைப் பிடித்துச் சிறையிலிட்டபின் பேசுங்கள்!" என்று சாந்தமாகக்கூறினார்பாஸ்கரம்.

"ஆம்! நான் செய்யப் போகும் ஏற்பாடுகளென்னவென்பதைத் தெரிந்துகொண்டிருந்தால் நீங்கள் இவ்வண்ணம் பேசமாட்டீர்கள்?" என்றார் சுதர்சனம் பிரபு.


"அப்படி என்ன செய்ய உத்தேசித்திருக்கின்றீர்களென்பதைத்தான் சொல்லுங்களேன் கேட்கலாம்!" என்றார் பாஸ்கரம் பிரபு.

"அதாவது, என்னுடைய வீட்டைச் சுற்றி மின்சார விசைகளையமைக்கப் போகின்றேன். அவைகளின் உதவியைக் கொண்டு கரும்பூதம் எப்பொழுது, எப்படி மாளிகையில் நுழைகின்றானென்பதையும் மாளிகைக்குள் என்னென்ன செய்கின்றானென்பதையும் எனது சொந்த அறையிலிருந்துகொண்டே சுலபமாகக் கண்டு பிடித்துவிடலாம். அதற்குப் பிறகு அவனைக் கைது செய்வது பிரமாதமென்று நினைக்கின்றீர்கள்? ஒருக்காலுமில்லை. சரி, வீணாக வாய்ப்பேச்சில்காலங்கழிப்பானேன்? வியாழக்கிழமையன்றிரவு நீங்களும் எனது மாளிகைக்கு வருவீர்களானால் அவனை நான் எப்படிச் சிறைப்படுத்துகின்றேனென்பதைப் பிரத்யக்ஷமாகவே பார்க்கலாம்!" என்றார் சுதர்சனர்.

"ஓ! கட்டாயமாக வருகிறேன். என்னுடன் துப்பறி நிபுணர் துளஸிதாஸையும், ஆசிரியர் சரத்சந்திரரையும் அழைத்துக்கொண்டு வருவதற்கு அனுமதிப்பீர்களா? ஏனெனில் கரும்பூதத்தை நேரில் பார்க்க அவர்களும் விரும்புவார்களென்பது நிச்சயம்!" என்றார் பாஸ்கரம்பிரபு.

"ஓ! தாராளமாக அழைத்து வாருங்கள். உங்கள் மூவருடைய முன்னிலையிலும் நான் கரும்பூதத்தின் கொட்டத்தை அடக்க வேண்டுமென்பது என் அவா!" என்றார் சுதர்சனம் பிரபு.

(தொடரும்)



# நவ நாகரீகம்

## பொய்யைக் காட்டும் யந்திரம்

(காசினி எழுதியது)

* * * முந்தி ஒரு தரம், 'சாஸ்திரங்களின்' முன்னேற்சியின் பயனாக, ஒருவன் சொல்வது பொய், அல்லது உண்மை என்பதைக் காட்டும் ஒரு அதிசயமான யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்களாமே? இதைப்பற்றி உனக்குத் தெரியுமா?' என்று நீ கேட்டிருந்தாயல்லவா? பதிலெழுத மறந்ததுடன், வாஸ்தவத்தைக் கூறப்போனால், இதைப்பற்றி ஒன்றும் சரியாக எனக்குத் தெரியாததே நான் இதுவரையில் உனக்கு இவ்விஷயமாக எழுதாததற்குக் காரணம் என்று வைத்துக்கொள்ளேன். நேற்று லேடி சின்னையா வீட்டில், ஒரு சிறிய திருட்டு நடந்தது. முதல் நாள் இரவு, கிளப்பில் இருந்து வீடுதிரும்பிய லேடி சின்னையா, கைப்பையை மேஜைமேல் வைத்துவிட்டு, சாப்பாட்டிற்குச் சென்றுவிட்டாள். பிறகும், அதை எடுத்து உள்ளே பீரோவில் வைக்க மறந்துவிட்டாள். கிளப்பில் சீட்டாட்ட மும்முரத்தில் காலம் சென்றது தெரியாமல், அதிக நேரம் கழித்து வீடு வந்ததே இவள் இவ்விதம் செய்ததற்குக் காரணம். மறுநாள், அதாவது நேற்று மத்தியானம் பையை எடுத்துப் பார்க்கும்பொழுது, அதில் வைத்திருந்த இரண்டு ரூபாய் மூன்று அணுக்களில், ஒரு ரூபாய் இரண்டு அணுவைக் காணவில்லை. இதைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அத்தையும், நானும் அங்கு போய்ச் சேர்ந்தோம்.

'தாயி, கோவிந்தன், நம்ம வீட்டுப் பேர்கள் இவர்களைத் தவிர வேறு யாரும் அங்கே போகவில்லை. தாயியும், கோவிந்தனும் தாங்கள் பையைக் கையால் தொடவில்லை என்று வடமலையான்மேல் ஆணை வைக்கிறார்கள். எப்படித்தான் காசு மாயமாக மறையும்?' என்று லேடி சின்னையா ஆத்திரத்துடன் கேட்டாள்.

'குழந்தைகளோ நேற்று வீட்டில் இல்லை. ஆகையால் பிள்ளை, மாட்டுப்பெண், பெண் மூன்று பேர்கள் மேல்தான் அம்மாவுக்குச் சந்தேகம். மூன்று பேரில் யார் குற்றவாளியாக இருக்கலாம்; என்று யூகிக்கிறீர்கள்? அத்தை, நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்?' என்று ஸர் சின்னையாவின் மகன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"உனக்கு எல்லாம் விளையாட்டுத்தான். வீட்டிலே இப்படி இருந்தால் என்னமாக முடியும் சொல்லுங்கோ? நேற்று இராத்திரி நான் என் உள்மேஜையின் மேல் வைத்த பையிலிருந்தே திருடுகிறது என்றால், அப்புறம் குடித்தனம் எப்படிச் செய்வது?" என்று லேடி சின்னையா எங்களிடம் முறையிட்டாள்.

'நீங்களே எதாவது செலவு செய்து விட்டீர்களோ என்னமோ? நல்ல நினைவு இருக்கிறதா?' என்றாள் என்னுடைய அத்தை.

'நினைவில்லாமல் என்ன? ஐந்து ரூபாய் நோட்டுக் கொண்டு போனேன். கிளப்புக் கட்டணம், டென்னிஸ், டிரங்கு எல்லாவற்றுக்குமாக இரண்டு ரூபாய் பதின்மூன்று அணுக்கள் கொடுத்தேன். பாக்கி கொண்டு வந்தேன், என்று கணக்கு ஒப்பித்தாள்.

'யாரோ எடுத்திருக்கிறார்கள். பொய் கண்டுபிடிக்கும் யந்திரம் ஒன்று அமெரிக்காவில் செய்திருக்கிறார்களாமே? அது இருந்தால் யார் புளுகுகிறார்கள் என்பது தெரிந்துவிடும்' என்றாள் லேடி சின்னையாவின் மகள்.

'அது என்ன யந்திரம். புதிய நாகரீகத்தில் எத்தனையோ அதிசயம் கேள்விப்படுகிறது. இவன் பொய் சொல்லுகிறான், நிஜம் சொல்லுகிறான் என்று யந்திரம் சொல்லுமா என்ன? இது எதடி அதிசயம்?' என்றாள் என் அத்தை.

'அது என்ன யந்திரம்?' என்று லேடி சின்னையாவும் கேட்டாள்.

'அத்தை சொல்வதுபோல் யந்திரம் ஒருவன் சொல்லுவது பொய், அல்லது மெய் என்று கூறாது. இது மனிதர்களுடைய மனோதத்துவத்தை ஒட்டிச் செய்யப்பட்ட யந்திரம் என்று கூறுகிறார்கள் இது மூச்சு, நாடி இவைகளைக் கணக்கு வைக்குமாம். குற்றவாளியின் மூச்சு, நாடி இவைகளின் நிதானத்திலிருந்து, பொய், அல்லது நிஜம் சொல்லுகிறான் என்பதை நிர்ணயிப்பார்களாம் என்றான் லேடி சின்னையாவின் மகன்.

'நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே?' என்றாள் லேடி சின்னையா.



சான்குனேரி ஸ்திரீகள் சங்க அங்கத்தினர்கள் மிஸஸ் திருவேங்கடம் பிள்ளைக்குப் பிரிவு உபசாரம் நடத்தியபோது எடுத்த படம்.



மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சங்கத்தினுதாவில் சென்ற 12-ந்தேதி மன்னர் முடிசூட்டுவிழாக் கொண்டாடப்பட்டது.

'என்ன அம்மா நீங்கள்! நான் தான் ஒரு பெரிய குற்றம் செய்து விட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். என் கையில் இரத்த நாடி அடிக்கும் இடத்திலும், மார்மேலும், இந்த யந்திரத்தின் ரப்பர் குழாய்களைக் கட்டுவார்கள். இது ஒரு கடிதாசியில், மூச்சு, நாடி இவைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும் என்று வைத்துக் கொள்ளுங்களேன். முதலில் சாதாரணமான சில கேள்விகள் கேட்பார்கள். பதில் சொல்லும் பொழுது நாடி நிதானமாகவே இருக்கும். திடீரென்று குற்ற சம்பந்தமான ஒரு கேள்வி கேட்கவே, என் மனதில் நான் இது விஷயமாகப் பொய் சொல்லும்பொழுது ஏற்படும் குழப்பத்தை, நாடி, மூச்சு இவைகளின் வித்தியாசத்தினுல் கண்டுபிடித்து விடுவார்கள். இதனுல், இது விஷயமாக இந்த ஆசாமி புளுகுகிருன், அல்லது இந்தத் திருடு, அல்லது கொலையைப்பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று இவன் சொல்லுவது பொய், இவனுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு என்பதைத் தெரிந்து கொள்ளுவார்களாம். இதைக் காட்டிக் குற்றவாளியை உண்மையைச் சொல்லச் சொல்லி வற்புறுத்துவார்களாம். அமெரிக்காவில்தான் இவ்வித முறைகளைக் கையாளுகிருர்கள்' என்ருன்.

'இவ்வளவுதானு? சிலர் முகத்தைப் பார்த்தே இவன் பொய் சொல்லுகிருன் என்று சொல்லிவிடுகிருர்களே, நான் என்னமோ இதுபொய் என்று சொல்லுமாக்கும் என்று நினைத்தேனே' என்ருள் அத்தை.

'அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு என்னமோ அம்மா முகத்தைப் பார்த்தால், அம்மா பொய் சொல்லுகிருர்கள் என்று தோன்றுகிறது. ஒரு ரூபாய், இரண்டு அணுக்களைக் காணும். அம்மாவோ நேற்று ஒன்பது மணிக்குத்தான் வீட்டிற்கு வந்தார்கள். நம்ம அம்மாதான் அசதியாக இருந்தாலும் கூட ஆடின மற்றவர்களுக்குமா வீட்டு நினைவே இல்லாமல் போய்விடும். எங்கேயோ சினிமாவுக்குப் போய்விட்டு, கணக்கு எழுத வேண்டுமே என்று காணவில்லை என்கிருர்கள்!' எப்படி என்ருள்.

'அம்மா, அண்ணு நேற்று சாயந்திரம் மன்னியை ஒன்னரை ரூபாய்கள் கொடுக்கும்படிக் கேட்டுக்கொண்டிருந்தான். இன்றைக்குச் சினிமாவுக்குப் போக வேண்டும், பாங்கு இன்று இல்லை என்பது மறந்து போச்சு, ஒரு ரூபாய் இரண்டு அணுவாவது கொடு என்று கேட்டுக்கொண்டிருந்தான். மன்னி, தானும் பாங்க் ஹாலிடேயைப்பற்றி மறந்து விட்டதினுல், தன்னிடமும் பணமில்லை என்று விட்டாள். இப்போ யார் எடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?' என்ருள் அவன் தங்கை.

'போரும், பெண்ணும், பிள்ளையும் இவ்வளவு கெட்டிக்காரர்களாகவா இருக்க வேண்டும்! வேலையாட்களை மிரட்டி, நிரத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை! மனேதத்துவம் பேசுகிருர்கள்! சமத்தை உடைப்பில் தான் வைக்க வேண்டும்!' என்று லேடி சின்னையா கோபித்தாள்.

பொய்யைக் கண்டு பிடிக்கும் யந்திரம் என்னது, எவ்விதம் வேலை செய்யும் என்பது இப்பொழுது புரிந்ததா? மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

* * * *




உபயோகிப்பதற்குமுன் பிடிகரும் காணுமல் அற்பமாயிருந்த கூந்தல், கேசவர்த்தினி உபயோகித்த பிறகு அபரிமிதமாய்விட்டகால், இரு கைக்கு மடங்கவில்லை கூந்தலைக் கருத்து, நீண்டு, செறிந்து வளரச் செய்வது

கேசவர்த்தினி


ஒன்றே

மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி விலை அணு 12.

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்: தென் இந்திய ரஸாயன சாலை, மயிலாப்பூர், சென்னை.

ஹாஸ்யப்பகுதி



உடனே வெங்கடாஜலபதி "சரி புத்தி வந்ததா? இந்தத் தடவை மன்னித்து விட்டேன். உன் குடும்பத்துடன் எட்டு நாளைக்குள் என் சன்னிதிக்கு........." என்று கேட்டார்.

# திருப்பதி முடி

(வி. தியாகராஜன்.)

I

"குழந்தைக்கோ வயசு மூணாகப்போறது. வியாதியும் வெக்கையும் பிடிங்கித் தின்கிறது. திருப்பதிக்குப் போய் முடியிறக்கிக்கொண்டு காணிக்கையும் செலுத்திவிட்டால் எல்லாம் சரியாய்ப் போயிடுன்னு எதித்தாத்து பாட்டி நேத்திக்குக்கூட சொன்னா. நீங்களானா ஒண்ணையும் காதிலே போட்டுக்கமாட்டேனென்கிறேள்" என்று தன் கணவனிடம் புகார் செய்தாள் சாரதா.

"சாரதா! உனக்குத் தெரியாத்துக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. மாசம் என் சம்பளம் 70 ரூபாய். ஒரு பைசாகூட பாக்கி மீரமாட்டேனென்கிறது. இந்த மாசத்திலே தான் ஏதாவது மீக்கணும்" என்றான் கோபாலன்.

"இதே மாதிரி 2 வருஷமாத் தான் சொல்லிண்டே வரேள். ஒவ்வொரு மாசமும் போயிண்டேதானிருக்கு. ஒரு மாசத்திலேயாவது பைசாகூட மீதியாகமாட்டேனென்கிறது. எங்கப்பா கிட்டேயும் சொல்லிச் சொல்லி என் வாய்க்கு வலி எடுத்துப் போச்சு. காரியம் நடப்பதாகத் தெரியவே இல்லை" என்றாள் சாரதா.

"ஏண்டி, உங்கப்பாவிடம் தான் காசு ரக்கை முளைச்சுக் கிடக்கே. செலவுக்குத் தான் வழியில்லை. உன் தம்பிக்குத் தான் பள்ளிக்கூட சம்பளம் முதல் கொண்டு நானே கொடுத்துடறேன். அவர்தான் 25 ரூபாய் செலவழிக்கப்படாதா? இல்லாவிட்டா ஒண்ணு செய். ஒரு 50 ரூபாய் நான் கேட்டதாகவும் அடுத்த மாசச் சம்பளத்திலே கொடுத்து விடுவதாகவும் அவரிடம் கேட்டு வாங்கு. பின்னாடி கொடுக்கா போது பார்த்துக்கொள்ளலாம்" என்றான் கோபாலன்.

அன்று சாயந்திரம் சாரதா தன் தகப்பனாரிடம் அவர் மாப்பிள்ளை திருப்பதிக்குப் போய் வர 50 ரூபாய் கேட்டதாகவும் அம்மாத சம்பளத்திலே திருப்பிக் கொடுப்பதாகச் சொன்னதாகவும் சொன்னாள். அவர் தன் கையில் பைசாகூட அப்போது இல்லையென்றும் ஒருவர் இரண்டு தினங்களில் 200 ரூபாய் தருவதாகச் சொல்லியிருப்பதாகவும், பணம் வந்தால் ஏதாவது கொடுப்பதாகவும் கூறினார்.

II

அன்று சாயந்திரம் கிட்டு (சாரதாவின் தம்பி) ரொம்பவும் சந்தோஷமாக சினிமாவுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தான். அவன் வாசற்படியை விட்டிறங்குகையில் சாரதா, "நாளைக்கு நான் சொன்னபடி செய்தால் இன்னொரு நாள் போக காசு தருவேன்" என்றாள். கிட்டு, "சரி" என்று சொல்லிக்கொண்டே சினிமாவுக்குச் சென்றான். ஆபீசிலிருந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்த கோபாலனுக்கு மேற்கூறிய வார்த்தைகளைக் கேட்டதிலிருந்து விஷயம் என்னவென்று ஊகிக்க எவ்வளவோ யோஜித்தும் முடியவில்லை. இரவு கிட்டு சினிமாவிலிருந்து திரும்பியதும், "ஏண்டா கிட்டு! என்ன, சினிமாவுக்காடா போனே?" என்றான்.

"நந்தனாருக்கு, அத்திம்பேரே, ரொம்ப நன்னாருக்குன்னு அக்கா காசுகொடுத்துப்போய்ப்பார்க்கச் சொன்னா" என்றான் அவன்.

"என்ன, சாரதா! தம்பிக்கு நீயே வலுவில் காசுகொடுத்து அனுப்பினாயாமே. எனக்கே ஆச்சரியமாகஇருக்கே" என்று கிண்டலாகக் கேட்டான் கோபாலன்.

"ரொம்பவும் தொந்திரவு செய்தான். நீங்க வருவதற்கு நாழிகையாயிடுத்து. அதனாலேதான் போனாப் போறது குழந்தைன்னு எட்டணாகொடுத்தனுப்பினேன்" என்று சமாதானம் சொன்னாள் சாரதா.

சாரதா சொன்ன சமாதானம் சரியானதென்று கோபாலனுக்குத் தோன்றினாலும் விஷயம் ஏதோ இல்லாமல் கிட்டுவுக்கு சாரதா எட்டணா கொடுக்கமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்.

III

மறுதினம் சனிக்கிழமை. ராமசேஷய்யர் சாரதாவின் தகப்பனார் வழக்கப்படி காலையில் ஸ்நானம் செய்துவிட்டார். பிரதி சனிக்கிழமை அவர் விரதமிருப்பது வழக்கம். அன்று வெங்கடாஜலபதி படத்துக்கு நைவேதனம் செய்துவிட்டுத்தான் சாப்பிடுவார். கோபாலன் ஸ்நானம் செய்துவிட்டு ஆபீசுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தான். ராமசேஷய்யர் வெங்கடாஜலபதிக்கு நைவேதனம் செய்துவிட்டுக் கற்பூரம் கொளுத்திக் காட்டினார். எல்லோரும் கண்ணில் ஒத்திக்கொண்டனர். திடீரென்று கிட்டு பெருமூச்சுவிட ஆரம்பிக்கவே, எல்லோருக்கும் கொஞ்சம் பீதி உண்டாயிற்று. மறு நிமிஷம், "ஆஹா! இப்படி நீங்கள் என்னைக் கவனிக்காமல் இருப்பீர்களென்று நான் நினைக்கவே இல்லையே. பார், இன்னும் ஒரு மாதத்திற்குள் உன் குடும்பத்தில் பெரிய கலகத்தை உண்டாக்குகிறேன்" என்று படபடப்புடன் கிட்டு கூறுவதற்


டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர் க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

குள் ராமசேஷய்யர் கையைப் பிசைந்து கொண்டு "என்னை இந்தத் தடவை மன்னிக்கணும், இனிமேல் இம்மாதிரி செய்யலே. நான் என்ன செய்யணும்னலும் செய்துடரேன்" என்றார்.

உடனே வெங்கடாஜலபதி, "சரி புத்தி வந்ததா? இந்தத் தடவை மன்னித்து விட்டேன். உன் குடும்பத்துடன் எட்டு நாளைக்குள் என் சன்னிதிக்கு கோடி உடுத்துக்கொண்டு வந்து சேரணும். என்ன வந்து சேருகிறாயா?" என்று கேட்டார்.

ராமசேஷய்யர் அவசர அவசரமாகச் சேருவதாகச் சொன்னார். உடனே வெங்கிடாஜலபதி மலையேறி விட்டார்.

15நிமிஷங்கள் கழித்துகிட்டு மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்தான். தனக்கு கற்பூர ஹாரத்தியைக் கண்ணில் ஒத்திக் கொண்டதும் தலை "கிரு கிரு" வென்று சுற்றியதாகவும் அதன் பின்பு என்ன நடந்தது என்பதே தெரியாதென்றும் கூறினன். கோபாலனுக்கு வெங்கிடாஜலபதி தன்னைத் தொந்திரவு செய்யவில்லையே என்ற சந்தோஷம். அதற்காக நான்கணு உண்டிக்குப் போடுவதாகவும் வேண்டிக் கொண்டான். தான்சொன்னதை ஒருவரும் காதில் போட்டுக் கொள்ளவில்லையென்றும், இனிமேல் சால்ஜாப்புச் செய்ய முடியாதென்றும் வருகிற வியாழக்கிழமை கிளம்பினல் சனிக்கிழமையன்று மொட்டை யடித்துக்கொண்டு சன்னதிக்குப் போகலாமென்றும் சொன்னாள் சாரதா.

நான்கு தினங்கள் சென்றன. ஐந்தாம்நாள் வியாழக்கிழமையன்று ராமசேஷய்யர், கோபாலன் தம்பதிகள், கிட்டு முதலியவர்கள் திருப்பதிக்குப் பிரயாணம் சென்றார்கள். சனிக்கிழமை போனுக்கு மொட்டையடித்துக்கொண்டு ராமசேஷய்யர் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு ஊருக்கு வந்து சேர்ந்தார். மலைக்குப் போய் வந்ததற்காகப் பெரிய சமாராதனையும் செய்தார். மொத்தம் சிலவு 200 ரூபாய். தான் 50 ரூபாய் கேட்டதற்குக் கொடுக்காததால்தான் 200 ரூபாய் சிலவு செய்யும்படி ஸ்வாமி செய்தார் என்றாள் சாரதா. ஆனல் ராமசேஷய்யருக்கு இப்போது சிலவு செய்த 200 ரூபாயைப் பற்றி மனதில் வருத்தமே இல்லை.

IV

மறு சனிக்கிழமை. ராமசேஷய்யர் வெளியில் சென்று விட்டார். கோபாலன் வீட்டிற்கு வருகிறான். அவன் வாசற்படியில் நின்றுகொண்டிருக்கையில் பின்வரும் சம்பாஷணை அவன் காதில் விழுந்தது.

கிட்டு:—அக்கா, "நந்தனர்" பார்த்துவிட்டு வந்து நீ சொல்லியபடியே எவ்வளவு நன்றாய் வெங்கிடாஜலபதி ஆவேசம் ஆடினேன் பார்த்தாயா?

சாரதா:—ரொம்ப நன்றாக இருந்தது. எனக்குக் கூட நிஜம்போலத்தான் தோன்றியது. உன்னிடம் சொன்னது ஞாபகமே இல்லையே! எப்படியோ காரியம் நடந்துவிட்டது.

கிட்டு:—எனக்கு சினிமாவுக்குப்போக காசு தரேன்னியே.

இந்த சமயத்தில் உள்ளே நுழைந்தான் கோபாலன்.

"சினிமாவா? பேஷ்! அக்கா காசு கொடுத்ததும், தம்பி சினிமாவுக்குப் போனதும் நன்னாப் புரிஞ்சு போச்சே! உன் வேலைதானு இது? சாரதா!நல்ல காரியம் செய்தே. வெங்கிடாஜலபதியிடம் என் தலையில் கையை வைக்கச் சொல்லாமலிருந்தாயே" என்று கூறிச் சிரித்தான் கோபாலன்.

"போனுப்போரது. நான் அப்படிச் செய்வேனு. உங்களுக்கு 50 ரூபாய் மிச்சம் செய்து கொடுத்தேன். 25 ரூபாயில் நல்ல கதர் வேஷ்டியும் கிடைச்சுப்போச்சு. எல்லாம் கிட்டுவாலே. சினிமாப் பார்க்க ஒரு எட்டணு கொடுங்கோ" என்று சிபார்சு செய்தாள் சாரதா.

"இந்தத் தடவை ஒண்ணும் விசேஷமில்லையே, என்டா கிட்டு" என்று சிரித்துக் கொண்டே எட்டணுவைக் கொடுத்தான் கோபாலன்.

* * * *


மார்புக் கோளாறுகள் ஜலதோஷம், நடம் முதலியவற்றைக் குணப்படுத்துக

திடீரான குளிர், இருமல், அல்லது சுவாசாயத்துக்குப் பல வீனமுண்டாக்கும் கடம் இவை திடீரென ஏறபட்டு நீங்கள் கஷ்டப்பட்டால் உடனே பெப்ஸ் உட்கொள்ளுங்கள்.

பெப்ஸ மாத்திரைகளில் ஒன்றை வயில் போட்டதும் அதனின்றும் கிளம்பும் கிருமிநாச ஆவி நேரே சுவாசாசயத்திலுள்ளும் மார்பிலும ஊடுருவிச் சென்று, கிருமிகளை யழிக்கிறது. பெபஸ் மாத்திரைகள் எரிச்சலையடக்கி சுவாசக் குழாய்களின் அடைப்பை அகற்றுகிறது. மார்பு




நோய், காசம் முதலியவற்றிற்கு பெபஸதான நிச்சயமான நிவாரணி.

பெப்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1 வீதம் கைக்கடக்கமான சீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும். ஏஜண்டுகள்:— மெஸாஸ் தாதா & கமபெனி, பாரகடவுன் மதராஸ்.

பெப்ஸ் கிருமிநாச, சுவாச நிவாரணி:மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனுபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.



போலிகளைக்கண்டு உஷார் !!!




அமிர்தாஞ்சனம்

சகலவலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா,



வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.



கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசல்ப்

கொனேகான்

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில்,ரூ 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், புந்தர் தெரு, மதராஸ்

201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

# பரமசிவனுக்கு மூன்றாவது கண் உண்டான காரணம்

பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு மேலும் தர்மங்களைச் சொல்லுகையில் கூறியதாவது:— நாராயணராகிய கிருஷ்ண பகவான் முன்பு புத்திரனுக்காக விரதம் செய்யக்கருதி, பன்னிரண்டு வருஷம் தீக்ஷை எடுத்துக்கொண்டார். அப்பொழுது அவரைப் பார்க்கப்பல மஹரிஷிகள் வந்தனர். கிருஷ்ணனும் அவர்களையெல்லாம் வரவேற்றுத் தக்கபடி உபசரித்தார். அந்தச் சமயத்தில் பல அரிய சம்பாஷணைகள் நடந்தன. கிருஷ்ணனே விரதம் எடுத்துக்கொண்டதில் ரிஷிகள் ஆச்சரியமடைந்தனர். அதுபற்றித் தான் பரமசிவனுடைய மகிமை வெளிப்பட்டது. உமாதேவியானவள் மஹாதேவரிடம் சில சந்தேகங்களைக் கேட்டாள். பரமசிவ
அதற்கெல்லாம் பதிலளித்
. வர்ணாஸ்ரம தர்மங்களும்
தர்மங்களும், ராஜதர்மங்
ம், கிருஹஸ்த தர்மங்
ம், புண்ணிய பாப கர்மங்
ன் முடிவுகளும், பலன்
நம், பலவகைத் தேவ
ஹஸ்யங்களும், தானதர்மங்
ளைப்பற்றிய விதிகளும் அந்த
ம்பாஷணத்தில் சொல்லப்
ட்டன. உமாதேவி தானுக
வ ஸ்திரீ தர்மத்தை ஈஸ்வரருக்குச் சொன்னாள்.

ரிஷிகள் வாஸுதேவர் முதலானோர் உட்கார்ந்துகொண்டிருக்கையில் கிருஷ்ணபகவானுடையமுகத்திலிருந்து திடீரென காண்பதற்கு மிக ஆச்சரியகரமான அக்னி புறப்பட்டது. முகத்திலிருந்து புறப்பட்ட அந்த அக்னியினால் எதிரிலிருந்த பெரியதொரு மலை எரிக்கப்பட்டது. மறுபடியும் குளிர்ந்த மனமுள்ள கிருஷ்ணனால் பார்க்கப்பட்டவுடன் அந்த மலை பொலிவுடன் விளங்கிற்று. இதைக் கண்ட ரிஷிகள் மிகுந்த ஆச்சரியப்பட்டு அதன் காரணத்தை வினவினார்கள். கிருஷ்ணன் அதற்குப் பதில் சொன்னதாவது:—

உலகங்களுக்கு வேண்டாதவனும், உலகங்களை அழிப்பவனுமான சம்பரனென்னும் ஒரு அசுரன் இப்போது இருந்தான். உலகங்களின் நன்மையைக் கருதி அவன் என்னால்
ட்டப்பட்டான். என்னு
டைய புத்திரனால் அவனுக்கு
தம் நேரிடுவதைக் கண்
டன். அதனால் விரதங்கள்
ய்து எனக்குச் சம
ன புத்திரனை உண்டாக்க
னைத்துப் புத்திரனைச் சிருஷ்
பதற்காகவே விரதம் எடுத்துக்கொண்டேன். இவ்வாறு விரதம் செய்யும் என்னுடைய தவத்தின் உக்கிரத்தினால் என் தேகத்திலிருக்கும் ஸாரமாகிய உஷ்ணமானது அக்னியாகி வெளிப்பட்டது. அது வெளிப்பட்டவுடன் பிரம்மதேவரைப் பார்க்கப் போயிற்று. அனங்கனென்னப்படும் மன்மதன் பிரம்மதேவரால் எனக்குப் புத்திரனாகச் செய்யப்பட்டான். அவன் அவரால் அனுப்பப்பட்டுத் திரும்பவும் என்னிடத்திற்கே வந்தான். இவ்வாறு என் விஷ்ணு சக்தியானது என் முகத்திலிருந்து வெளிப்பட்டது. அந்த அக்னியினால் மலை அழிக்கப்பட்டது. நான் மறுபடியும் குளிர்ந்த எண்ணத்துடன் பார்த்தவுடன் மலையும் முன் போல ஆயிற்று.

இதைச் சொல்லி முடித்தவுடன் நாரதர் அனைவருடைய வேண்டுகோளுக்கிணங்கப் பார்வதி பரமேஸ்வரர்களுக்குள் நடந்தசம்பாஷணையைச்சொன்னார். அவர் கூறியதாவது:— முன்னொரு காலத்தில் சிவபெருமான் கைலாயத்திலிருக்கையில் பார்வதி தேவியானவள் விளையாட்டாகப் பின்னால் வந்து தனது கைகளினால் அவரது இரு கண்களையும் பொத்தினாள். இவ்வாறு கண்கள் மறைக்கப்பட்டபோது உலகத்திற்கு இருளுண்டாயிற்று. சந்திர சூரியர்களும் நக்ஷத்திரங்களும் மறைந்தும் வேதாத்யயனமும் யாகமுமில்லாமலும் இருள் மூடியும் விசனமும் பயமும் நடுக்கமும் உண்டாகிவிட்டன. அப்போது பரமசிவனுடைய நெற்றியில் நீண்டதும் பன்னிரண்டு சூரியர்களைப்போலப் பிரகாசிப்பதும் ஒளியினால் உலகங்களைப் பிரகாசிக்கச் செய்வதுமான மூன்றாவது கண் உண்டாயிற்று. பிரளயகாலாக்னிக்குச் சமமான அந்த அக்னியினால் ஹிமயமலை எரிந்துபோயிற்று. பார்வதியும் கைகளை எடுத்துவிட்டு மிகுந்த ஆச்சரியமடைந்தாள். உடனே தன் பிதாவான ஹிமய மலையை நினைத்துப் பரமசிவன் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள். அவரும் குளிர்ந்த பார்வையுடன் பார்க்க ஹிமயமலை முன்போலாயிற்று.

இதைப் பார்த்த உமாதேவி, நெற்றியில் மூன்றாவது கண் உண்டான காரணத்தையும், ஹிமயமலை முதலில் எரிக்கப்பட்டுப் பிறகு முன்போலானதையும் சொல்லும்படிப் பரமேஸ்வரரைக் கேட்க அவர் சொன்னதாவது:— மூன்று லோகங்களும் விஷ்ணுவுக்கு எப்படியோ அப்படியே எனக்கும் உள்பட்டவை. நான் காப்பவன் என்று தெரிந்துகொள். நல்லதாகட்டும் கெட்டதாகட்டும்; என்னை எப்போது தொடுகின்றனவோ அப்போது இவ்வுலகமனைத்தும் நல்லதாகவும் கெட்டதாகவும் ஆகிவிடும். நீ சிறுமியாதலால் ரகஸ்யம் தெரியாமல் என் கண்களை மூடினாய். அதனால் சந்திர சூரியர்கள் இல்லாமல் உலகம் பயத்தினால் கலங்கிப் போயிற்று. உலகத்தில் சூரியனில்லாமல் இருள் மூடினபோது உலகத்தை ரக்ஷிப்பதற்கு மூன்றாவது கண்ணை நான் உண்டுபண்ணினேன். அதிலிருந்து ஏற்பட்ட தாபத்தினால் மலை எரிந்தது. பிறகு உன் துயரத்தை நீக்கக் குளிர்ந்த பார்வையால் பார்த்தபோது மலை முன்போல ஆயிற்று.

(தொடரும்)



"கொஞ்சம் கல்ஸானு சாப்பிட்ட பிறகு எனது ஊக்கமும், சக்தியும் அதிகரித்திருக்கிறது,"

என்கிறார் கல்ஸானு உபயோகித்த ஒருவர்.

திட ஆரோக்யத்தை அநுபவியுங்கள்

வாலிபம் அழிந்துவிட்டால்கூட நீங்கள் வலுவுடனிருந்து, வாழ்க்கை இன்பங்களை அநுபவிக்கலாம். கல்ஸானு சாப்பிடுங்கள்; ஆரோக்கியமாக விருப்பீர்கள்; தசைகளின் வலு குறையாது; நல்ல ஊக்கம் பிறக்கும்; எலும்புகளும், பற்களும் உரமாக விருக்கும். கல்ஸானு நடுத்தர வயதில் ஏற்படக்கூடிய நோய்களைத் தடுக்கிறது. இது மருந்தல்ல; ஆகாரம்; உங்கள் தேகத்திற்கு அவசியமான ஜீவ சத்துக்கள் நிறைந்தது. உடனே உபயோகிக்கத் தவறவேண்டாம்.

"சதா தலைவலி; டாக்டர் கல்ஸானுசாப்பிடச்சொன்னார். கொஞ்சம் சாப்பிட்டதிலேயே புத்துயிர்பெற்றேன். இப்பொழுது 7 வருஷமாக உபயோகிக்கிறேன். தலைவலி என்பதே கிடையாது."

என்கிறார் கல்ஸானு உபயோகித்த இன்னொருவர்.

தாமதம் வேண்டாம்; உங்கள் அருகிலுள்ள மருந்து வியாபாரி அல்லது கடையிலிருந்து ஒரு புட்டி கல்ஸானு மாத்திரைகளை வாங்கிக் கொள்ளுங்கள்.

யௌவனத்தைப் பாதுகாக்க

Kalzana

மேலான ஆரோக்யமூட்டும் உலோக உணவு.

கைபடாமல் தயாராவது.

# மேடைப் பிரசங்கிகள்

"மூலம்"

ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு சுவாமி கட்டத்தில் தேசிய கூட்டம் நடைபெறும் என்கின்ற ஒரு சிறு துண்டுவிளம்பரத்தை சிறுவன் ஒருவன் என் கையில் நீட்டி விட்டான். நானும் எனது நண்பருடன் (அசல் நாட்டுப் புறத்து பேர்வழி) சுவாமி கட்டமென்கின்ற கடற்கரைக்குச் சென்றேம். கூட்டம் ஏராளமாக யிருந்தது. வெள்ளையர்கள் தான் குறிப்பிட்டகாலத்தில் (வருஷம், மாதம், தேதி மணி, விஞடி) தவருமல் ஆரம்பிப்பார்களென்று, எங்கள் பக்கத்தில் வீற்றிருந்த சில 'பிரபுக்கள்' பேசவாரம்பித்தனர். ஆனல்அந்தக் காலம் மலையேறி விட்டதென்பதை ஆங்கிலம் படித்த நமது நவ நாகரீக பட்டதாரிகள் உணருகிருர்களில்லை என்று எனது நண்பன் மெதுவாக என் காதில் ஓதினன்.

அங்கு கூடியிருந்த ஜனங்களில் முக்கால் பாகத்திற்கு மேல் ஆங்கிலம் படித்தவர்கள் தான் என்பது அவர்களின் நடை உடைகளிலிருந்து நன்கு தெரிந்தது. எங்கள் பக்கத்திலிருந்த நண்பர்களிருவர் முகங்களிலும், மூக்கு தண்டுக்கு அப்புறம் ஒரு இம்மியளவு கூட வளரவிடாமலும், மேல் நோக்கி செல்லாமலும் நின்ற ஆட்டுவால் மீசையானது இவர்கள் கல்வியின் குணத்தை நன்கு விளக்கின. இவர்கள் கையில் கட்டியிருந்த "ரிஸ்ட் வாச்சு" மணி ஆகிவிட்டதென்று கூறுவது போலிருந்தது.

நாகரீக நண்பர்:—இந்த இண்டியன்ஸுகளுக்கு சொன்ன சொன்ன டயத்திலே கூட்டத்தை நடத்த வேண்டுமென்று தெரிகிறதில்லை சார்!

மற்ற நண்பர்:—ஆமாம் சார்! இதனல் தான் இம்மாதிரி கூட்டங்களுக்கு வருகிறதே கிடையாது. இது தான் சார் இண்டியன் "பங்க்சுவாலிடி".

என் பக்கத்திலிருந்த நாட்டுப்புறத்து அசடுவுக்கு கோபம் வந்துவிட்டது. மெதுவாக சம்பாஷணைகள் நடைபெற்றவர்களிடம் நகர்ந்து, ஐயா! தங்கள் தகப்பனர் பெயரென்னமோ? என்று இழுத்தார். ஒருவர் ராமமூர்த்தி என்ருர்; மற்றவர் பாலசுந்திரம் என்ருர்.

அடே அப்பா! என்று பெருமூச்சுவிட்டு விட்டு, இப்பெல்லாம் வெள்ளைக்காரன் நமது இந்துக்களின் பெயர்களைக்கூட காப்பியடிக்க ஆரம்பித்து விட்டான்களே என்ருர் என் நண்பர் நாட்டுப்புறத்து ஆசாமி. இச்சொல்லைக் கேட்டதும் நாகரீக நண்பர்களின். உட்சிறுத்துப் பூமி மட்டத்திலிருந்து சுமார் 2 அடி உயரம் யாதொரு இயந்திரத்தின் உதவியின்றி மேலே கிளம்பி நல்ல வேளையாக கீழே இறங்கிவிட்டது. பெருமூச்சும் சற்று அடங்கிற்று. எங்களை யாரென்று நினைத்தீரென்று கோபத்துடன் என் நண்பனை நாகரீக நண்பர்கள் கேட்டார்கள். எனக்கு மாத்திரம் பயமாகத்தானிருந்தது.

என் நண்பன் இம்மிரட்டலுக்கு மிரளாமல் மன்னிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, சகோதரர்களே, தாங்கள், நமது கால நிர்ணயத்தைப் பழித்தீர்களே. தங்கள் வம்சம் என்னவென்பதற்காகவே கேட்டேன். வெள்ளைக்காரன் "பங்க்சுவாலிடி" மாத்திரம் என்ன வாழ்கிறதோ? ஒன்பது வருஷத்தில் சாக வேண்டிய மாண்டேகு சீர்திருத்தம் 15 வருஷ காலம் வளர்த்தினர்கள். 1930-ம் ஆண்டில் ஸ்வராஜ்யம் தருகிறேன் என்று கூறி வருஷம் ஏழு ஆயிற்று. எப்பரல் 1-ந்தேதி சட்டசபை கூட்டுகிறேன் என்று சொல்லி மாதம் இரண்டாயிற்று. இதையெல்லாம் எந்த "பங்க்சுவாலிடி"யில் கூறுவீர்கள். நமது "பங்க்சுவாலிடி"யெல்லாம் கால் மணி தான் முன்னே பின்னே யிருக்குமென்பதை தாங்கள் உணராமற் போனதற்காக மிகவும் வருந்துகிறேன் என்று கூறி மூக்கைச் சிந்தி பாக்கெட்டில் கைகுட்டை மூலமாகப் போட்டுக்கொண்டார்.

* * * *

மணி ஏழேகாலாயிற்று. யாரோ ஒரு நண்பர் மேடை மீதேறி நின்ருர். என் கண்கள் உள்பட எல்லாருடைய கண்களும் மேடையை நோக்கின. காதுகளும் நிமிர்ந்து நின்றன. "வந்தேமாதரம்" என்ருர் மேடைமீது நின்றிருந்தவர். ஜனங்களும் 'வந்தேமாதரம்' என்று கோடையிடிபோல் கர்ஜித்தார்கள். அன்று கேட்ட கர்ஜனை இன்று வரையில் என் காதில் ரீங்கார சப்தமிட்டுக்கொண்டு தானிருக்கிறது. அடுத்தபடி தேசிய கீதம் பாட ஆரம்பித்தார். அந்தப்பாட்டை கேட்ட உடன் எனக்கு உண்டான திகிலைக் கூறமுடியாது. எனது மனைவி மக்களின் ஞாபகந் தான் என் முன் தோன்றியதேயன்றி அங்கு கூடியிருந்த மகாஜனங்களோ, பாடகரோ விளக்கோ ஒன்றுமே தோன்றவில்லை. இதற்குக் காரணம் நான் கண்களை இறுக மூடிக் கொண்டதேயன்றி வேறல்ல. இவ்வளவு தூரம் என்னைப் பய


## 1000 ரூபாய் கஜானு பைகள்.

சர்க்கார் கஜானுக்களிலிருந்து நாம் பெறும் தொகைகளை வெள்ளி நாணயங்களாகப் பெற்றுக்கொள்ளும்போது, அவைகள் சர்க்கார் முத்திரை தரிக்கப்பட்ட பைகளில் கொடுக்கப்பட்டால் அவைகளை எண்ணவோ அல்லது பரிசோதித்துப் பார்க்கவோ அவசியமிராது. ஏனென்ருல், எண்ணிக்கை குறையாமலும், நாணயங்கள் பழுதற்றவைகளாயுமிருப்பது நிச்சயம். அவ்வாறே ஸ்டேன்ஸ்"T. S. & Co., Ltd." முத்திரை போடப்பட்ட துணிப்பைகளில் காப்பிக்கொட்டை வாங்குவீர்களேயானல் முதல்தரமான அசல் நீலகிரிச் சரக்கையே பெறுவீர்கள். இதர சாமான்யமான காப்பிக் கொட்டையால் இந்தப்பைகள் நிறப்பப்படுவதில்லை. சாயமேற்றின காப்பியில் நாங்கள் வியாபாரம் செய்வதுமில்லை. 3, 5, 7 பவுன் பைகளில் கிடைக்கும்.

பைகளின் பேரிலுள்ள

S & Co.

என்கிற வியாபாரக் குறியையும் கவனித்து வாங்கவும். போலிச் சரக்குகளை ஒப்புக்கொள்ளாதீர்கள்.

டி. ஸ்டேன்ஸ் & கோ.,
கோயமுத்தூர்.



அத்தர் அரசன்

## ஆட்டோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)




சுகந்த வாசனையைத் தரும் அரிய மலர்கள விருந்து தயாரிக்கப்படுவது. 2 அணு ஸ்டாம்பனுப்பினல் சாம்பில் கிடைக்கும். இதையே உபயோகியுங்கள்.

விலை:—¼ அவுன்ஸ் புட்டி ரூ. 1 4; 1 டிராம் புட்டி 12 அணு; வி. பி. சார்ஜ் தனி.

மொத்த ஏஜண்டுகள்:
The Anglo Indian Drug & Chemical Co BOMBAY, 2



ஆராய்ச்சி பூர்வமான

## நவீன மருந்துகள்

மேத்தாவ்ஸ் ஜுரமிக்சர்—8 அணு. ஆயிரக்கணக்கானவர்கள் நற்சாட்சி தந்திருக்கின்றனர்; பல்லாயிரக் கணக்கானவர்கள் ஆரோக்கிய ஐச்வர்யத்தைப் பெற்று வாழ்கின்றனர்.

கே. எஸ். மேத்தா & கம்பெனி,
பிரபல மருந்து வியாபாரிகள்,
234, சைனு பஜார், மதராஸ்.



உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்

## நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத்தூளை

TRADE MARK

உபயோகியுங்கள்.

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர். மூகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.

முறுத்திய பாட்டு என்ன என்பதை நீங்கள் அறியவேண்டாமா? ஆனால் நீங்களும் என்னைப்போல கண்களை மூடிக்கொள்ளாமல் சற்று தைரியமாகவே கேளுங்கள். "தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாட்டுதான் என்னை இவ்வளவு தூரம் பயமுறுத்தியது. அன்று முழுவதும் நான் பட்டினி. கடற்கரைக்குப்போனால் வாயு பக்ஷணம் சாப்பிட்டுக் கொண்டே பிரசங்கம் கேட்கலாமென்று போனவனிடம் ஜகத்தை அழிக்கிறேன் என்று பாடினால் என் மனைவி மக்களின் கதியென்ன? சாப்பாடுமில்லாமல் உயிரோடிருந்தால் போது மென்று பரம திருப்தியடையும் என் போலொத்தவர்கள் ஜகம் அழிந்த பின் எங்கு போய் தங்குவது. ஒரு சமயம் வேறு ஜகத்துக்குப் போனால் அங்கும் இந்தப் பாடகர் வந்துதொலைந்தால் என்ன செய்வதென்ற கவலையுடனிருக்கும் பொழுது, நாகரீக நண்பரிலொருவர் "பூஷட்டப்" பாட்டு எழுதினவர் முதல் பாடுகிறவர் உள்பட எல்லாரும் ஏகாதசி விரதங்கள் தான் என்று ஒரு வேட்டு போட்டார். நானும் எனது நண்பரும் தைரியமாக கண்ணைத் திறந்துவிட்டு வாயை மூடிக்கொண்டோம்.

மேடையில் நின்று பாடிய நண்பர் ஒரு வழியாக பாட்டை முடித்துவிட்டு இக்கூட்டத்திற்கு கபர்தார் கேசவலு நாயுடு தலைமை வகிப்பாரென்று சொன்னதும் எல்லாரும் கைதட்டினார்கள். (நானும் எனது நண்பரும் கை தட்டி கலகம் செய்த குற்றத்திற்கு ஆளாகிவிடுவோமோ வென்று பயந்திருந்தோம்) கம்பீரமாக கேசவலு நாயுடு மேடை மீது நின்று பேசவாரம்பித்தார்.

நாம் இங்கு எதற்காகக் கூடியிருக்கிறோமென்றால் சகோதரர்களே! கூடியசீக்கிரம் வரப்போகும் தேர்தலிலே சகோதரர்களே! காங்கிரஸ் அங்கத்தினர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும் சகோதரர்களே! அங்கு போனால் நாங்கள் பட்டம் பதவிக்கு ஆசைப்படமாட்டோமென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். சகோதரர்களே! முன்பு காங்கிரஸ் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பியதால் தான் சகோதரர்களே! நாங்கள் சர்க்காரை உறுதிமொழி கேட்டோம் சகோதரர்களே! அவ்வுறுதிமொழிபெறாமல் இந்தசர்க்காரை விடப்போவதில்லை. சகோதரர்களே! ஆகவே சகோதரர்களே! இம்முறை காங்கிரஸுக்கு ஒரு ஸ்தானம்கூட தோற்றுப்போகாமல் நீங்களெல்லாம் கண்ணும் கருத்துமாக நின்று பாடுபட வேண்டும். சகோதரர்களே! ஆகவே சகோதரர்களே! யென கால் மணி நேரம்வரை பேசிப் பிறகு ஸ்ரீபெருமாள் முதலியார் பேசுவாரென்று கூறிவிட்டு நாற்காலியில் அமர்ந்தார்.

ஸ்ரீ பெருமாள்முதலியார் அக்கிராசனாதிபதி அவர்களே! கனவான்களே! எனக்கு முன்பு பேசிய தலைவர் அவர்கள் கூறியதையெல்லாம் நீங்கள் நன்ருக அறிவீர்கள்! எங்களை நீங்கள் கார்ப்பொரேஷனுக்கு தேர்ந்தெடுத்தனுப்பிய பின்பு நாங்கள் செய்தவேலைகளையெல்லாம் நீங்கள் நன்ருக அறிவீர்கள்! சிலடிவிஷன்களில்வசதிகள் போதுமானபடியில்லையென்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்பதை நீங்கள் அறிவீர்கள்! இதற்காக நாஙகள்பாடுபடுவதையும் நீங்கள் அறிவீர்கள்! தேசவிடுதலைக்காக காங்கிரஸ் ஒன்றுதவிரவேறு ஸ்தாபனங்கள் கிடையாதென்பதையும் நீங்கள் நன்ருகஅறிவீர்கள்! தேசத்துக்கு விரோதமாக பினமிமந்திரிசபையை கவர்னர் நியமித்ததையும் நீங்கள் அறிவீர்கள்! ஆகவே இநத தேர்தலில் எல்லாரும் காங்கிரஸ்காரரையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதையும் நீங்கள் நன்ருக அறிவீர்கள்!

(இச்சமயத்தில் ஒரு போக்கிரிப்பயல் நாங்கள்தான் எல்லாவற்றையும் நன்ருக அறிவோமே நீங்கள் ஏன் பேசவேண்டும்) என்று கேட்டவுடன் முதலியார்கடையைகட்டிக் கொண்டு மூட்டையுடன் கிழே இறங்கிவிட்டார். அடுத்தபடி தலைவர் யாரையோ பேசும்படி அழைத்தார். யாரோ ஒரு நண்பர் தலைவரிடம் சென்று தான் கொஞ்சம் அவசரமாகப் போகவேண்டியிருப்பதால் தன்னைப் பேச அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க தலைவரும் சகோதரர்களே உங்களையெல்லாம் ஆனந்தக் கடலில் மூழ்குவிக்கப் போகும் ஸ்ரீ ரத்னநாயுடு பேசுவார் சகோதரர்களே! என்று கூறினார்.

எனது பக்கத்திலமர்ந்திருந்த என் நண்பனிடம் உனக்கு நீந்தத் தெரியுமாவென்று கேட்டேன். அவன் ஆம்! என்று தலையை அசைத்தான். நான் தேமேன்னு உட்கார்ந்திருந்தாக்க ஒருத்தர் ஜகத்தை அழித்து விடுகிறேன் என்ருர். இப்பொழுது கடலில் வீழ்த்தி விடுகிறேன் என்கிருர். ஆகாரமில்லாமற் போனாலும் பாதகமில்லை, கோவில் எருதுகள் மாதிரி சுற்றித் திரியலாமென்றால்கூட இந்தப் பாவிகள் நம்மை படாதபாடுபடுத்தி விடுவார்கள்போலிருக்கே...... இதற்குள் ரத்ன நாயுடு பேச மேடைக்கு வந்துவிட்டார்.

முதலில் மூக்குக் கண்ணாடியைச் சற்றுமுன்னால் இழுத்துக் கொண்டார். வாயை திறந்து நாக்கைத் தொங்கவிட்டார், இரு கைகளையும் பாக்கெட்டில்




கவர்ன்மெண்ட் பட்டு நெசவுத் தொழிற்சாலை,
மைசூர்.

ஸ்டாக்கிஸ்டுகள் :
1. மதராஸ் ஸ்வதேசி எம்போரியம் லிமிடெட்., 1/17 A, மவுண்ட் ரோட், மதராஸ்.
2. மேஸர்ஸ் ஜயந்மல் மிஸ்ரிலால் & கம்பெனி., கம்மர்ஷியல் ரோட், உதகமண்டலம்.
3. மைசூர்ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ் இலாகா 4,சவுத்பரேட்,பெஙகளுர்.

ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை
"பாலக்ஸ்" பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்
14, ஸசா அவுஸ், மாடுங்கா, பம்பாய்




10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்
(செயின் 1-க்கு)
ரூபாய் 5-0-0
எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.
(கேட்லாக் இலவசம்)
R. S. பிரகாசம் & Co,
அலாய் கோல்டு ஜூவல்லர்ஸ்.
187, சைனு பஜார் ரோட், ஜி. டி.
மதறாஸ்.

போட்டார். ஏதாவது கொடுப்பதற்காக பாக் கெட்டில் கையைப் போட் டார் என்றுதான் நான் கூட நினைத்தேன். நல்ல வேளை யாக பாக்கெட்டில் கைகுட் டைத் தவிர வேறொன்று மில்லையென்று தெரிந்தது. இனி மேல் இவர் பேசும் கூட்டங் களில் முகம் பார்க்கும் கண் ணாடியொன்று இவருக்கு முன் னால் நிறுத்திவிட்டால் ஜனங் கல் சிரித்தவண்ணமாகவே ருப்பார்கள். ஒருமுறை மகா னங்கள் முதல் தலைவர் வரைச் சுற்றிப் பார்த்துவிட்டு தலைவர் அவர்களே! சகோதரர் களே! இது தேர்தல் கூட்டம் ணேன். வெறுங் கூட்டமல் லப்பா இது.நம்மோடு போட்டி போடுகிறாரே இவர் யாருண்ணு ங்களுக்குத் தெரியுமாண் ணன். இவர் தாம்பா! சர்க்கார் உத்தியோகத்திலிருந்து கொழுத்த சம்பளம் வாங்கி சாப்பிட்டு வந்தவருண்ணேன். இவரைதான் வேலைக்கு லாயக் கில்லையேண்ணு பென்ஷன் கொடுத்தனுப்பிவிட்டா னையப்பா, திரும்ப இவர் ம்ப்பா இந்தமாதிரி வேலைக்கெல்லாம் வரணும் ணன். இப்போ நடந்த தர்தலிலேதான் பட்ட பட்ட நிலைகளெல்லாம் எகிரிபூட்டு தயப்பா! இந்த ஆசாமி பன்சனைவாங்கிச் சாப்பிட்டுக் ணு பேசாமலிருக்கக்கூடா ண்ணேன். இந்த ஆசாமி கு தெரிஞ்சவங்கே யாராவது க்கிருந்தா தயவு செய்து ாய் "உங்களுக்கு இந்த லையெல்லாம் வேண்டா ம்ன்று சொல்லிவிடுங்" காண்ணேன்......... என்று வசரமாகப் போகவேண்டிய ஒரு மணிநேரத்திற்குள் க்கமாகப் பேசி முடித்து ட்டார்.

அடுத்தபடி பரமானந்தர் பசியதாவது: (இவர் பேச் சைபடித்து முடிக்கும்வரையில் யவுசெய்து மூச்சுகீச்சு ஒன் ம் விடாமல்படிக்கும்படி கட்டுக் கொள்ளுகிறேன்) கோதரர்களே! தலைவர் அவர்களே! நமது தெய்வப் லமைவாய்ந்த திருவள்ளுவ னர் என்ன கூறிப்போன ன்றால் "தோன்றிற் புக ாடு தோன்றுக அஃதிலார் ான்றலிற் தோன்றாமை ன்று" என்று சொன்னார். கையினால் சகோதரர்களே! ன் என்ன சொல்லுகிறேன் ன்றால் நாம் இம்மாதிரியாக நக்கக் கூடாது. தாய் நாடு தலை பெற ஒவ்வொருவரும் ழைக்கவேண்டும். சைமன் ஷென் வந்த காலத்திலே து அரிய பெரிய காலஞ் ன்ற லாலா லஜபதிராய் கமிஷனை பகிஷ்கரித்த த்திலே போலீஸ்காரன் பால் அடித்த காலத்திலே ன சொன்னார் என்றால் தரர்களே! இந்நாட்டில் த மக்களின் விடுதலையை நாடி ஆயிரக்கணக்கான மக் கள் என்னைப் பின் பற்றுவார் கள் என்று சொன்னார். ஆகை யினால் சகோதரர்களே! அவ ரைப் பின்பற்றி நாம் நடக்க வேண்டுமென்பதை இவ்வரிய சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நான் ஞாபகமூட்டுகிறேன். சகோதரர்களே! எனக்குப் பின்பு இன்னும் பல தலை வர்கள் பேசப்போவதால் உங்களுடைய அரிய காலத்தை நான் கொள்ளை கொள்ள விரும்ப வில்லை. ஆகையினால் சகோதரர் களே! சுவாமி விவேகானந்தர் 1893 வருஷத்திலே, அமேரிக்கா தேசத்திலே,சிகாகோ நகரத்திலே அவர்:சென்றிருந்த காலத்திலே என்ன சொன்னாரென்ப தை தங்களுக்கு இவ்வரிய சந் தர்ப்பத்தில் நான் ஞாபகமூட் டுகின்றேன். இவ்வரிய சந்தர் ப்பத்தில் தங்களுக்கு நான் என்ன ஞாபக மூட்டுகிறேன் என்றால் தேச சேவை செய்ய முன்வர வேண்டுமென கேட் டுக் கொண்டு எனது சிற்றுரை யை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன் வந்தேமாத ரம்."

மாமூலாக வந்தனோபசாரம் கூறும் நண்பர் அடுத்தபடி யாரும் அழையா முன்பே மேடைக்கு வந்து விட்டார். தலைவர் அவர்களே, அன்பர் கலே என்று கூறிவிட்டு, அங்கு வீற்றிருந்த தலைவர் முதல் வீட்டிலிருக்கும் தலைவர் வரை புகழ் மாலையைச் சொரி ந்த பின்பே விஷயத்திற்கு வந் தார். அன்பர்கலே நாம் இந்தி யாவில் அடிமைகலாக பிறந் தோம். ஆனால் அடிமைகலாக இறக்கமாட்டோமென்கின்ற உறுதி வேண்டும். அன்பர்கலே ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் "ஜாப் ஹன்டர்ஸ்" என்பதாக இந்த உத்தியோக வேட்கை கஷிக்காரரை ஆகையால் அவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது அன்பர்கலே ஒட்டு என்பது நமக்குக் கிடைத் திருக்கும் ஓர் வரப்பிரசாதம். இதைச் சரியாக நாம் உப யோகிக்க வேண்டும். அன் பர்கலே காங்கிரஸ் மகா சபை யொன்றுதான் சர்வ சங்க பரித்தியாகம் செய்தது. அன்பர்கலே! ஆகவே அன்பர் கலே! இத்துடன் எனது வந்த னத்தைச் செலுத்திவிட்டு கூட் டத்தைக் கலைத்து விடுகிறேன் அன்பர்கலே!

* * * *

தாங்களும் என்னைப்போல் அதிகப்பிரசங்கியென்று பெய ரெடுக்க வேண்டுமென்றால் இதைப்பன்முறை படித்து உரு போடுங்கள். பிரசங்கிகளின் பெயர்கள் பத்திரிகைகளில் வருவதுபோல் உங்கள் பெய ரும் வரலாம். இல்லாவிடில் உங்கள் மனைவிமார்கள்கூட உங்கள் பெயரை பகிரங்கமா கச் சொல்ல வெட்கப்படுவாள்.

* * * *


**CONTRACEPTIVE.**

'Rahat' is an unfailing contraceptive, a three-day use of which insures lifelong relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order.

Price Rs. **5-8**; foreign, Shillings **10**.

**Vilasvati**: excellent retentive tonic pills.

Price Re. **1-6**, foreign, Shillings **2-6**.

**Rajvati**: recontinues stopped menses, regularising monthly course too.

Price Rs. **5-8**, foreign, Shillings **10**.

**Dr. S. H. KHAN,**

S. Tapia Mansion, Erskin Road, BOMBAY 3.




# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந் தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடி தலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5;: தபால் சேலவு 9அ.

எல்லா முதல்தர கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

ஹோல் ஸேல் ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.





# ஆயுள் விருத்தியைக் கொடுப்பது

# இந்திய தேத்தண்ணீர்



நீண்ட ஆயுளைப் பெறச் சுகாதாரமும் நற்பழக்கங்களும் எவ்வளவு முக்கியமாமோ அவ்வளவு ஆகாராதிகளும் முக்கியமாகும். அதி உஷ்ணப் பிரதேசமான இந்தியாவில் நீண்ட ஆயுளைக் கொடுக்கக் கூடிய பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். ஆயுசு விருத்திக்கு இந்திய தேயிலை பானம் மிகவும் சிறந்ததென்று தேயிலை உபயோகிக்கும் தேசங்களிலுள்ள எல்லா அனுபவஸ்தர்களும் கண்டிருக்கிறார்களென்றால் நாமும் ஏன் இந்நற்பழக்கத்தை மேற்கொள்ளக் கூடாது.

## தேத்தண்ணீர் செய்யும் முறை

சுத்தமான ஜலத்தைக் கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமொன்றை யெடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒருஸ்பூன் நல்ல இந்திய தேயிலையைப் போட்டுக் கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிக் கட்டி பாலும் சர்க்கரையும் சேர்த்துக்கொள்ளவும்.

ஆரோக்கியமானது —

## இந்திய தேயிலை பானம்

IK. 14N.

Regd. No. 2514




## சிசுவின் வளர்ச்சி—தாயின் கடமை

சிசுவின் வளர்ச்சி தாய்க்குப் பிரதானமானது; சிசு பிறந்த பிறகு மட்டுமென்றி கர்ப்பத்தில் கூட வளர ஆரம்பிக்கின்றது. தாயின் உணவே சிசுவின் போஷாக்கு; எனவே சிசுக்கள் ஆரோக்கியமாக விருக்க வேண்டுமானல் ஸ்திரீகள் கர்ப்பமாக விருக்கையிலும், பிரசவித்த பின்னரும் நல்ல புஷ்டியைத் தரக்கூடிய ஆகாரங்களைச் சாப்பிடவேண்டும். இதற்கு எடுத்தது மாலர்ஸ் A.B.C.D. விட்டமின் புட் (ஆகாரம்) மூலைப்பாலைப் பெருக்குவதில் சிறந்தது.



**MOLLER'S**
**A.B.C.D. VITAMIN FOOD**

புட்டி 1-க்கு ரூ. 2—4.

## தொண்டைப் புண், உள் நாக்கு வளர்ச்சி நிவர்த்தி



விரைவான, சுலபமான நிவர்த்தி இதுதான். எந்தவிதமான தொண்டைக் கோளாறையும் போக்குவது அயர்டன்ஸ் அயோடைஸ்ட் த்ரோட் டாப்லெட்ஸ் தான். இங்கிலாந்தைச் சேர்ந்த தொண்டை வியாதி நிபுணர் ஒருவரின் முறைப்படி தயாரிக்கப்படுவது.




**AYRTON'S IODISED THROAT TABLETS**

50 மாத்திரைகளடங்கிய புட்டி 1-க்கு ரூ. 1.

வெட்டை நோயால் கஷ்டப்படுகிறவர்களில் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு உண்மை ரட்சகனாக விளங்குவது கொபெய்ஸான். இக்கொடிய வியாதியை அகற்றவல்லது இதுவே. வெட்டை நோய் மட்டுமல்லாமல் எல்லா விதமான மூத்திரக் கோளாறுகளையும் போக்கும்.

**COPAISAN**

**The most effective remedy for urinary venereal disease**

புட்டி 1-க்கு ரூ. 3.

# MAROTONE

## மெலிவு நீக்கி வலுவூட்டும் இணையற்ற டானிக்



ஜீவசக்திக் குறைவினல் வருந்த வேண்டாம்; வாழ்வில் சங்கடம் கொள்ள வேண்டாம்; ஒரு புட்டி **மரோடோன்** டானிக் வாங்கிச் சாப்பிடுங்கள். நீங்கள் இழந்துள்ள வலுவு ஆக்கனையும் திருப்பித் தரும். மெலிவுற்றவர்கள் நாளடைவில் வஜ்ர சரீரிகளாக மாறி வாழ்க்கை இன்பத்தைப் பருகுவர்.



**Marotone—The World's Greatest Tonic**

சிறிய புட்டி ரூ. 1—8; பெரிய புட்டி ரூ. 2—8.

இவை எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். ஆர்டருடன் 25% தொகை அட்வான்சாக கிடைக்க வேண்டும்.

மொத்த ஏஜண்டுகள்: **சவுத். இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.**


Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press Mount Road, Madras-*Editor* C. R. Srinivasan, B.A.